

கல்கி
KALKI ஏப்ரல் 22, 1956
4



இந்தியாவில் கல்யாணப் பழக்க வழக்கங்கள் தொன்றுதொட்டு இன்றுவரை மாறுதல் ஏதும் அடையாமல் வந்துள்ளன. நேர்த்தியான புத்தாடைகளும், நன்மலர்களும், இன்னிசையுமாக அன்றுபோல் இன்றும் குளவும் திருமணமானது நம்மைத் துடிக்கும் ஆவலுடன் எதிர்பார்க்க வைக்கும் நிகழ்ச்சியாகவும், வருங்காலத்தில் நினைந்து இன்புறக் கூடிய வைபவமாகவும் விளங்குகிறது.

இன்ப மயமான இத்தகைய மரபிலே இன்றியமையாத அம்சமாகத் திகழ்வது திருமண விருந்து. இதையறிந்து, பூரண சிரத்தையுடன் தத்தம் விருந்தினர்களை உபசரிக்க விரும்பும் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள், வளங் கொழிக்கும் வசீகர வகையறாக்களாக விதவிதமான தின்பண்டங்கள் தயாரிப்பதற்காக இக்காலத்தில் டால்டா பிராண்ட் வனஸ்பதியை நாடுகின்றனர். தரத்திலும், தூய்மையிலும் அது நம்பிக்கைக்குப் பாத்திரமானது என்பது அவர்களுக்குத் தெரியும். மேலும் டால்டா வாங்குவதற்கு சிக்கனமாக இருப்பது வெளிப்படை.

எங்கெங்குமே டால்டா, விருந்திலும், கோலாகலத்திலும் வரவேற்கத் தக்க பங்குகொண்டு திருமண வைபவத்தையே சோபிக்கச் செய்கிறது.

டால்டா பிராண்ட் வனஸ்பதி



மலர் 15
இதழ் 35

கல்கி

பொருளடக்கம்

துன்முகி ௵ சித்திரை 10

22 ஏப்ரல் 1956

"கல்கி"யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

"இரயில்வேக்கள் உங்களை மலை வாசஸ்தலங்களுக்கு எடுத்துச் செல்லட்டும்"

மலைவாசஸ்தலங்களுக்கு இப்போது ரயிலில் மூன்றாவது வகுப்பில் கூட மிகவும் குறைந்த செலவில் பிரயாணம் செய்யலாம். கீழே குறித்துள்ள 15 மலை வாசஸ்தலங்களுக்கும் நீங்கள் ரிட்டர்ன் டிக்கட் வாங்கிக் கொண்டு பிரயாணம் செய்யலாம். — ஒரு தடவை போவதற்கு என்ன கட்டணமோ அதைவிட அரைப் பங்குக் கட்டணம்தான் அதிகம், ரிட்டர்ன் டிக்கட் வாங்குவதற்கு.

ஸ்ரீநகருக்கு முதல் வகுப்பிலும் இரண்டாம் வகுப்பிலும் செல்ல ரிட்டர்ன் டிக்கட் கட்டணம் ஒரு தடவை போவதற்கு என்னவோ அதைவிட மூன்றில் ஒரு பங்கு அதிகம். — ரயில் – விமானம் மார்க்கத்தில் செல்ல டிக்கட் கிடைக்கும்.

3 வயதிலிருந்து 12 வயதிற்குட்பட்ட உங்கள் குழந்தைகளுக்கு இந்த விசேஷ சலுகைக் கட்டணத்தில் பாதிக் கட்டணம் செலுத்தினால் போதும்.

இந்தச் சலுகைக் கட்டணப் பிரயாணம் 1956 அக்டோபர் 31-ந் தேதிக்குள் என்று வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம். திரும்பி வரும் பயணம் புறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டும்.

சலுகைக் கட்டணங்கள் மூலம் செல்லக்கூடிய ஸ்டேஷன்களாவன :

பதன்கோட் (ஸ்ரீநகருக்கு)
சிம்லா
ஸோலன்
தரம்பூர் (பஞ்சாப்)
டேராடூன்
காத்கோடம் (நைனிடாலுக்கு)
டார்ஜிலிங்
குர்ஸியாங்
ஷில்லாங் அவுட் ஏஜன்ஸி

ஆபு (ஆபு மலைக்கு)
பிபாரியா
உதகமண்டலம்
குனூர்
கொடைக்கானல் ரோடு
(கொடைக்கானல் அவுட் ஏஜன்ஸி உள்பட)
கோத்தகிரி அவுட் ஏஜன்ஸி
(மேட்டுப்பாளையம் ஸ்டேஷனிலிருந்து

பூரா விவரங்களும் சமீபத்திலுள்ள ஸ்டேஷன் மாஸ்டரிடம் கிடைக்கும்

இந்திய ரயில்வேக்கள்

(பிரசுரம்: தக்ஷிண ரயில்வே)



மலர் 15
இதழ் 38

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — *பாரதியார்*

துன்முகி ௵
சித்திரை ௴ 10

புனர் அமைப்புத் துயரம்

இதைப் பற்றிப் புத்தாண்டு மலரில் எழுதப் பிரியப் படவில்லை. இப்போது எழுதுகிறோம். இந்த ராஜ்யம் குறுகிப் போய்ச் சிறப்பிழந்த நிலையை அடைவது வெறும் அரசியல் நிகழ்ச்சி மட்டும்அல்ல; எல்லா விதத்திலும் மக்களின் தாழ்வுக்குக் காரணம் ஆகும். அரசாட்சி நிர்வாகம் இங்கே யார் நடத்தினாலும் சரி, டில்லியில் யார் நடத்தினாலும் சரி, மக்களுடைய தொழில் நிலையும் வியாபார நிலையும், பொதுவாக வாழ்க்கை நிலையும்—இவைதான் தாழ்வுக்கும் உயர் வாழ்வுக்கும் அறிகுறி. நம்முடைய அரசியல் போக்குக்கு என்றுமே வழிகாட்டியாக இருந்துவரும் ராஜாஜி அவர்கள், சென்னை சட்ட சபையில் எச்சரிக்கை செய்தார்: "தெற்கே உள்ள ராஜ்யங்களைச் சிறு சிறு ராஜ்யங்களாகப் பிரித்துவைப்பது தெற்கே வசிக்கும் பாரதமக்களின் முன்னேற்றத்துக்குத் தடையாகும்" என்று கூசாமல் விவரித்து விளக்கினார். அமிருதஸரஸ் காங்கிரஸில் செய்த தீர்மானம் இந்த நாட்டுக்கு நன்மை தரும். அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு பிரசாரம் செய்யாமல் ஏன் சும்மா இருந்து விட்டார்கள் என்று தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களையும் அரசியல் பொறுப்பாளிகளையும் பற்றித் தமது துயரத்தை வெளியிட்டார். பாஷாவாரிப் பிரிவினையை ராஜாஜி விரும்பவில்லை. காடும், மலையும், ஆறும், போக்குவரத்தும், வியாபாரமும், வாழ்க்கையும், விவசாயமும், தென்னாட்டு மக்களை ஒன்றுபடுத்தி விட்ட இந்தக் காலத்தில், எல்லா ஜில்லாக்களிலும் எல்லா மொழியினரும் கலந்து வாழ வேண்டிய இந்த நாட்களில், மொழிப் பிரிவினைகளினால் விவாகங்கள் கூடத் தடைபடாமல் நடந்து வரும் இந்தக் காலத்தில், இந்த மொழி வாரி பேத உணர்ச்சிக்குப் புத்துயிர் தருவதை ராஜாஜி விரும்பவில்லை.

நம்முடைய அரசியல் போக்கில் சேர விரும்பாமல் வெகு தூரத்தில் நிற்கும் டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியாரும் இந்த பாஷாவாரிப் பிரிவினைத் திட்டம் மலை போன்ற பிழை என்று பகிரங்கமாகச் சொன்னார். ஏன்? இமயமலை போன்ற பெரும் பிழை என்றே சொன்னார். இதை அவர் ஒப்புக் கொண்ட பிறகு, அவர் சொன்ன மற்ற விஷயங்களில் எது சரி, எது சரியல்ல என்பதை ஆராய வேண்டியதில்லை. பெரும் பிழை மலைபோன்ற பிழை என்று எடுத்துக் காட்டிய ஒரு பிழையை ஏன் செய்ய வேண்டும்; செய்ய விட வேண்டும்? தெற்கே ஒரு பெரிய ராஜ்யம் வேண்டும் என்று நாம் சொன்னால் பாரதப் பிரதம மந்திரி ஒப்புக் கொள்வதற்கு மிகவும் ஆசைப்பட்டுக் காத்துக் கொண்டிருக்கிறார்.

மொழிப் பற்றுகளைப் பற்றியே ஆராய்வோம். மொழியின் வளர்ச்சி அரசியல் நிர்வாகத்தினால் எந்த விதத்திலும் தடைபடாது. வரி வசூலுக்கும் ஜமாபந்திக்கும் கோர்ட் விசாரணைக்கும் எந்த ஒரு பாஷையைப் பயன்படுத்தினாலும் இலக்கியத்துக்கு என்ன லாபம் அல்லது என்ன நஷ்டம்? தமிழைக் காதலிப்பவர்கள் பயம் ஏதும் இல்லாமல் தமிழை வளர்க்கலாம். இப்போது அமுலில் இருக்கும் ராஜ்ய எல்லை ஏற்பாடுகளினால் ஒரு குந்தகமும் உண்டாகவில்லை, நிச்சயம். இது உண்மையல்லவென்றால் பாரதக் குடியாட்சியின் கீழ் பல் வேறு பாஷைகள் வளர்ச்சி பெறும் என்று எப்படி நாம் நம்ப முடியும்? ஒரு ஆட்சியின் கீழ், பல மொழிகள் அவற்றைப் பேசும் மக்களின் பக்தியினாலும் அன்பினாலும் நிச்சயமாக வளர முடியும். மொழியைப் பற்றி நாம் வைத்திருக்கும் அன்பைக் கொண்டு இந்த அரசியல் பிரச்னையைக் குழப்பிக் கொண்டு பொருளாதார நிலைக்கு அபாயம் தருவித்துக் கொள்ளவே கூடாது. மக்களின் நிலைமை

உயர்ந்தால் புலமையும் வளரும், இலக்கியமும் வளரும். லக்ஷக்கணக்கான மக்கள் பேசியும் எழுதியும் வரும் மொழிக்கு அரசாட்சி முறையினால் எந்தக் குறையும் நேர்ந்து விடாது. இலக்கிய சிருஷ்டிகளை அனுபவிக்கவும் ஆக்கவும் மக்கள் இருந்து வந்தால் இலக்கியம் தானாக வளரும்.

ஏப்ரல் மீ 14உ மதுரையில் நிதி மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் தக்ஷிண பிரதேச யோசனையை ஆதரித்தும் அதை எதிர்க்கிற கட்சிகளைத் தாக்கியும் மிக ஆவேசத்தோடு பேசினார். இது சரியே. ஆயினும் நிதி மந்திரியின் பேச்சில் ஒரு விஷயம் விளக்கம் ஆகவில்லை. கேரளமும் தமிழ் நாடும் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய ராஜ்யமாக அமைவது நாட்டுக்கு நன்மை தரும் என்றும், இன்னும் அதுவே தம்முடைய அபிப்பிராயம் என்றும் சொல்லி, அந்த யோசனையை விட்டு விட்டதற்குக் காரணம், காங்கிரஸில் பிளவு இல்லாமலிருப்பதற்காகவே என்றார். இதுதான் நமக்கு விளங்கவில்லை. காங்கிரஸானது அமிருதசரஸில் கூடிய மகாநாட்டில் ஏகோபித்துத் தீர்மானம் செய்த ஒரு விஷயம் காங்கிரஸில் எப்படிப் பிளவை உண்டாக்கும்! அகில இந்திய காங்கிரஸில் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டதை நிறைவேற்றுவது தென்னாட்டுக் காங்கிரஸ்காரர்களின் கடமையல்லவா! அந்தத் தீர்மானத்தை நிராகரிக்கும் யோசனையைத் தமிழ் நாட்டுக் காங்கிரஸ்காரர்களிடையில் எங்கே எவ்விதத்தில் இவர் கண்டார்! கண்டாலும் அந்தத் தவறான மனப்பான்மையை விலக்கும் முயற்சியை எடுப்பது காங்கிரஸ் தலைவர்களுக்கு முடியாத காரியமாயிருந்ததா! நேருஜியும் காங்கிரஸும் கோரிய ஒரு திட்டத்தை எதிர்த்து நிற்கும் மனப்பான்மையை தமிழ் நாட்டுக் காங்கிரஸ் எவ்வாறு எப்போது பெற்று விட்டது! தமிழ் நாட்டில் எந்தக் கட்சிகளைத் திரு சுப்பிரமணியம் இப்போது உக்கிரமாகத் தாக்கிப் பேசுகிறாரோ, அந்தத் திருக்கூட்டங்கள்தானே கேரளத்துடன் ஒரு ராஜ்யமாகச் சேர வேண்டாம் என்று சொன்னது! அந்தத் திருக்கூட்டத்தாரைச் சாந்திபடுத்துவதற்காகவும் அவர்களுடைய தொடர்பைச் சம்பாதித்துக் கொள்வதற்கும் தானே அமிருதசரஸ் காங்கிரஸ் தீர்மானத்தைப் பேசாமல் கூசாமல் நிராகரித்தது! திராவிடக் கழகத்துக்கும் காங்கிரஸுக்கும் பிளவு ஏற்படக்கூடாது என்று இப்படிச் செய்தது! திரு சுப்பிரமணியம் அவர்களின் பேச்சானது தம் ஒருவரைப் பொறுத்தமட்டில் சொல்லுகிற சமாதானமாக இருந்தால் பொருள் இருக்கலாம். அதாவது மந்திரி சபையில் பிளவு இல்லாமலிருப்பதற்காகக் காங்கிரஸ் தீர்மானத்தை விட்டு விட்டோம் என்பது அவருடைய கருத்தானால் அதற்குப் பொருளுண்டு. காங்கிரஸின் கௌரவத்தையும் ஒற்றுமையையும் காப்பாற்றுவதற்காக இப்படிச் செய்தேன் என்று அவர் சொல்லுவது நமக்கு விளங்கவில்லை.

விஷ மருந்து வேண்டாம்!

இந்தியா முழுவதும் பட்ஜெட்டுகள் தயாராகி விட்டன. எல்லா ராஜ்யங்களும் வரவுக்கு மேல் ஏராளமான அளவில் செலவு செய்யத் திட்டம் போட்டிருக்கின்றன. மத்திய அரசாங்கமும் அதைப் போலவே பெரிய பற்றுக்குறை பட்ஜெட்டாகவே போட்டு விட்டது. எல்லாம் பல நூறு கோடிக் கணக்கில்! பெருத்த அளவில் அச்சடித்த பணம் மக்களிடை சுற்றிச் சுழல்வதற்கு வழியாகும். விலைவாசிகள் விஷம் போல் ஏறும்.

விலைவாசியைப் பற்றிப் புகார் சொல்லும் போது, இதற்கு நல்ல மருந்து தேடி வருவதாகச் சமாதானம் கூறப்படுகிறது. எந்த மருந்தாவது செய்யலாம், ஆனால் தேவியின் அருளால் 'கன்ட்ரோல்' மட்டும் வராமலிருக்க வேண்டும். அது வந்து விட்டால் அரிசியும் பருப்பும் எல்லாப் பொருள்களும் துணி வகைகளும் மறைந்து ஒளிந்து கொள்ளும். ஏழைகள் மறுபடியும் கஷ்டத்துக்கு உள்ளாகி விடுவார்கள். அணைகளும், ஏரிகளும், தொழில் ஆலைகளும் இன்னும் பல ஆகாயக் கோட்டைகளும் கட்டி முடிவதற்குள் யாருக்காக இவையெல்லாம் செய்கிறோமோ அந்த மக்கள் அதுவரை பிழைத்திருப்பார்களோ என்பதே சந்தேகம்.

மற்றொரு மருந்து சொல்லி வருகிறார்கள். அமெரிக்காவிலிருந்து பண்டங்கள் வருமாம். பயன்பட்டுத் தீர்ந்து போகும் பண்ட வகைகள் இறக்குமதியாகுமாம். இவற்றுக்கு மக்கள் பணத்தைச் செலவு செய்து விடலாம். பிறகு உள்நாட்டிலே அச்சடித்த பணத்துக்கு வழி செய்து விட்டால் அவசியமான பண்டங்களின் விலை ஏறாது என்பது உத்தேசம். இது தவறான விஷப் பரீட்சையாகும். சிக்கனத்துக்குப் பதில் வீண் செலவு செய்யும் பழக்கத்துக்கு வழி கோலுவதாகும்.

தற்போது பிரிட்டனில் இந்தப் பழக்கம் ஏற்பட்டதாகவும், அதைக் குறைக்க வேண்டியது அவசியம் என்றும் பிரிட்டிஷ் பொருளாதார மேதாவிகள் சொல்லி வருகிறார்கள்.

அந்தப் பிழையான முறையை நாம் பின்பற்றுவது தவறாகும். அது அமெரிக்காவுக்குப் பயன்படுமே யொழிய நமக்கு நலம் தராது.

அட்டைப்படம்

அமர தாரா

ரங்கதுரையின் உள்ளத்தில் இந்துமதி கனவிலும் நனவிலும் தோன்றி அவனை அல்லல் படுத்துகிறாள். அவனுக்கு உணவு செல்லவில்லை; உறக்கம் கொள்ளவில்லை. சுலோசனா கொடுக்கும் இனிய குளிர் பானங்களெல்லாம் கூடக் கசக்கின்றன. இந்தக் காட்சியை ஓவியர் மணியம் இந்த இதழ் அட்டையில் எழிலோவியமாக வழங்கியிருக்கிறார்.

என்ன சேதி?

முஸ்லிம் பிரமுகரின் முதிர்ந்த அனுபவம்

சென்னைக் கவர்னர் பதவி உள்படப் பல உயர் பதவிகளை வகித்துப் பழுத்த அனுபவம் வாய்ந்த சர் மூகமது உஸ்மான் இந்த நெருக்கடியான சமயத்தில் காஷ்மீர் பிரச்னை பற்றித் தமது கருத்தைத் தைரியமாகக் கூற முன்வந்தது மிகவும் பாராட்டத் தக்கதாகும். காஷ்மீர் சம்பந்தமாக நேருஜி அனுஷ்டிக்க முற்பட்டுள்ள கொள்கையை இந்திய முஸ்லிம்கள் ஆதரிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார். தற்போது காஷ்மீரில் நிலவி வரும் குழப்பமான நிலையில் அங்கு சர்வஜன வாக்கு எடுப்பு முறையைக் கையாளுவது சூதாட்டத்துக்கு ஒப்பாகும் என்றும் சர் உஸ்மான் குறிப்பிட்டிருக்கிறார். இந்தியாவில் உள்ள முஸ்லிம்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், மேற்படி சூதாட்டத்துக்கு உடன்படக் கூடாது என்பதும் அந்த முஸ்லிம் பிரமுகரின் கருத்தாகும்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் கட்டும் நல்லுறவும் ஏற்படுவதற்குரிய மூன்று அரிய யோசனைகளை சர் உஸ்மான் எடுத்துக் கூறி யிருக்கிறார்.

1. இந்தியா – பாகிஸ்தான் எல்லைத் தகராறுகளைச் சமாதானமாகவே தீர்த்துக் கொள்ள வேண்டும். 2. கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள ஹிந்துக்களுக்குப் பூரண பாதுகாப்பு அளிப்பதன் மூலம், அங்கிருந்து அவர்கள் வெளியேற்றத்தைத் தடுக்க வேண்டும். 3. பாகிஸ்தான் பத்திரிகைகள், இந்தியாவுக்கு விரோதமாகச் செய்து வரும் துவேஷப் பிரசாரத்தை உடனடியாக நிறுத்திவிட வேண்டும்.

காஷ்மீர் விஷயமாக நேருஜி சர்க்காரின் கொள்கை அப்பழுக்கற்றது என்பதையே ஸ்ரீ உஸ்மானின் அறிக்கை உறுதிப்படுத்துகிறது. அவர் தமது அறிக்கையில், இந்தியாவில் வாழும் சகல முஸ்லிம்களுக்கும் ஜவாஹர்லால் நேருவைக் காட்டிலும் சிறந்த நண்பர் வேறு யாருமில்லை என்று கூறியிருப்பதைச் சென்னை ராஜ்யத்தில் உள்ள முஸ்லிம் லீக் பக்தர்கள் உன்னிப் பார்க்க வேண்டும் என்பது நமது ஆர்வமாகும். முதிர்ந்த அனுபவமும் அரசியல் ஞானமும் பெற்ற இந்தப் பிரமுகர் உற்ற சமயத்தில் கூறியுள்ள அருமையான யோசனைகளை வரவேற்கிறோம்.

புனிதத் திருப்பணி


அஸ்திவாரம் பலமாயிருந்தால்தான் கட்டடம் அசையாது நிலைத்து நிற்கும். அதைப் போலவே சர்க்கார் இயந்திரம் செவ்வனே இயங்குவதற்கு அஸ்திவாரமாக விளங்குகிறவர்கள் கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள். அந்த அடிப்படை உத்தியோகஸ்தர்கள் திறமையாகப் பணி புரிவதற்கு அவர்கள் வாழ்க்கை திருப்தியுடன் அமைந்தால்தானே இயலும்? அதற்காக அவர்கள் ஒற்றுமையுடன் சங்கம் நிறுவித் தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்தப் பாடுபட்டுவருகிறார்கள்.

சென்னை நகர கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள் தங்கள் சங்கக் கட்டட நிதிக்காக ஏப்ரல் மாதம் 22-ந்தேதி நாடகக் கலையினால் முத்தமிழையும் வளர்த்து வரும் திரு டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகத்தை நடத்த முன் வந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டின் சரித்திரத்தில் மகோன்னதமாக விளங்கும் சோழப் பேரரசன் 'ராஜ ராஜ சோழ'னின் நாடகத்தைத் திருவல்லிக்கேணி கலாமண்டபத்தில் கலைஞர்கள் நடிக்கப் போகிறார்கள். இந்நாடகத்துக்குச் சென்னை மக்கள் திரளாக விஜயம் செய்து, அஸ்திவார உத்தியோகஸ்தர்களின் புனிதத் திருப்பணிக்கு உதவி செய்வதுடன், அருமையான பண்பு நிறைந்த நாடகத்தைக் கண்டு களித்த ஆனந்தத்தையும் அடைவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

சம்பள உயர்வு

இந்திய சர்க்காரின் அஸ்திவார உத்தியோகஸ்தர்களான மூன்றாவது டிவிஷன் குமாஸ்தாக்களுக்கு ஐந்து ரூபாய் சம்பள உயர்வும் ரயிலில் குறைந்த கட்டணச் சலுகையும் அளிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இதற்கு முன் ஐம்பத்தைந்து ரூபாயாக இருந்த அவர்கள் சம்பளம் இப்போது அறுபது ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இதனால் குமாஸ்தாக்களின் பொருளாதார நிலையில் பெரும் மாறுதல் நிகழ்ந்து அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிடப் போவதில்லை. ஆனாலும் ஏழைக் குமாஸ்தாக்கள் விஷயத்தில் நமது சுதந்திர சர்க்காருக்கு அனுதாபம் உண்டு என்பதை இது நன்கு வெளிப்படுத்துகிறது. உயர்வு என்னவோ சிறு தொகைதான்; ஐந்து ரூபாய்தான். என்றாலும் சர்க்காருக்கு இதனால் மாதம் ஒன்றுக்கு ஒரு கோடியே ஐந்து லட்சம் ரூபாய் செலவினத்தில் கூடுகிறது.

நவீன ஒலிபெருக்கி!



ருஷ்யத் தலைவர்கள் ஆரம்பித்து வைத்த ஸ்டாலின் தூஷணைக்கு உலக நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டு கட்சிகள் அனைத்தும் ஒத்துப்பாடியிருக்கின்றன.

இங்கே சென்னை ராஜ்யத்திலும் என்.ஜி.ஓ. என்று கூறப்படும் அலுவலக நிர்வாக உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். நீண்ட காலமாகத் தங்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று ராஜ்ய சர்க்காரிடம் முறையிட்டு வருகிறார்கள். குமாஸ்தாக்களின் குடும்பம் வரவரப் பெருகிவருகிறது. பண்டங்களின் விலைவாசியும் வர வர உயர்ந்து வருகிறது. இந்த நிலையைச் சமாளிக்கச் சம்பள உயர்வு அவசியம் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. மத்திய சர்க்கார் குமாஸ்தாக்களின் சம்பள விகிதத்துக்கும் ராஜ்ய சர்க்கார் குமாஸ்தாக்களின் சம்பள விகிதத்துக்கும் கணிசமான வித்தியாசமிருக்கிறது. மத்திய சர்க்கார் விகிதத்தில் தங்கள் சம்பளத்தையும் உயர்த்த வேண்டும் என்று இங்குள்ள குமாஸ்தாக்கள் கேட்பது தர்ம நியாயமான கோரிக்கையாகும். சர்க்காரின் நிதி நிலைமை சரியில்லை என்று கூறும் சமாதானம் குமாஸ்தாக்களின் நிதி நிலைமையைச் சீர்திருத்தாது. எனவே, அதை ஒரு காரணமாகச் சொல்லிக் காலம் கடத்திக்கொண்டிருப்பது சரியில்லை.

நிலப் பிரச்னை

பாரத தேசம் பெரும்பாலும் விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொண்ட நாடு. முன் காலத்தில் எல்லாம் நிலம் படைத்தவர்கள் தாங்களே நிலத்துக்குச் சென்று மேற்பார்வை பார்த்து வந்தனர். நிலத்திலிருந்து வரும் வருமானம் குறைந்து விட்டதன் காரணமாக, நிலம்படைத்தவர் வேறு வேலைகளைத் தேடிக் கொண்டு நகர்ப்புறங்களில் செல்ல வேண்டியதாகி விட்டது. வேறு காரணங்களாலும், நிலம் படைத்தவர்கள், தங்கள் வயல்களை மேற்பார்வை பார்க்கும் பொறுப்பைப் பிறரிடம் ஒப்படைத்தார்கள். அதிலிருந்து வரும் வருமானத்தில் ஒரு பகுதி தங்களுக்குக் கிடைக்கும்படி செய்து 'குத்தகைதார்' என்று ஒரு வர்க்கத்தினரை உண்டாக்கினர். குத்தகைதார் என்பவர்

பெரும்பாலும் நிலத்தில் உழுது பயிரிட்டு வேலை செய்பவர் அல்ல. இவரும் கூலிக்கு ஆளை வைத்து வேலை வாங்குபவர்தான்.

ஆனால் நிலத்தில் உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்பதாக ஒரு கருத்து பரவி வரும் இந்நாளில் நிலத்தில் வேலை செய்பவருக்கும் நிலத்தின் சொந்தக்காரனுக்கும் இடையில் வரும் இந்தக் குத்தகைக்காரருக்குச் சாதகமாக இருக்கிறது, இப்பொழுது சர்க்கார் வட்டாரங்களில் பேசப்பட்டு வரும் நிலக் குத்தகைக்காரர் சட்டம்.

உற்பத்தி செய்பவர் ஒருவர் இருக்க உபயோகப் படுத்துபவர் இன்னொருவர். இவர்கள் இருவருக்கும் நடுவிலிருக்கும் தரகு வியாபாரி இருந்த இடத்தில் இருந்தபடி லாபம் சம்பாதிப்பதைக் கண்டிருக்கிறோம். அப்படியானால் ஏறத்தாழ தரகுக்காரரை ஒத்த நிலையிலிருக்கும் குத்தகைதாரருக்குச் சர்வ பாதுகாப்புகளும் அளித்து அவரை நிலத்தின் சொந்தக்காரரை விடவும், நிலத்தில் உழுபவனை விடவும் அதிக உரிமைகளும் செல்வாக்கும் அளித்துச் சர்வாதிகாரம் செய்ய ஒரு சட்டம் இயற்றப்படுவதின் அவசியம் என்ன வென்று தெரியவில்லை.

சின்னச் சின்ன பட்டதாரர்கள்தான் எங்கும் அதிகம். சுமார் 30 லட்சம் ஜனத்தொகையுள்ள திருச்சி ஜில்லாவில் 14 லட்சம் பேர் சிறிய பட்டதாரர்கள். இவர்கள் நல்ல தேச பக்தியும், தியாக சிந்தையும், காலத்தோடு ஒட்டிய கருத்துக்களும் கொண்டவர்கள். நியாயமான எந்த நிலச் சீர்திருத்தத்தையும் வரவேற்கத் தயாராய் இருக்கிறார்கள். நில வருமானத்தில் 60 சதவிகிதம் நிலத்தில் பாடுபடுபவனுக்கு விட்டுக் கொடுக்கவும் தயாராய் இருக்கிறார்கள். இன்னும் சிலர் தங்கள் நிலத்தில் தாங்களே உழுது பயிரிடத் தயாராய் இருக்கிறார்கள். இதற்கு எல்லாம் இடையூறாக ஒரு சட்டம் செய்யப்படுவது 14 லட்சம் விவசாயக் குடும்பத்தினர் மனத்தை நோகச் செய்திருக்கிறது. ஒரு நாட்டின் ஜனத்தொகையில் சரிபாதிப் பேரின் மனக் கசப்பையும் வெறுப்பையும் வளர்த்துக் கொள்ளும் வகையில் சர்க்கார் ஒரு சட்டம் இயற்றுவது எவ்வளவு பிசகான காரியம் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

நாடகக் குழு

பம்பாய் அமெச்சூர்ஸ் நாடகக் குழுவினர் 1956-ம் வருஷத்திய நிர்வாகக் குழுவினரைச் சென்ற மார்ச்சு 31-ம் தேதி தேர்ந்தெடுத்தனர். திருவாளர்கள் பி. வி. ராஜன், எஸ். ஆர். பார்த்தசாரதி, எம். கே. மகாதேவன், எஸ். ஆர். கஸ்தூரி, ஆர்.எஸ். ராவ், வி. ஏ. ஜெயராவ், எம். எச். ராவ், பி. வி. அப்பு, ஈ. ஆர். ஆர். சாரி, எஸ். ஆர். கஸ்தூரி, ராஜாராம் ராவ், எம். வைத்தியநாதன் முதலியோர் சங்கத்தின் அலுவல்களில் பல் வேறு பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டுள்ளனர். அத்துடன் ஏப்ரல் 28ம் தேதி "தேவன்" அவர்களுடைய ஸ்ரீமான் சுதர்சனம் என்ற நாடகத்தை நடிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றனர். இந்தக் குழுவினரின் நாடகப் பணி சிறப்பதாக!

பனித்துளி

"நேருஜி சென்ற வாரம் 800 அடி உயரமுள்ள உலகிலேயே மிகப் பெரிய ஜோக் நீர்வீழ்ச்சியை முதன் முதலாகப் பார்த்துப் பரவசமானார்." —செய்தி

ஜோக் நீர் வீழ்ச்சியும் உலகிலேயே மிகப் பெரிய மனிதரான நேருஜியை அப்போதுதான் முதன் முதலாகப் பார்த்துப் பொங்கியிருக்க வேண்டும்.

★

"நேருஜிக்கு ஸ்ரீ சீதாராமசாஸ்திரி மகாபாரதத்தை அன்பளிப்பாக வழங்கினார்." —செய்தி

இந்த மாபெரும் பாரதமே நேருஜிக்குச் சொந்தமல்லவா!

★

"அமெரிக்க ஜனாதிபதி ஐஸன் ஹவரின் ரிபப்ளிக் கட்சியின் தேர்தல் சின்னம் யானை. டெமோக்ரடிக் கட்சியின் சின்னம் கழுதை. இதைச் சரியானபடி புரிந்து கொள்ளாத ஸ்பெயின் சர்வாதிகாரி ஜெனரல் பிராங்கோ குழப்பம் காரணமாக ஐஸன் ஹவருக்குக் கழுதையைப் பரிசாக அனுப்பி வைத்தார்." — செய்தி

அடாடா! கழுதையை அனுப்பி விஷயத்தைக் குட்டிச் சுவராக்கி விட்டாரே!


★

"கோவையில் சினிமாக் கொட்டகைகளில் மின்சார விசிறிகள் இயங்குவதில்லை. ஆகவே, சினிமாவுக்குச் செல்பவர்கள் எல்லோரும் கையோடு காட்டு விசிறியை எடுத்துச் செல்கின்றனர்." —செய்தி



அவர்களே சினிமா விசிறிகளாயிற்றே! அவர்களுக்கு வேறு எதற்கு விசிறி என்று விட்டு விட்டார்களோ!

தமிழ் எழுத்தாளர் மகாநாடு



தமிழ் எழுத்தாளர்கள் மகாநாடு சென்ற ஏழு எட்டு தேதிகளில் சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் மயிலாப்பூர் ரஸிகரஞ்சனி மண்டபத்தில் கல்விமந்திரி திரு சுப்பிரமணியம் மகாநாட்டைத் திறந்துவைத்தார். டி.கே.ஸி. அவர்கள் திருவுருவப் படத்தை ராஜாஜி திறந்து வைத்தார்கள். திரு சதாசிவப்பண்டாரத்தாருக்கும், திரு வை. மு. கோபாலகிருஷ்ண மாச்சாரியாருக்கும் பாராட்டு விருதுகள் வழங்கப்பட்டன. எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு மகாதேவன் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

மறுநாள் காலை ராஜாஜி மண்டபத்தில் திரு வி. ஸ. கோபாலரத்தினம் தலைமை வகிக்க, திரு ப. சம்பந்த முதலியார் நாடகக் கலையைப் பற்றிய விவாதத்தைத்தொடங்கிவைத்தார். பத்து அறிஞர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர். "நாடகக் கலை வளருவதற்கான இதயச் சூழ்நிலையையும் அதை அனுபவிப்பதற்கான ரஸிகர்களையும் உண்டாக்க வேண்டும். அப்படியானால்தான் உயர்ந்தமுறையில் நாடகம் என்ற கலை வளரும்" என்று 'கல்கி' ஆசிரியர் திரு சோமு கூறிய விஷயத்தை அப்படியே ஆமோதிப்பதாகத் தலைவர் முடிவுரையில் கூறி விவாத அரங்கை முடித்தார்.

மாலையில் கதை-கட்டுரைகள் என்னும் பொருள்பற்றி திருவாளர்கள் ம. பொ. சிவஞான கிராமணியார், ம. ப. பெரியசாமித் தூரன், பி. எஸ். ராமையா, வெங்கடாச்சாரியார், திருமதி சீதாலட்சுமி குமாரசாமி ஆகியோர் பேசினர்கள். மகாநாடு இரண்டு தினங்களும் சிறப்பாக நடைபெற உற்சாகத்துடன் உழைத்த தமிழ் எழுத்தாளர் சங்கக் காரியதரிசி திரு அழ வள்ளியப்பா அவர்களை எழுத்தாளர்கள் சார்பில் பாராட்டுகிறோம்.

1. ராஜாஜி ரஸிக மணி படத்தைத் திறந்து வைக்கிறார். 2. நாடகக் கலையைப் பற்றிய விவாதம் நடைபெறுகிறது. 3. 4. தமிழ் எழுத்தாளர் மகாநாட்டின் ஊர்வலம் மயிலாப்பூர் மாட வீதிகளில் வந்த காட்சி.

கடல் கண்ட கனவு


இரண்டாம் அத்தியாயம்

பாடும் தரங்கம்!



பாக் ஜலசந்தியில் தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் மத்தியிலே உள்ள கச்சாத் தீவைப் பற்றிச் சமீபத்தில் வெளிவந்த செய்திகளை நேயர்கள் படித்திருப்பார்கள். தெற்குக் கடலிலே நிற்கும் அந்தத் தீவு ராமநாதபுரத்தைச் சேர்ந்ததா அல்லது இலங்கை அரசாங்கத்தைச் சேர்ந்ததா என்ற கேள்வி, ஒரு பிரச்னையாகிக் குமைந்து கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்னையை எப்படிச் சிக்கல் எடுப்பது என்பது நிகழ்காலச் சம்பவங்களும், நமது நிர்வாகத் தலைவர்களின் அரசியல் சாமர்த்தியமும் சேர்ந்து தீர்மானிக்க வேண்டிய விஷயம். ஆனால் இதே போன்ற ஒரு பிரச்னை பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு இதே தென்கடலில் எழுந்த பொழுது அந்தப் பிரச்னையை, வெறும் நிர்வாகப் பிரச்னை என்று கருதி ராஜ்யாதிகாரிகளால் தீர்க்க முடியவில்லை. அந்தப் பிரச்னையோடு சேர்ந்து, பரம்பரை பரம்பரையாக வந்த சம்பிரதாயங்களும், அரச குடும்பத்தினரின் நம்பிக்கைகளும் ஏதேதோ பல குழப்பங்களை எழுப்பின. மனித உடம்பிலே உயிர் நாடி என்று ஒன்று இருப்பது போல அந்தத் தென் கடலுக்கும் இருக்குமானால், அந்த உயிர் நாடியே இந்தப் பெரும் பிரச்னையினால் துடி துடித்தது என்று சொல்ல வேண்டும். அந்தத் துடிதுடிப்புக்கும் அத்தனை பெரிய

சோமு



குழப்பங்களுக்கும் காரணமாக அமைந்த தீவுதான் வலம்புரித் தீவு.

தென் பாண்டி நாட்டில் தாமிர வருணி நதி, கடலிலே போய்ச் சேரும் சங்கமத்துக்குச் 'சங்கு முகம்' என்று பெயர் சொல்லுகிறார்கள். அது 'சங்கு முகமா' அல்லது 'சங்கமமா' என்பது இன்னும் முடிவு பெறாத ஓர் பண்டித ஆராய்ச்சி. ஆனால் நம் சம்பந்தப்பட்ட வரை, அது 'சங்கு முகமே' என்பதற்குரிய ஓர் ஆதாரம், சென்ற முறை நான் அந்த இடத்துக்குப் போயிருந்த போது கிடைத்தது.

சங்கு முகத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் தை அமாவாசையும் ஆடி அமாவாசையும் மிகவும் முக்கியம் வாய்ந்த தினங்கள். அந்தப் புண்ணிய தினங்களிலே சுற்று வட்டாரத்திலுள்ள பக்தர்கள் அனைவரும், ஆடவரும் பெண்டிரும், பல மைல்கள் கால் நடையாகவே யாத்திரை வந்து அந்தத் தீர்த்தக் கட்டத்தில் குளித்து விட்டு, சங்குமுக விநாயகருக்குத் தங்கள் நேர்த்திக் கடன்களைச் செலுத்தி வருவது வழக்கம்.

சென்ற தை அமாவாசைக்கு நான் சங்கு முகம் சென்றபோது, இந்தப் பெயரைப் பற்றிய ஆராய்ச்சிக்கு ஒரு தெளிவு கொடுக்கும்படியான அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

நானும் என்னோடு வந்த நண்பர்களும் அமாவாசைக்கு முன் தினமே சங்கு முகத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டோம். அந்த விநாயகர் கோவிலுக்கு அருகே ஓலையினால் ஒரு சிறு குடிசை வேய்ந்து, அந்தக் குடிசையிலே தங்கிக்கொண்டு, எங்களுடைய ஆராய்ச்சிக்கு உரிய அந்த விஷயத்தை நேருக்கு நேராகவே சரி பார்த்து விடுவது என்று தீர்மானித்திருந்தோம். அதன்படியே அன்று இரவு 'காயல்' என்ற இடத்திலிருந்து சில படகோட்டிகளை வரவழைத்து, எங்களுடைய படகு யாத்திரைக்கு ஏற்பாடு செய்தோம்.

அமாவாசைக்கு முந்திய இரவு என்றால், அந்த யாத்திரை எப்படியிருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்த்துக்கொள்ளுங்கள். பௌர்ணமி இரவானால், கடலிலே படகு குதித்துக் கொண்டு செல்வது ஆனந்தமாக இருக்கும். ஆனால் 'கருங்கும்' என்ற அமாவாசைக் காரிருளில், அலைகளுக்கு மேல் ஒரு சிறிய தோணியிலே கண்ணற்ற கடலின் பரப்பில் மிதந்து செல்வது, எத்தனை பயமாக இருக்கும்! சொல்லவே வேண்டியதில்லை. என்றாலும், என்னோடு வந்திருந்த நண்பர்கள் ஆராய்ச்சியிலே தீவிரமாக ஈடுபட்ட சரித்திர மாணவர்கள்! எப்படியும் அந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கம் மனத்தில் முனைப்பாக இருந்ததால், அந்தப் பொல்லாத அமாவாசை இருளினால்கூட மன உறுதியை அசைக்க முடியவில்லை. அத்தோடு கடலின் அலைகளும், அமாவாசை இருட்டானதால், அத்தனை ஆவேசம் இல்லாமல் மடங்கியே நெளிந்து கொண்டிருந்தன. கொந்தளிப்பு இல்லை. தோணி அதிக ஆட்டமும் குதிப்பும் இல்லாமல் சம நிலையிலே தண்ணீரில் வாத்துப் போல நீந்திக் கொண்டு சென்றது.

நடுநிசியைக் கடந்த வேளை. கருப்பான வானத்தில் அங்கங்கே பொட்டுப் பொட்டாகச் சிமிட்டிய நட்சத்திரங்களையும், பம்மி அடங்கிய கடலின் மெல்லிய ஓசையையும் தவிர, உள்ளத்தைக் கவரக் கூடிய காட்சியோ நிகழ்ச்சியோ ஏதும் இல்லை. தோணியின் துடுப்புக்களை வலித்துக் கொண்டிருந்த படகோட்டிகளோ, எங்களுடைய ஆராய்ச்சியின் நோக்கத்தை ஒருவாறு தெரிந்து கொண்டவர்களாக, மிகவும் ஊக்கத்தோடு அந்தக் கடலின் இதயத்துக்குள்ளேயே படகைச் செலுத்தினார்கள்.

சங்குமுக விநாயகரின் சந்நிதியையெல்லாம்தாண்டி, அதன் எதிரே அந்த நீலக் கருங் கடலின் பரப்பிலே நீண்ட தூரம் நாங்கள் சென்றிருக்க வேண்டும். திடீரென்று அந்த அதிசயமான ஓசை வந்தது. விரைவாகத் துடுப்புக்களை வலித்து முன்னேறிக் கொண்டிருந்த படகோட்டிகள், இப்பொழுது துடுப்பைத் தளர்த்தினார்கள்.

"அதோ! கேளுங்கள்! கேளுங்கள்!" என்றார் எங்களோடு வந்த ஆத்தூர் நண்பர். அவர்தான் முதன் முதல் எங்களுக்கு அந்த ஆச்சரியமான விஷ-

யத்தைச் சொன்னவர். அவருக்குச் சொந்த ஊர் ஆத்தூர். சங்குமுகத்திலிருந்து கொஞ்ச தூரத்திலுள்ள அழகான கிராமம் அது. இந்தப் பெரிய ஆராய்ச்சியில் என்னுடைய சரித்திர நண்பர்கள் ஏகோபித்து ஈடுபட்டதற்குக் காரணமே அவர்தான்!

"அதோ! தெளிவாகக் கேட்கிறதே! கவனியுங்கள்!" என்றார் ஆத்தூர் நண்பர் மறுபடியும்.

நிசப்தமான சூழ்நிலையிலே, அலைகள் எல்லாம் அடங்கிப் போய் மௌனம் சாதித்த அந்தக் கருநீல நீர்ப்பரப்பிலே, படகு அப்படியே நின்று, அதுவும் அந்த ஓசைக்குச் செவி சாய்த்தது. என்ன ஆச்சரியம்! மிக நன்றாகக் கேட்டது அந்த ஒலி! ஏக காலத்தில் பல நூறு சங்குகளைப் பல நூறு மனிதர்கள் உதட்டிலே பொருத்திப் 'பாம் பாம்' என்று ஊதினால் எப்படியிருக்கும்? அப்படியிருந்தது அந்த ஓசை!

"கடலுக்குள்ளே விபீஷணச்சாமி பூசை பண்ணுகிறார். அவர் சிரஞ்சிவி யல்லவா! இன்னும் ராமருக்குப் பூசை பண்ணிக் கொண்டே யிருக்கிறார்! அதுதான் இந்தச் சங்கொலி!" என்றார்கள் படகோட்டிகள்.

"சங்குமுகம் என்ற பெயர் இப்பொழுது புரிகிறதா? இன்னும் மூன்று காத தூரம் போனால் வலம்புரித் தீவு இருக்கிறது! அந்த வலம்புரித் தீவுக்கு மூன்று காத தூரத்திலேயே இந்த ஓசை கேட்க ஆரம்பித்து விடும்!" என்றார் ஆத்தூர் நண்பர்.


"அது என்ன வலம்புரித் தீவு? அந்தப் பெயருக்கும் இந்தச் சங்கின் ஓசைக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டார் எங்களோடு வந்திருந்த இன்னொரு நண்பர்.

"அதுதான் அதன் சரித்திரம்" என்றார் ஆத்தூர் நண்பர்.

"சரித்திரம் என்ற வார்த்தையை அர்த்தமில்லாமல் உபயோகிக்கக் கூடாது, தெரிந்ததா? தமிழ் நாட்டின் சரித்திரத்தை எடுத்துச் சொல்லும் போது, வெறும் கல்வெட்டு ஆராய்ச்சிகள் மட்டும் போதாது. இலக்கிய ஆராய்ச்சிகளும் முக்கியம்! எனவே, அந்த வலம்புரித் தீவைப் பற்றி என்ன நூல்கள், என்ன இலக்கியங்கள் இருக்கின்றன என்பதையும் எங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். புரிகிறதா?" என்று ஆத்தூராரை ஆத்திரத்தோடு கேட்டார் நண்பர்.



"ஆத்திரப்படாதீர்கள். நான் சொல்வதில் எது சரித்திரம், எது கற்பனை என்று உங்களுக்கே தெரியும், கேளுங்கள்!" என்று ஆத்தூர் நண்பர் கதையைச் சொல்ல ஆரம்பித்தார். அவர் சொன்ன விவரங்களிலிருந்துதான், வலம்புரித் தீவின் காரணமாகப் பல்லவ சாம்ராஜ்யத்





துக்கும், சேர சோழ பாண்டிய வேந்தர்களுக்கு மிடையே, ஏற்கனவே மூண்டிருந்த பகைமை எப்படி வலுப்பெற்றது என்பதும், வேளிரும் முத்தரையரும் அந்த வலம்புரித் தீவுக்காக எத்தனை பெரிய வீர தீரச் செயல்களைச் செய்ய வேண்டி யிருந்தது என்பதும், முதன் முதலில் எனக்குத் தெரிய வந்தன. தனது பன்னிரண்டாம் வயதில் காஞ்சிமா நகரிலே மகுடம் சூடிய இரண்டாம் நந்தி வர்ம பல்லவனுடைய காலத்தில், இந்தத் தமிழ் நாட்டின் நிலை எத்தனை சிக்கலா யிருந்தது என்ற விஷயத்தைப் பிற்காலத்தில் நான் கல்வெட்டுக்களைக் கொண்டு ஆராய்வதற்கும், பல இலக்கியச் சான்றுகளைத் தேடுவதற்கும் வேண்

டிய அவசியத்தை உண்டாக்கியதும், இந்த வலம்புரித் தீவின் வரலாறுதான்.

ஆமாம்; அன்று நரங்கள் கேட்ட சங்கின் ஓசையைத்தான் முதன் முதல் சித்திராங்க பூபதியும் கேட்டான் என்று தெரிந்து கொண்டேன். அந்தச் சங்கொலிதான் அவனுடைய ஆத்திரத்துக்கும், மன வேகத்துக்கும் காரணமாக அமைந்தது என்று தெரிய வந்தது. அந்த அதிசயமான சங்கொலிதான் பிற்காலத்தில் அத்தனை பெரிய படையெடுப்புக்கும் சண்டைகளுக்கும் காரணமாக அமைந்தது என்று கூற வேண்டும். அது ஆயிரத்து இரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு!

ஓர் இரவு. ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஓர் இரவு! அது அமாவாசை இரவில்லை. நல்ல பௌர்ணமி இரவு. அலைகள் எல்லாம் அடங்கி நிற்கவில்லை. ஒரே உற்சாகத்தோடு, 'ஓ' என்ற பேரோசையோடு சந்திரனையே சென்று எட்டிப் பிடித்து விடுவது போல, பொங்கி யெழுந்தோங்கி மேலே மேலே வீசிக்கொண்டிருந்தன. வானத்தையும் பூமியையும் சேர்த்து ஒளி வெள்ளத்திலே ஆழ்த்திக்கொண்டிருந்த அந்தப் பௌர்ணமி நிலவிலே, வலம்புரித் தீவின் கரையோரமாக அந்த நடுநிசி வேளையிலே சித்திராங்க பூபதி நடந்து கொண்டிருந்தான். முன்தினம் அவனுடைய நண்பர்கள் இருவர் சொன்ன சங்கொலியின் மர்மத்தை, இன்று நன்றாகத் தெரிந்து தெளிந்துவிட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான், அவன் அப்படி நடந்து சென்று கொண்டிருந்தான்.

கால் கடுக்காமல், மனம் தளராமல், வலம்புரித் தீவின் கரையோரமாக அவன் மேலே மேலே நடந்து கொண்டே யிருந்தான், எப்படியும் அந்த ஓசையைக் கேட்டுவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு! எத்தனை தூரம் நடந்திருப்பானோ தெரியாது! திடீரென்று ஓர் இடத்தில் நின்றான். அவன் எதிர்பார்த்து வந்த அந்த ஓசை இப்பொழுது நன்றாகக் கேட்டது!

ஆயிரம் ஆயிரம் சங்குகள் ஒரு கோஷ்டியாகச் சேர்ந்து ஒலித்தால் அந்த ஓசை எப்படி யிருக்கும், அப்படி யிருந்தது அது!

மேலே நடக்காமல் அங்கேயே நின்று சுற்றுமுற்றும் பார்ப்பதற்குள், கடலுக்குள்ளே நிலவின் ஒளியில் சங்கிலித் தொடர் போலத் தொடர்ச்சியாகப் பாறைகள் படர்ந்திருப்பது தெரிந்தது. சித்திராங்கன் அந்தப் பாறைகளைப் பார்த்தவாறு கடலின் கரையிலே நின்றான், நின்றான், நெடு நேரம் நின்றான்! அந்தச் சங்குகளின் ஏகோபித்த மந்திர ஓசையிலே அவனுடைய சிந்தனை சென்று அப்படியே கிறக்கம் கொண்டு நின்றது.

"பூபதி!" என்று குரல் கேட்டுத் திரும்பினான் சித்திராங்கன். மணலின் பரப்பிலே மந்திரநாயகம் நின்று கொண்டிருந்தார்.

"பூபதி! இந்த இடத்துக்கு வரக் கூடாது என்று எத்தனை தரம் உனக்குச் சொல்லி யிருக்கிறேன்! ஏன் இங்கே வந்தாய்?" என்று கேட்டார் அந்த முதியவர். கண்டிப்பைக் காட்டிலும், கவலையும் பரிவுமே அந்தக் குரலில் தொனித்தன.

"இல்லை. என்னால் என்னுடைய ஆவலைத் தாங்க முடியவில்லை. எத்தனை காலைக்குத்தான் இந்த ஆவலைக் கட்டுப்படுத்துவேன். என்னால் இனித் தாங்க முடியாது. எப்படியும் அந்த மர்மத்தைத் தெரிந்து கொள்ளாமல் இன்று அரண்மனைக்குத் திரும்பிப் போவதில்லை நான்!" என்றான் பூபதி உறுதியான குரலில்.

"பூபதி! குழந்தை மாதிரிப் பேசுகிறாயே! அம்மாவுக்குத் தெரிந்தால் எத்தனை கஷ்டப்படுவார்கள். வேண்டாம். இந்த ஆவலை விட்டு விடு! நம்முடைய குலாதிபதிகள் எத்தனையோ பேரைப் பழி வாங்கிய காரியம் இது. உனக்கு வேண்டாம், வந்து விடு. தயவு செய்து அந்தப் பாறைப் பக்கம் போக வேண்டாம். சொல்வதைக் கேள்!" என்று கெஞ்சினார் பெரியவர்.

"இல்லை. என்னைத் தடுக்காதீர்கள். இதோ நான் எத்தனையோ நாட்களாகக் கேட்கத் துடித்துக் கொண்டிருந்த அந்த அபூர்வமான அதிசயச் சங்கொலியை இன்று கேட்டு விட்டேன். இந்த இடந்தான் என்னுடைய

நண்பர்கள் குறிப்பிட்ட இடம் என்பதையும் கண்டுகொண்டு விட்டேன். இனிமேல் என்னைத் தடுக்க வேண்டாம். அந்த விஷயத்தைத் தெரிந்துகொண்டால் ஒழிய இனி நான் அரண்மனைக்குத் திரும்ப மாட்டேன். இது சத்தியம்! சத்தியம்!''

'சத்தியம்' என்று வார்த்தையைச் சொன்னபோது, அந்த நிலவின் ஒளியிலே சித்திராங்கனுடைய முகத்தில் ஒரு வெறி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. கடலினின்று எழுந்த சங்கொலி அவனுடைய செவியிலே புகுந்து, ஏதோ ஒரு பெரிய ஆவேசத்தையே உண்டாக்கி விட்டிருந்தது என்பது, அந்த முகத்திலே நன்றாகத் தெரிந்தது. இதைப் பெரியவர் கவனித்தார்.



''பூபதி! சத்தியம் செய்யலாமா? எவ்வளவு பெரிய வார்த்தை அது! இன்னும் சிறு பிள்ளையா நீ!''

''மந்திர நாயகம்! இந்த வினாடிவரை உங்களுடைய சொல்லை நான் தட்டிப் பேசியதில்லை. இந்தக் கணம் வரை உங்களுடைய வார்த்தைகளை நான் மீறியதில்லை. தயவு செய்து இப்பொழுது அப்படி ஒரு அவசியத்தை எனக்கு ஏற்படுத்தாதீர்கள். நான் இதோ அந்தப் பாறைகளை நோக்கி நடக்கப் போகிறேன். இடுப்பளவுக்கு மேல் இங்கே ஆழம் இல்லை என்பது எனக்குத் தெரியும். அப்படி ஆழமாகயிருந்தாலுங் கூட நான் கவலைப்படப் போவதில்லை. நீந்தி நீந்தி இந்தச் சங்கிலிப் பாறைகளை ஒவ்வொன்றாகக் கடந்து சென்று விடுவேன். மீண்டும் சொல்கிறேன். இது சத்தியம்!''

ஒரே உறுதியோடு வந்தன வார்த்தைகள். அது கண்டு, பெரியவர் கலங்கிப் போய் விட்டார்.

''பூபதி! உன்னுடைய பிடிவாதத்தை யாராலும் மாற்ற முடியாது. நீ இன்று அந்தப் பாறைகளுக்குச் செல்லாமல் அரண்மனைக்குத் திரும்ப மாட்டாய். நன்றாய்த் தெரிகிறது. ஆனாலும் தனியே செல்வது தவறு. வா, நானே உன்னை அழைத்துச் செல்கிறேன்! விதி யாரை விட்டது! என்ன செய்தாலும் செய்யட்டும்! உனக்குத் துணையாக நானும் நின்றேன் என்ற ஒரு திருப்தியாவது எனக்கு இருக்கட்டும்!'' என்று சொல்லிக்கொண்டு, அவனுடைய பதிலுக்குக் காத்திராமல், தண்ணீருக்குள் இறங்கினார் மந்திரநாயகம். பூபதி அவரைப் பின்தொடர்ந்தான்.

திட்டுத் திட்டாக ஒரே தொடர்ச்சியாகச் சங்கிலிப் பாறைகள் கடலுக்குள்ளே சென்றன. ஒரு பாறைக்கும் இன்னொரு பாறைக்கும் இடையிலே இடுப்பளவு ஆழந்தான் இருந்தது. ஏதோ ஒரு சிறிய குன்று நீண்ட நாட்களுக்கு முன் அந்த இடத்திலே நின்றிருக்கவேண்டும். பிறகு இயற்கையின் ஆவேசத்தினால் அலை பொங்கி வந்து, அந்தக் குன்று கடலிலே மூழ்கியிருக்க வேண்டும்! ஏனென்றால் அந்த இடத்தில் தண்ணீர் ஆழமாகவே இல்லை. கால் பாவிய இடம் எல்லாம் பாறையாக இருந்தது.


பட்டப் பகலைப் போல ஒரே பிரகாசமாக வீசிய நிலவின் ஒளியிலே முதியவரும், பூபதியும் தாவித்தாவிச் சங்கிலிப் பாறைகளிலே நடந்தார்கள். சுமார் இருநூறு அடி தூரம் சென்றதும் வட்டமான ஒரு பெரிய பாறையும் அதன் மேல் இடிந்து சரிந்து நின்ற ஒரு சிறு கோவிலும் தெரிந்தன. ஆனால் இதென்ன! அந்தப் பாறையின் கோடியிலே ஒரு சிலை நிற்கிறதே!

பூபதி நிலவின் ஒளியில் கூர்ந்து பார்த்தான். அழகே வடிவமான ஒரு பெண்ணின் சிலை, பாறையின் வடகோடியிலே நின்றது. அந்தச் சிலையின் அருகே உயரமாக ஏணி போல் நிற்பது என்ன? அதன்மேல் நிலா

பிரகாசமாக வீசியது. பூபதி பார்த்தான். அது ஒரு வீணை. கல்லினால் செய்யப்பட்ட வீணை. பெரிய வீணை. ஏணியைப் போல் படிகள் வைத்து நிற்கிறது! அதன் பாதத்திலே விசாலமான பெரிய படிக்கட்டு இருந்தது. இங்கிருந்து பார்த்தாலே அவனுக்கு மிக நன்றாகத் தெரிந்தன இத்தனையும்!

பெரியவர் அந்த வட்டமான பாறையிலே ஒரு தாவுத் தாவிக் கொண்டு ஏறினார். பூபதி அவரைப் பின் தொடர்ந்து சென்று, அவனும் ஒரு குதி குதித்துப் பாறையின் மேல் ஏறினான்.

என்ன ஆச்சரியம்! ஜலதரங்கத்தின் ஓசையைப் போன்று 'தர தரங், கண கணங், தர கண தரங்' என்று ஓர் இன்னிசையின் ஒலி அந்த வட்டமான பாறையிலே கேட்டது. பூபதி சிலையைப் பார்த்தவாறு அவனும் ஒரு கற்சிலையாக அப்படியே மெய் சிலிர்த்து நின்றான்.



வானத்திலே பொழிகிற நிலவின் குளுமையும், சந்திர வட்டத்தின் அழகும் ஒன்று சேர்ந்து வந்து, ஒரு பெண் உருவத்திலே சிலையாக அவனுடைய கண்ணுக்கு முன் நின்றால் எப்படியிருக்குமோ, அப்படிக் காட்சி தந்தது அந்தச் சிலை. கடல் அலைகள் அதன் பாத பீடத்திலே இருந்த படிக்கட்டுகளிலே ஏறித் தவழ்ந்து ஒரு கணம் குதித்து விளையாடி விட்டு, மீண்டும் கடலுக்குள்ளே வேகத்தோடு தத்தி விழுந்து கொண்டிருந்தன! அப்படி அந்த அலைகள் படிக்கட்டிலே வந்து விளையாடும்போது தான் இந்தத் தரங்க ஒலி எழுந்தது. ஆமாம், வரிசைக் கிரமமான அந்தப் படிக்கட்டிலே அலை வந்து ஏறி இறங்கி விழுந்து சரியும்போதெல்லாம் 'சரிகமபதநி' என்றும், 'சநிதபமகரி' என்றும் ஒரு இனிய ஒலி, ஜலதரங்கத்தின் இசை போன்ற ஒலி, படிக்கட்டிலே எழுந்தது. அலை வேகமாக ஓடி வந்து படிகளிலே ஏறிச் செல்லும்போது 'சரிகமபதநி' என்று அந்த ஒலியும் படிப்படியாக ஏறியது. ஏறிய அலைத் தண்ணீர், மடங்கிப் புரண்டு மீண்டும் கடலுக்குள்ளே செல்வதற்காக அந்தப் படி வரிசைகளிலே கீழே இறங்கும்போது 'சநி தப மகரி' என்று அந்த ஜலதரங்க ஒலியும் கீழே இறங்கியது! படிகளிலே அலைத் தண்ணீர் எவ்வும் போது ஆரோகணம்! இறங்கும்போது அவரோகணம்! அவ்வப்போது மிக வேகமாக ஓங்கி வரும் மாபெரும் அலை உயர்ந்து எழுந்து படிகளிலே வேகமாக வந்து விழுந்து சிதறினால், அதிலிருந்து தண்ணீர்த் துளிகள் உதிருமல்லவா? அந்த நீர்த் துளிகள் சிலையின் மேனியிலே தெறிக்கும்போது 'கல கல' என்ற ஒலி அந்தச் சிலையிலிருந்து கேட்டது! காரணம் அந்தச் சிலைக்கு அருகிலே வீணையின் வடிவத்தில் ஒரு சிறிய சிற்பம் நிற்கிறதல்லவா? வீணையிலே உள்ள மெட்டுக்களைப்போன்று அமைந்திருந்த அந்தக் கல் வெட்டுக்களிலே தண்ணீர் தெறித்த போதெல்லாம் ஜலதரங்க ஒலி 'கலகல' என்றது. கடலில் இருந்து எழுந்த இந்த ஆச்சரியகரமான தரங்க ஒலியிலே மனம் மயங்கிப் போய்ப் பூபதி அந்தப் பெண்ணின் சிலையை நோக்கியவாறு ஒரே வெறியோடு நின்று கொண்டிருந்தான்.

பெரியவரோ இதற்குள் அந்தச் சிலையைக் கடந்து மறுபக்கம் சென்று திரும்பிப் பார்த்தார். பாடும் தரங்கங்களின் இன்னொலியிலே மயங்கினவனாகப் பூபதி நின்றதைப் பார்த்தார்.


"என்ன நிற்கிறாய்? வா மேலே! மயக்கம் போட்டு விழுந்து விடாதே. இப்படியே வலப்பக்கமாகத் திரும்பிக் காலை நன்றாக ஊன்றிக் கொண்டு நடந்து வா!!" என்றார்.

அவருடைய குரல் வந்த திசையையே பார்த்தான் பூபதி. அங்கே செல்லலாமா, அந்தச் சிலைக்கு அருகிலே போய் வீணையின் ஒலியையும் படிக்கட்டுகளின் இன்னிசை கீதத்தையும் கேட்கலாமா என்று ஒரு கணம் யோசித்துத் தயங்கினான். இதற்குள் விவரிக்க முடியாத ஒரு ஜோதி பெரியவர் நின்ற இடத்துக்கு அப்பாலிருந்து வேகமாகப் பின்னிக் கொண்டு சாடி வருவதைக் கண்டான் அந்தச் சுந்தர வாலிபன்.

(தொடரும்)




வெஸ்ட் எண்டு வாட்சுகள் அரை நூற்றுண்டுக்கு மேலாக சரியான நேரத்தைக் காண்பித்துக் கொண்டு வந்துள்ளன. அது இன்றும் முன் போலவே பாதுகாக்கப்பட்டு வருகிறது. வெஸ்ட் எண்டு வாட்ச் செய்வதற்கு உபயோகப்படும் சிறந்த பொருள்களின் சேர்க்கைக்கும் வேலைத் திறமைக்கும் இது சான்ருக விளங்குகிறது. அத்துடன் கொடுக்கும் பணத்துக்கு ஏற்ற மதிப்பு வாய்ந்தது. அவை இந்தியாவில் அணிவதற்கென்றே விசேஷமாகச் செய்யப்படுகின்றன. வாட்சுகளின் இயக்கமும் அவைகளின் 'கேஸ்'களும் அந்தந்த பிரதேசத்தின் தேவைக்குத் தகுந்தபடியிருக்கின்றன என்று எங்கள் நீண்ட நாளைய அனுபவம் நிரூபிக்கின்றன.




MINIATURE "U-3"

Everbright Steel	...	... Rs. 100
Rolled Gold, 30-Microns		... Rs. 115



MINIATURE "U-2"

Everbright Steel	...	... Rs. 100
Rolled Gold, 30-Microns		... Rs. 115



MINIATURE "O"

Everbright Steel	...	... Rs. 100
Rolled Gold, 30-Microns		... Rs. 110

WEST END WATCH Co

BOMBAY CALCUTTA

கோட்டையிலே கோலாகலம்

சுப்புடு

போன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்பார்கள். புதனே கிடைத்து விட்டது. மாலை ஆறரை மணி.

செங்கோட்டையிலுள்ள திறந்த வெளியில் சங்கீதத்தின் நாதம் வானை யளாவியது. கூடியிருந்த நாலாயிரத்துக்கு மேற்பட்ட ஜன சமுத்திரம் எழுந்து நின்றது.

அதோ ராஷ்டிரபதி வந்து கொண்டிருக்கிறார். முன்னால் கண்ணைப் பறிக்கும் ஜரிகை வேலைப்பாடு கொண்ட அங்கிகளணிந்த இரு ஷெனாய் வாத்தியக்காரர்கள் மேல் காந்தாரத்துக்கும் கீழ்பஞ்சமத்துக்குமாய் ஊர்ந்தும், ஓடியும், சாடியும் விளையாடி முன்னால்வருகிறார்கள்.

வர்ணனை போதும்; விஷயத்துக்கு வருகிறேன். சங்கீதத்திலும், நாட்டியத்திலும், நாடகத்திலும் தலைசிறந்த விற்பன்னர்களுக்கு விருதுகள் வழங்க, சங்கீத நாடக அகாடமியார் நடத்திய விழாவைக் குறிப்பிடுகிறேன்.

வர்த்தக மந்திரி நித்யானந்த கனுங்கோ ராஷ்டிரபதியை வரவேற்றார். பதிலளித்த ராஜன்பாபு,

"இசை, நாட்டியம், நாடகம் போன்ற கலைகள் நெடுங்காலமாகப் பாரதத்தின் அருஞ் செல்வங்களாக இருந்து வந்திருக்கின்றன. இந்தக் கலைகள் களிப்பூட்டுவதோடு தேசிய ஒற்றுமைக்கு உதவியா யிருக்கின்றன. மனிதனுடைய பண்பாட்டை உயர்த்த இவைகளை விடச் சிறந்த சாதனங்கள் கிடையா. அகாடமியார் இந்தத் துறையில் செய்து வரும் சேவையைப் பாராட்டுகிறேன்" என்றார்.

இதோ மேடையின் மீது ஒலிபரப்பியை நோக்கி வருவது நமது அன்புக்குப் பாத்திரமான அகாடமி காரியதரிசி ஸ்ரீமதி நிர்மலா ஜோஷி. விருது பெற இருக்கும் விற்பன்னர்களின் சாதனைகளை அவர் வாசிக்க ஒவ்வொருவராய் விருது பெற்றனர்.

ஷெனாய் பிஸ்மில்லாகான், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி, திரு பாலக்காடு மணி ஐயர், குரு அமுபிசிங், குரு குஞ்சுகுருப், திரு கணேஷ் கோவிந்த போடாஸ், இவர்கள் தாம் இவ்வருடத்திய பாக்கியசாலிகள்.

ஏற்கனவே வர்ண ஜால விசித்திரங்களுடன் காட்சியளித்த மேடை காமிராக்காரர்களின் ஒளி பரப்பிலே மகேந்திர ஜாலமாய்க் காட்சி தந்தது.

இதற்குப் பின் விற்பன்னர்களுக்குத் தங்கள் கற்பனையைக் காட்ட வாய்ப்பு அளிக்கப்பட்டது. முதலாவது பிஸ்மில்லாகான் ஷெனாய் வாசித்தார். 'எமன் கல்யாண்' என்று ராஷ்டிர பாஷையில் கோரமாய் அழைக்கப்படும் யமுனா கல்யாணியை அவர் உற்சாகத்துடன் வாசித்ததை நான் ஒரு அனுபவமாய்க் கருதுகிறேன். கான்சாகேப் நாத சாகரத்திலேயே மிதந்து விடுகிறார். கூட வாசிக்கும் சோடா சாகேப் ஒரு ஸ்வரத்தில் கார்வை கொடுக்கும் போது, பூவைச் சுற்றும் வண்டுபோல், அந்த ஸ்வரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து உட்காருவது ரம்மியமா யிருந்தது. குரு அமுபிசிங்கும், குரு குஞ்சு குருப்பும் பின்னணி வாத்திய உதவியின்றி ஆட வேண்டியதாயிற்று. அழைத்து வரவில்லை போலும். ஆகையால் புரிந்தவர்கள் ரஸித்தார்கள்; புரியாதவர்கள் அடுத்த நிகழ்ச்சியை ஆவலுடன் எதிர்பார்த்தார்கள்.

பாலக்காடு மணி அய்யரவர்கள் தனி ஆவர்த்தம் துவங்குவதற்கு உதவத் திரு கே. வி. நாராயணஸ்வாமி பந்துவராளியில் "ரகுவர" கீர்த்தனை பாடிப் பத்து ஆவர்த்தம் ஸ்வரம் பாடினார். ஒரு மாதிரி நாதம் கட்டுவதற்குள் தனி ஆவர்த்தம் துவங்க வேண்டியதாயிற்று. "மணி — ஆவர்த்தம்" தான். சந்தேகமே இல்லை. விரல்கள் விளையாடுகின்றன. சிந்தைக் கெட்டாத சொற்கட்டுகளை இந்த வித்தை மணிதர் பொழிகிறார். பஞ்ச நடைகளும் இவரிடம் தஞ்சம் புகுந்து கொண்டிருக்கின்றன என்று அடக்கமாகச் சொல்ல வேண்டியதுதான்.

இது என்ன இப்படிப் பலத்த கரகோஷம், பரபரப்பு! ஸ்ரீமதி எம். எஸ். அமர்ந்து விட்டார். எந்த வைபவத்திலும் கடைசி வரையில் இருக்க இயலாத ராஷ்டிரபதிகூட கடைசி வரை இருக்க இசைந்தார். "பண்டுரீதி", "எதுட நிலசிதே", "தில்லானா" எல்லாம் வழக்கம் போல் ரம்மியமா யிருந்தன. "ராம கோவிந்த ஹரே" என்ற பஜனில் "ஜபதபஸாதனா" என்ற இடம் ஒன்று உண்டு. மத்யம ஸ்ருதி ஏற்கனவே. அதற்குமேல் ஷட்ஜத்தைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அவையில் நாலாயிரத்துக்கு மேற்பட்ட ஜனசமுத்திரத்தைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். "ஜபதபஸாதனை"யில் நாத அலைகள் ஊசலாடுவதைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். இரண்டு ஸ்வர ஸ்தானங்களில் அவரோஹணத்தில் கமக கார்வைக் குழைவுடன் வழுக்கி வரும் அற்புதத்தைக் கற்பனை செய்து கொண்டீர்களானால், அந்த ஜன சமுத்திரம் ஒருமுகமாய் ஆஹாகாரம் செய்ததை ஊகிக்க முடியும். காந்திஜிக்குப் பிரியமான 'ஹரிதும் ஹரோ'வுடன் வைபவம் இனிது முடிந்தது.

மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சிகள்.

கர்நாடக சங்கீத சபையாரின் புதிய செயற்குழு மங்களமாகவும் வெற்றியுடனும் துவக்கியிருக்கிறது புத்தாண்டை. முதல் கச்சேரியாகவும் முதல்தரக் கச்சேரியாகவும் அமைந்தது ஸ்ரீமதி எம். எஸ்.ஸின் நான்கு மணி நேர நாதப் பொழிவு. கச்சேரி துவங்குவதற்கு முன் நீதிபதி டி. எல். வேங்கட்ராமய்யர் ஸ்ரீமதி எம். எஸ்.ஸைப் பற்றிக் கூறிய பாராட்டு வார்த்தைகளைக் கேளுங்கள்:

"இந்த மாபெரும் கூட்டத்தைக் காணும் போதே எனக்கு மகிழ்ச்சி பொங்குகிறது. எம். எஸ். வெகு அற்புதமான சாரீரம் படைத்திருக்கிறார். எத்தனையோ பேருக்குச் சாரீரம் வசதியா யிருக்கிறது. ஆனால் அதை ஒரு கருவியாய்க் கொண்டு, பிரயாசனம் வழுவாமல், பல ஆயிரம் மக்களுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் பயன்படுத்துபவர் இந்தியாவிலேயே ஒருவர் உண்டென்றால் அவர் எம். எஸ். தான்.



"ஒரு விஷயம் பாருங்கள். பாரத தேசத்தின் அடிப்படைப் பண்பு என்ன! தியாகம்தான். இது வரை ஸ்ரீமதி எம். எஸ். செய்துள்ள உதவிக் கச்சேரிகளினால் பயனடைந்த ஸ்தாபனங்கள் பல. வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 25 லக்ஷத்துக்கு மேல். தியாகத்திற்கு வேறு அத்தாட்சி தேவையில்லை."

பின் நடந்த கச்சேரி முதல் தரமாயிருந்தது என்பது தேன் இனிப்பாயிருந்தது என்று சொல்வதற்குச் சமானம்.


பாராட்டு விழா

ஞாயிறு 13ம் தேதியன்று புத்தாண்டு மலர்ந்தது. தக்ஷிண பாரத சமாஜத்தார் முகமும் அகமும் மலரும் வண்ணம் ஒரு பாராட்டு விழா, விருது பெற்ற விற்பன்னர்களுக்கு நடத்தினர்கள். சுவையுடன் கூடிய தமிழில் தீட்டப்பட்ட ஒரு வரவேற்புப் பத்திரமும், அன்பு மொழிகள் பொறிக்கப்பட்ட ஒரு வெள்ளிப் பேழையும் முறையே பாலக்காடு மணி அய்யர் அவர்களுக்கும், எம். எஸ். அவர்களுக்கும் அளிக்கப்பட்டன. வந்தனோபசாரம் கூறிய வானொலி ஜெயராமய்யர், எம். எஸ். ஸின் சாரீரத்தைப் பற்றிப் பிரத்தியேகமாய்க் குறிப்பிட்டு, 'சங்கீத சாஸ்திரத்தில் நல்ல சாரீரத்துக்குரிய லக்ஷணங்கள் கூறப்பட்டுள்ளன. அதைப் படிக்கும் போது இப்படியும் இருக்க முடியுமா, இவ்வளவு லக்ஷணங்கள் ஒருங்கு கூடி இருக்க இயலுமா' என்று ஆச்சரியம் தோன்றும். ஆனால் ஸ்ரீமதி எம். எஸ். ஸின் சாரீரத்தைக் கேட்டவர்கள் முடியும், முடியும், என்று ஒப்புக் கொள்வார்கள்" என்று கூறினர்.

மொத்தத்தில் புத்தாண்டு குதூகலத்துடன் உதயமாயிற்று.

---


1. கர்நாடக சங்கீத சபையில் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் கச்சேரி நடைபெறுகிறது. 2. சபாநாயகர் அனந்தசயனம் ஐயங்கார், திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி முதலியோர் கச்சேரியை ரஸித்துக்கொண்டிருக்கின்றனர். 3. உயர்நீதி மன்றத்து நீதிபதி ஸ்ரீ டி. எல். வேங்கடராமய்யர் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களைப்பற்றிப் பேசுகிறார். 4. திரளாக வந்திருந்த பெண்மணிகள் கூட்டத்தில் ஒரு பகுதி. 5. நீதிக் கமிஷன் தலைவர் திரு சந்தானம், உள்நாட்டு மந்திரி திரு வல்லப பந்த், ரயில்வே மந்திரி திரு ஓ. வி. அளகேசன், நீதிபதி திரு டி. எல். வேங்கடராமய்யர் முதலியோர் சபையின் முன் வரிசையில் அமர்ந்திருக்கின்றனர்.



1. விருதுபெற்ற கலைஞர்கள் ஸ்ரீ பிஸ்மில்லாகான், ஸ்ரீ பாலக்காட்டு மணி ஐயர், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி, குரு குஞ்சுகுருப், குருஅமுபிசிங், ஸ்ரீ கணேஷ் கோவிந்த போடாஸ் ஆகியோர் வருகிருர்கள்.
2. ஜனதிபதி ஸ்ரீ பாலக்காட்டு மணிக்கு விருது வழங்குகிருர்.
3. ஸ்ரீமதி எம். எஸ். அவர்களுக்கு தக்ஷிணபாரத் சமாஜத்தில் வரவேற்பு.
4. வலது கரத்தில் விருதுத்தோடாவும், இடது கரத்தில் விருதுப் பத்திரமும் சால்வையும் துலங்க ஸ்ரீமதி எம். எஸ். காட்சி அளிக்கிருர்.
5. ஜனதிபதி ஸ்ரீமதி எம். எஸ். அவர்களுக்கு விருது வழங்குகிருர்.
6. விருது வழங்கும் விழாவுக்குப் பின் ஸ்ரீமதி எம். எஸ். ஸின் இன்னிசைக் கச்சேரி நடக்கிறது.
7. விருது வழங்கும் விழாவின்போது சபையில் ஒரு காட்சி.



நெய்வேலியில் கருப்புத் தங்கம்



2. நிலக்கரி பிறந்த கதை

எத்தனையோ வகைகளில் மக்களுக்கு உதவிவரும் விந்தைப் பொருளான நிலக்கரி பிறந்த அதிசயமான கதையைத் தெரிந்து கொள்வதற்கு முன்னால் அது உலகில் எவ்வளவு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதைப் பாருங்கள். இன்று நவீன நாகரிக வசதியுடன் வளர்ந்துள்ள இயந்திர உலகின் அஸ்திவாரமே நிலக்கரிதான். நவநவமான யந்திரங்களும், ராட்சஸ யந்திரங்களும், இன்னும் அதிசய யந்திரங்களும் இன்று மனிதர்களுக்குத் துணையாக நின்று அவர்கள் இந்த உலகத்தை ஆளுவதற்கு உதவுகிறதல்லவா! அப்படிப்பட்ட யந்திரங்கள் உருவாவதற்கு அவசியமான நிலக்கரி எத்தனையோ கோடி ஆண்டுகளுக்கு முன்னால் பூமிக்கு அடியில் பிறந்திருக்கிறது. இந்த அபூர்வ விந்தைப் பொருளான நிலக்கரி எந்தக் காரணத்தைக் கொண்டாவது மக்களுக்குக் கிடைப்பது நின்று விட்டால், என்ன ஆகும் என்று ஒரு கணம் கற்பனை செய்து பாருங்கள்.

நிலக்கரி கிடைப்பது நின்று விட்டால் உலகம் இன்றுள்ள நிலையில் இருக்க முடியாது. அணுசக்தி, ஹைட்ரஜன் சக்தி, மின்சாரம், பெட்ரோல் எண்ணெய், அருவியின் அபூர்வமான சக்தி இப்படி உலகில் உள்ள அத்தனை அதிசயமான சக்திகளும் ஒன்று சேர்ந்து பாடுபட்டாலும் நிலக்கரியின் சக்திக்கு ஈடு செய்ய முடியாது. அதனால் உலகம் பழைய காலத்துக்குத் திரும்பிவிட வேண்டியதுதான். அதாவது பண்டம் மாற்றி மக்கள் வாழ்ந்த காலத்துக்குச் சென்று விடவேண்டியதுதான்.

நிலக்கரி இல்லாவிட்டால் பெரிய பெரிய எஃகு உருக்குச் சாலைகள், மிகப் பெரிய தொழிற்சாலைகள், நிலக்கரியின் சக்தியின் துணைகொண்டு இயங்கும் இயந்திர வகைகள் எல்லாமே நின்றுவிடும். ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள் அலைகடலில் ஓடா. ரயில் போக்குவரத்துக்கள் நின்றுவிடும். அதனால் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்குத் தாராளமாகச் சென்று கொண்டிருக்கும் உணவுப் போக்குவரத்துக்கள் நின்றுவிடும். எண்ணெயினால் இயங்கும் இயந்திரங்களை மிகக் குறைந்த செலவில் நிலக்கரியின் சக்தியினால் இயக்குவதுபோல இயக்க முடியாது. அத்துடன் நிலக்கரிச் சக்தியினால் இயங்கும் இயந்திரங்கள் உழைப்பதுபோல எண்ணெய்ச் சக்தியினால் இயங்கும் இயந்திரங்கள் உழைக்கமாட்டா. விரைவில் இயந்திரங்கள் கெட்டுவிடும். மின்சார சக்தி இப்பொழுது கிடைக்கும் அளவு கிடைக்காது. அப்படிக் கிடைத்தாலும் அது மலிவாக இருக்காது. இது போன்ற பல காரணங்களால் மக்கள் கற்காலத்துக்கு அதாவது காட்டில் கூட்டம் கூட்டமாக ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வாழ்ந்து வந்தார்களே அந்த நிலைக்குத் திரும்பிவிட வேண்டியதுதான்.

நிலக்கரி மட்டும் இல்லையென்றால் அமெரிக்காவில் 'ஸ்கைஸ்கிராப்பர்ஸ்' என்று சொல்லும் மேக மண்டலத்துக்கு அப்பாலும் சென்று தலையை நீட்டிக் கொண்டிருக்கும் மிகப் பெரிய கட்டடங்கள் தோன்ற முடியாது. ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்குக் கூட்டம் கூட்டமாக மக்கள் செல்ல முடியாது.

எஃகு உலகத்தை உயிருடன் உலவ வைத்திருக்கும் ஜீவநாடி நிலக்கரி. நிலக்கரியும் இரும்பும்தான் எல்லை காண முடியாத பெரிய கடலுக்கும், அகண்டாகாரமான பூமிக்கும் மக்களை மன்னராக மாற்றி யிருக்கின்றன.

கப்பல்கள், ரயில் வண்டிகள், லாரிகள், பா கள் ஓடுவதற்கு நிலக்கரியின் சக்தி பயன் படுகி . தொழிற்சாலைகள், எஃகு உருக்குச் சாலைகள் ...வியலைகள் நிலக்கரியின் சக்தியினால் தொழில் படுகின்றன. வீடுகளுக்கு வேண்டிய விறகுகளுக்குப் பதிலாக நிலக்கரி உபயோகப்படுகிறது. அமெரிக்காவில் எல்லா விதத் தொழிற்சாலைகளுக்கும் நிலக்கரியைத்தான் உபயோகப்படுத்துகிறார்கள். இன்றைய தினம் அமெரிக்கா குபேரப் பட்டணமாக விளங்கி வருவதற்கு மூல காரணமே இரும்பும், விந்தைப் பொருளான நிலக்கரியும் அங்கு தாராளமாகக் கிடைத்து வருவதுதான்!

நிலக்கரியையும் இரும்பையும் உபயோகப் படுத்துவதன் மூலம் பல லட்சக்கணக்கான மக்கள் பிழைத்து வருகின்றனர். பூமிக்கு அடியில் நிலக்கரி இருக்கும் பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்காக உலகில் எத்தனையோ மகாயுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன.

சென்ற மகாயுத்தத்தில் ஜெர்மனி மிகப் பெரிய உலக யுத்தத்துக்குத் தன்னைத் தயார் செய்து கொள்ள முடிந்ததற்கு மூலகாரணமே




அங்கு கிடைத்து வரும் நிலக்கரியும், இரும்பும் தான். யுத்தத்துக்கு உபயோகமாகும் ஆயுதங்கள், மருந்துகள் செய்வதற்கு வேண்டிய அபூர்வமான சாதனங்கள் எல்லாம் நிலக்கரியின் மூலமாகத்தான் தயார் செய்ய முடியும். இப்படிப்பட்ட ஈடு இணையற்ற சக்தியை உடையதாக இருப்பதால்தான் நிலக்கரியைக் ''கருப்புத் தங்கம்'' என்றும் ''கருப்பு வைரம்'' என்றும் அருமையாகப் பெயர் வைத்து அழைத்து வருகிறார்கள்.

இப்படிப்பட்ட அதிசய சக்தி நிறைந்த விந்தைப் பொருளான நிலக்கரி எப்பொழுது உண்டானது என்று தெரியுமா!

இரண்டாயிரத்து ஐந்நூறு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் பூமிக்கு அடியில் உண்டானது. இயற்கையின் விசித்திரங்களில் ஏற்படும் மாறுதலை எப்படிக் கூறுவது! நேற்று வரையில் காடாக இருந்த இடம் எப்படியோ, இயற்கையின் உற்பாதங்களால் திடீரென்று மறைந்து மண்மேடாகி விடுகிறது. அந்த மண்மேட்டில் மீண்டும் புல் பூண்டுகள், கொடி செடிகள், மரங்கள் வளருகின்றன. அது காடாகப் பெருகி விடுகிறது. புதிதாக வளர்ந்திருக்கும் இந்தக் காடு இருந்த இடத்தில் ஏற்கனவே இருந்த காடு பூமிக்கு அடியில் போய் அப்படியே மக்குகிறது. அங்குள்ள உஷ்ணத்தால் புழுங்கிப் புழுங்கி வெந்து வெந்து கரியாகி விடுகிறது. அந்தக் கரியில் தண்ணீரும் காற்றும் இருக்கும். அந்தத் தண்ணீரையும் காற்றையும் அந்தப் பகுதியில் பூமிக்கு மேலே புத்துணர்ச்சியுடன் ஓங்கிப் பெருகி வளரும் காட்டில் உள்ள மரங்கள் எடுத்துக் கொண்டு செழுமையாக வளருகின்றன. அதனால் நிலக்கரி மேலும் மேலும் அழுக்கப்பட்டு இன்னும் இறுக ஆரம்பித்து விடுகின்றது. இப்படிப்பட்ட இடங்களிலே கிடைக்கும் நிலக்கரி மிகவும் உறுதியாகவும், ஈரப்பசை இல்லாமலும் இருக்கும். சில இடங்களில் மலைகளுக்கு மத்தியிலும் நிலக்கரி கிடைக்கிறது. அது இன்னும் உறுதியாகவும் கனமாகவும் இருக்கும். இந்த வகை நிலக்கரி உலகில் அதிகம் கிடைப்பதில்லை.

கடற்கரை ஓரமாக மணற்பாங்கான இடங்களில் கிடைக்கும் நிலக்கரி அதிகம் கனம் இல்லாமலும், காற்றும் தண்ணீரும் நிறைந்ததாகவும் இருக்கும். இந்த வகையைச் சேர்ந்தது தான் நெய்வேலியில் கிடைக்கும் நிலக்கரி.



நெய்வேலியில் கிடைக்கும் நிலக்கரியில் ஐம்பது பங்கு தண்ணீரும் காற்றும் இருக்கின்றன. அதிக கனமில்லாமலும் இருக்கிறது. இந்த வகை நிலக்கரி எப்படி உண்டாயிற்று!


கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் நெய்வேலி கடற்கரையோரமாக உள்ள ஒரு பிரதேசமாக இருந்திருக்க வேண்டும். நெய்வேலியும் அதைச் சுற்றி நூறு மைல் பரப்புக்குக் கண்ணுக்கெட்டிய தூரம் மரங்கள் அடர்ந்த பெரிய காடாக இருந்திருக்க வேண்டும். அந்தக் காட்டில் உள்ள மரங்கள் இப்போது நாம் காணும் மரங்களைப் போல் இருந்திருக்க முடியாது. பின் எப்படி இருந்திருக்கும்! உயரம் உயரமான மரங்களாகவும், அதன் இலைகள் ஊசிகள் போலக் கூர்மையாக இருந்திருக்க வேண்டும். கடற்கரையை யொட்டி உள்ள காடுகள் இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்று பூகர்ப்ப ஆராய்ச்சி நிபுணர்கள் எத்தனையோ ஆண்டுகள் பல நுணுக்கமான ஆராய்ச்சிகள் செய்து இந்த உண்மையைத் தெரிந்து கூறியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட காடுகள் ஓங்கிப் பெருகி மேலும் மேலும் வளருவதற்கு இயற்கை விரும்புவதில்லை போலும். இயற்கையின் அமைப்பிலே திடீரென்று மாறுதல் ஏற்பட ஆரம்பிக்கின்றது. கடல் பொங்குகிறது. கற்பனை செய்து காண முடியாத அளவு பனைமர உயரத்துக்கும் அதிகமான உயரத்துடன் கடல் அலைகள் குமுறிப் பொங்கி அருகில் இருக்கும் காட்டுக்குள் புகுகின்றன. அப்படிப் புகும் போது கடல் நீருடன் மலை போன்ற மண் குவியல்களும் சேர்ந்து புகுகின்றன. காடுகள் மண்ணால் மூடப்படுகின்றன. நேற்று வரை காடாக இருந்த பிரதேசம் இன்று மண் மேடாக மாறி விடுகிறது. அப்படி மண்ணில் புதைந்து போன காடுகள் மீது உண்டான மேட்டில் நாளடைவில் மாறுதல் ஏற்படுகிறது. அந்த மண்ணில் புல் பூண்டுகள் முளைக்க ஆரம்பிக்கின்றன. செடிகள் வளர்ந்து அவை மரங்களாகிப் பின் காடுகளாகின்றன. இப்படி உருவான காடுகளில் உள்ள மரங்கள் வளர வளர அதன் கனத்தால் ஏற்கனவே பூமிக்குள் புதைந்து போன காடு இன்னும் அழுக்கப்பட்டு விடுகிறது.

பிறகு அந்தக் காடுகள் இருந்த இடங்களில் மக்கள் குடியேற ஆரம்பித்து விடுகிறார்கள். அதனால் இன்னும் அழுக்கப்பெற்றுப் பூமிக்கு அடியில் சிக்கப்பட்ட காடு மண்ணின் அழுத்

தத்திலே புழுங்கி புழுங்கி, வெந்து வெந்து, கனன்று கனன்று ஒன்றாகி ஒரே பாறையாகி நிலக்கரிப் பாறையாக உருமாறிப் போய்விடுகிறது. இவ்வாறு எத்தனையோ கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றியது தான் கருப்புத் தங்கம் என்று புகழ்பெற்ற விந்தைப்பொருளான நிலக்கரி. எத்தனையோ நூற்றுக்கணக்கான அடிகளுக்குக் கீழே, பாதாளத்தில் போய் நிலக்கரி பதுங்கிக் கொண்டிருந்தாலும் மனிதனின் அறிவுக் கண்களில் இருந்து அதனால் தப்ப முடியவில்லை. இப்பொழுது தெரிந்து கொண்டீர்கள் அல்லவா நெய்வேலியில் இருக்கும் விந்தைப் பொருளான நிலக்கரி பிறந்த விசித்திரக் கதையை.

நிலக்கரியைப் பூமியில் இருந்து எடுத்தவுடன் பார்த்தால் கன்னங்கரேல் என்று கரடு முரடாக இருக்கும். ஆனால் தொட்டுப் பார்த்தாலோ வழுவழுப்பாக மிருதுவாக இருக்கும். ஒரு துண்டு நிலக்கரியை எடுத்து அதைப் பூதக்கண்ணாடி மூலமாகப் பார்த்தால் அதனுடைய உண்மையான நிறம் தெரியும். பழுப்பு நிறமாக, தங்கம்போலக் காட்சியளிக்கும். நிலக்கரிக்கு மத்தியில் இலைகள் கொடிகள் எல்லாம் இருக்கின்றன. இன்னும் பல



வகைப்பட்ட ஜீவராசிகளின் எலும்புகள்கூட இருப்பதாகச் சொல்லுகிறார்கள்.


நெய்வேலியில் இருக்கும் கருப்புத் தங்கம் - நிலக்கரி எப்படிப்பட்ட இடத்தில் ஒளிந்து கொண்டிருக்கிறது என்பதைப் பாருங்கள்.

3. பொங்கு புனல்

நெய்வேலியில் இருக்கும் நிலக்கரி தன் மீது முந்நூறு அடி உயரத்துக்கு மண்ணையும், தனக்கு அடியில் அபார சக்தியுடன் இருக்கும் தண்ணீரையும் வைத்துக் கொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீர் எப்படி அங்கு சென்றது! ஏன் சென்றது! இந்தக் கேள்விகளுக்குப் பதில் தெரிந்து கொள்வதற்கு முன்னால் நெய்வேலியிலும் அதைச் சுற்றிலும் உள்ள பொங்கு புனல்களைப் பற்றி அதாவது பூமிக்கு அடியிலிருந்து தானே பொங்கி வரும் குழாய்க் கிணறுகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

பூமி ஒரே சமமாக இருப்பதில்லை. ஒரு இடத்தில் உயரமாகவும் ஒரு இடத்தில் பள்ளமாகவும் இருக்கிறது. உயரமான இடத்தில் பெரிய ஆறுகளோ, ஏரிகளோ இருந்தால் அதில் உள்ள தண்ணீர் மெதுவாகப் பூமிக்குள் இறங்குவது இயற்கைதானே. அதுவும் அந்த இடத்தில் உள்ள மண் மிருதுவாகத் தண்ணீரைப் பூமிக்குள் விடுவதற்கு வசதியாகவும் இருந்துவிட்டால் பிறகு கேட்பானேன்! அப்படி இறங்கும் போது மிருதுவான மணலாக உள்ள இடங்களில் வேகமாக அந்தத் தண்ணீர் இறங்கி அந்த மணல் வெளியூடே கீழ் நோக்கிச் செல்கிறது. அப்படிச் சென்று கொண்டிருக்கும் போது குறிப்பிட்ட இடத்துக்குக் கீழே இறங்கமுடியாமல் பூமி பாறையாக இருந்தால் அந்த இடத்திலிருந்து பக்கவாட்டில் மிருதுவான மணல் வெளியுள்ள இடை வெளியில் ஓட ஆரம்பித்து விடுகிறது. அப்படி ஓடுகின்ற தண்ணீர் பூமிக்கு அடியில் கீழே போக முடியாமலும், அங்கிருந்து இன்னும் அப்பால் செல்ல முடியாமலும், பூமிக்கு மேலே வர முடியாமலும் ஏதாவது கடினமான பொருளாக உள்ள இடத்தில் இருந்துவிட்டால் அந்தத் தண்ணீர் அங்கேயே தங்கி விடுகிறது. அப்படித் தேங்கி நிற்கும் தண்ணீர் அங்கு குளத்தில் நிற்பது போல அமைதியாக நிற்பதில்லை. தான் உற்பத்தியான இடத்தின் உயரத்தை எட்டிப் பிடிப்பதற்காகத் தன் சக்தியை யெல்லாம் உபயோகப் படுத்திக் கொண்டு பூமிக்கு மேலே வரச் சதா முயன்று கொண்டே இருக்கிறது. இவ்வாறு தண்ணீர் மேல் நோக்கி வருவதற்கு முயன்று கொண்டிருக்கும் இடத்தில் யாராவது கிணறு வெட்டினால், அப்படி வெட்டப்பட்ட கிணற்றின் வழியாகத் தண்ணீர் பீறிக் கொண்டு மேலே வருகிறது. பூமிக்கு அடியிலிருந்து வெளிவரும் இந்தத் தண்ணீர் முதன் முதல் பூமியில் இறங்க ஆரம்பித்த ஆறு, ஏரியோ உள்ள இடத்தை விடப் பள்ளமான இடமாக இருந்தால் அந்த உயரத்துக்குச் சரியாகப் பூமிக்கு மேலே வந்து பீறிக் கொண்டு விழும்.

நெய்வேலியில் நூற்றுக்கணக்கான பொங்கு புனல்கள் இருக்கின்றன. அந்தப் பொங்கு புனல்களில் தண்ணீர் சுமார் முந்நூறு அடி ஆழத்துக்குக் கீழே இருந்து பொங்கி வருகிறது. இந்தத் தண்ணீரின் ஆரம்பம் எது தெரியுமா! அதையும் கண்டு பிடித்து விட்டார்கள். நெய்வேலி சமுத்திரமட்டத்திலிருந்து சுமார் நூற்று அறுபது அடி உயரம் உள்ள பிரதேசம். விருத்தாசலம் உளுந்தூர்ப்பேட்டை முதலிய இடங்கள் சமுத்திர மட்டத்திலிருந்து சுமார் முந்நூறு அடி உயரம் உள்ள இடங்கள்.



பொங்கு புனல் எவ்வாறு உண்டாகிறது என்பதை விளக்கும் சித்திரம்: X தண்ணீர் பூமிக்குள் இறங்குகிறது. B பூமிக்கு அடியில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. C தண்ணீர் அதற்கும் கீழே இறங்க முடியாமல் அமைந்திருக்கும் பாறை. y தண்ணீரை வெளியிலே விட முடியாமலும் உள்ளே வாங்கிக் கொள்ள முடியாமலும் இருக்கும் இடம். A களி மண் வழியாக இறக்கி இருக்கும் குழாய்க் கிணறுகள். b இந்தக் குழாய்க் கிணற்று வழியாகத் தண்ணீர் வரமுடியாமல் பூமி உயரமாக இருக்கிறது. அடுத்த குழாயில் தண்ணீர் தானே பொங்கி, பொங்கு புனலாக வழிவதைப் பாருங்கள். கோடியில் தெரிவது நெய்வேலியில் இருக்கும் பொங்கு புனல்.

விருத்தாசலத்துக்கும் உளுந்தூர்ப்பேட்டைக்கும் மத்தியில் உள்ள ஒரு இடத்தில் பல மைல் தூரத்துக்கு மழைத் தண்ணீர் தேங்குவதற்கு வசதியாகப் பள்ளம் இருக்கிறது. இன்னும் நதிகளும் ஏரிகளும் இருக்கின்றன. அந்த இடத்தில் மழைக் காலத்தில் பெய்யும் மழைத் தண்ணீர் எல்லாம் பூமிக்கு அடியில் இறங்குவதற்கு வசதியான மண் அமைப்பை உடையதாக இருக்கிறது. அதனால் தண்ணீர் பூமிக்குள் இறங்குகிறது. அப்படி இறங்கும் தண்ணீர் கீழே கீழே கீழே பாதாளத்தை நோக்கிச் செல்கிறது. சுமார் மூந்நூறு அடி ஆழம் சென்றதும் அதற்குக் கீழே போக முடியவில்லை. மூந்நூறு அடிக்குக் கீழே நல்ல பாறையாக இருப்பதால் அங்கிருந்து மிருதுவான மணல் இருக்கும் இடமாக நெய்வேலிப் பகுதியை நோக்கித் தண்ணீர் திரும்பி ஓடி வருகிறது. நெய்வேலியைச் சுற்றி நூறு சதுர மைல்களுக்குக் கீழே தண்ணீர் இறங்க முடியாத இறுக்கமான பாறையாக இருக்கிறது. அத்துடன் நெய்வேலிக்கு அப்பால் தண்ணீர் வேறு எங்கும் செல்லப் பூமி அமைப்பு வசதியாக இல்லை. பூமிக்கு மேலே வரலாம் என்றாலோ மேலே பாறையைவிடக் கடுமையான நிலக்கரியும் மூந்நூறு அடி உயரத்துக்கு மண்ணும் அமைந்திருக்கின்றன. ஆகையால் வேறு வழியின்றி அந்த இடத்தில் வந்து சமுத்திரம் போல் தண்ணீர் தேங்கிக் கிடக்கிறது.

இவ்வாறு பூமிக்கு அடியில் மூந்நூறு அடிக்குக் கீழே தேங்கிக் கிடக்கும் தண்ணீரின் ஆரம்பம் சமுத்திர மட்டத்தில் இருந்து மூந்நூறு அடி உயரமுள்ள உளுந்தூர்ப் பேட்டைக்கும், விருத்தாசலத்துக்கும் இடையுள்ள பாகம் அல்லவா! ஆகையால் சமுத்திர மட்டத்திலிருந்து நூற்று அறுபது அடி உயரம் உள்ள நெய்வேலியில் மூந்நூறு அடி ஆழம் பூமியில் குழாயை இறக்கினால் அங்கு பூமிக்கு மேலே வரத் துடித்துக்கொண்டிருக்கும் தண்ணீர், தான் உற்பத்தியான இடத்தின் உயரத்தை நோக்கி வருகிறது. அதன் உற்பத்தி ஸ்தானமோ சமுத்திர மட்டத்திலிருந்து மூந்நூறு அடி உயரம் உள்ள பிரதேசம். ஆகையால் தண்ணீர் வெளியில் வரும் பிரதேசமான நெய்வேலியோ சமுத்திர மட்டத்திலிருந்து நூற்று அறுபது அடிதான். ஆகையால் அங்குள்ள குழாய்க் கிணறுகளில் தண்ணீர் பூமிக்கும் மேலே வந்து தானே பொங்கும் புனலாகப் பொங்கி வழிகிறது. இப்பொழுது தெரிகிறதல்லவா, நெய்வேலியில் இருக்கும் பொங்கு புனல்கள்—அதாவது பொங்கி வழியும் குழாய்க் கிணறுகளின் இரகசியம்.


இந்த விவரங்களை எல்லாம் நெய்வேலி நிலக்கரிச் சுரங்க அதிகாரி சுருக்கமாக விளக்கிக் கூறினார். பிறகு பத்திரிகையாளர்களை ஒரு மாதிரி பார்த்தார். அந்தப் பார்வை "இன்னும் ஏதாவது வேண்டுமானால் கேளுங்கள்" என்று கேட்பது போல் இருந்தது.

"தண்ணீர் இருந்தால் இருந்து விட்டுப் போகிறது! அதற்கும் நிலக்கரிக்கும் என்ன சம்பந்தம்!" என்றேன்.

அவர் ஒரு முறை புன்முறுவல் பூத்து விட்டு அந்தத் தண்ணீரின் அபார சக்தியைப் பற்றி விளக்கிக் கூறினார்.

நெய்வேலிக்கு அடியில் மூந்நூறு அடி ஆழத்துக்குக் கீழே தேங்கி நிற்கும் தண்ணீர் எவ்வளவு சக்தியுடன் மேல் நோக்கி வர முயன்று கொண்டிருக்கிறது தெரியுமா! ஒரு சதுர அடி கனமுள்ள தண்ணீர் எட்டு டன் எடை பலத்துடன் மேல் நோக்கி வர முயன்று கொண்டிருக்கிறது!

இவ்வாறு நெய்வேலியில் உள்ள நிலக்கரிக்குக் கீழே தேங்கி நிற்கும் சமுத்திரம் போன்ற தண்ணீரின் சக்தியைக் குறைத்தால்தான் நிலக்கரியைச் சுலபமாக எடுக்க முடியும். சாதாரணமாக இரும்புக் குழாய்க் கிணறுகள் இறக்கி


இப்படித் தோற்ற மளிக்க
(இப்படிக்குப் பதிலாக)
இந்த அடையாளம் இருக்கிறதா என்று எப்பொழுதும் கவனியுங்கள்
SANFORIZED
நீங்கள் பருத்தித் துணி அல்லது ரெடிமேட் உடைகள் வாங்கும்பொழுது, 'ஸான்ஃபோரைஸ்ட்' அடையாளமிருக்கிறதா என்று எப்பொழுதும் கவனியுங்கள். உடைகள் சுருங்குவதினால் ஏற்படும் தொல்லைகளிலிருந்து இதுவே தகுந்த பாதுகாப்பு!
·SANFORIZED·
SHRUNK FABRIC
ஸான்ஃபோரைஸ்ட் ஸர்வீஸ், 'பாசிஜுத்', நேதாஜி சுபாஷ் ரோடு, மெரீன் ட்ரைவ், பம்பாய் 2
CP. 2829



ால் அதன் மூலமே தண்ணீர் பயங்கர வேகமாக வெளிவருகிறதல்லவா! பூமிக்கு அடியில் தண்ணீருக்கு மேலே இருக்கும் நிலக்கரியை வெட்டி எடுப்பதானால் இவ்வாறு சிறு சிறு குழிகளாகத் தோண்டி அதன் மூலமாகவா எடுக்க முடியும்! மிகப் பெரிய பள்ளமாக, இருநூறு அடி மூந்நூறு அடி அகலமும் நீளமும் உள்ள பள்ளமாகத் தெப்பக்குளம் போல் அல்லவா தோண்ட வேண்டும்! அவ்வளவு பெரிய நீளமும் அகலமும் உள்ளதாகப் பெரிய பள்ளத்தை வெட்டிக் கொண்டு நூறு அடி இருநூறு அடி என்று கீழே செல்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படிச் செல்லும் போது நிலக்கரிக்கு அடியில் இருக்கும் தண்ணீர், ஒரு கன சதுர அடி தண்ணீர், எட்டு டன் எடை அளவு பயங்கர வேகத்துடன் பூமியை மேல்நோக்கித் தள்ளிக்கொண்டிருக்கும் தண்ணீர் என்ன செய்யும்!

இப்போது நிலக்கரிக்கு மேலே மூந்நூறு அடி மண் இருப்பதால் தண்ணீர் தன் சக்தியை எல்லாம் ஒடுக்கிக் கொண்டு பூமிக்குள்ளேயே இருக்கிறது! நிலக்கரி மீதுள்ள மண்ணின் கனம் குறையக் குறைய நிலக்கரிக்கு அடியில் உள்ள தண்ணீரின் மேல் நோக்கித் தள்ளும் சக்தியானது பலம் பெறும். சுமார் நூறு அடி இருநூறு அடி ஆழமாக, இருநூறு அடி மூந்நூறு அடி அகல நீளத்துக்குப் பெரிய பள்ளம் தோண்டி அதன் மீதுள்ள மண்ணை எடுத்து அப்பால் போட்டவுடனேயே அந்தப் பகுதிக்கு அடியில் உள்ள தண்ணீரின் சக்தியானது நிலக்கரியையும் அதற்கும் மேலேயுள்ள சிறிதளவு மண்ணையும் உடைத்துப் பிளந்து கொண்டு மேலே வந்துவிடும். தன்னுடைய உற்பத்தி ஸ்தானமான மூந்நூறு அடி உயரத்துக்கு, சதுர அடிக்கு எட்டு டன் எடை மேல் நோக்கித் தள்ளும் சக்தியுடன்பயங்கர வேகத்துடன் தண்ணீர் எழும்பும். அப்படித் தண்ணீர் உடைத்துக் கொண்டு இருநூறு அடி அகலமும், மூந்நூறு அடி நீளமும் உள்ள குளம் போன்ற பெரிய பள்ளத்தின் வழியாகப் பூமிக்கு மேலே வந்தால் நெய்வேலியையும், அதைச் சுற்றி நூறு சதுரமைல் தூரத்தையும் வெள்ளக் காடாக ஆக்கி விடும். தமிழ் நாட்டைப் பொன் கொழிக்கும் பூமியாக மாற்றும் அபூர்வ சக்தி படைத்த கருப்புத் தங்கம்—நிலக்கரி எடுக்க முடியாமற் போவதுடன் நூறு சதுர மைல் விஸ்தீரணத்தில் உள்ள கிராமங்கள், நகரங்கள் எல்லாமே தண்ணீருக்குள் மூழ்க வேண்டியது தான். அங்குள்ள வீடு வாசல், மரம் மட்டை, மாடு கன்று, ஏன்! மனிதர்கள் எல்லாருமே அழிய வேண்டியதுதான்.

இப்படிப்பட்ட கற்பனை செய்து காண முடியாத பயங்கர உற்பாதங்கள் நேராமல் இருக்க வேண்டுமானால் நெய்வேலியில் உள்ள நிலக்கரிக்கு அடியில் இருக்கும் தண்ணீரின் மேல் நோக்கித் தள்ளும் சக்தியைக் குறைக்க வேண்டும். அதன் சக்தி, அதனுடைய மேல் நோக்கித் தள்ளும் பலம் குறைந்து விட்டால் தான் நிலக்கரியைப் பயமில்லாமல் எடுக்கலாம். இத்தமாதிரி பயங்கரமான தண்ணீரின் சக்திக்கு மேலே நிலக்கரி இருக்கும் இடம் உலகில் வேறு எங்குமே இல்லை. அதனால் நெய்வேலியில் நிலக்கரி எடுப்பது உலகத்துக்கே ஒரு புது அனுபவம்.

சுரங்க அதிகாரி இந்த விஷயங்களை விளக்கியவுடன் ஒரு கணம் தலையைச் சுற்றத்தான் செய்தது. ஆனாலும் இது ஒன்றும் பெரிய காரியம் இல்லை என்று அவரே கூறியது ஒருவாறு ஆறுதலாக இருந்தது.

** ** **

இவ்வாறு நிலக்கரிக்கு அடியில் இருக்கும் தண்ணீரின் பயங்கர சக்தியைக் குறைக்கும் வேலைதான் இப்பொழுது நெய்வேலியில் நடைபெற்று வருகிறது. தண்ணீரின் சக்தி வேகமாகக் குறைந்து வருவதாக நெய்வேலி நிலக்கரிச் சுரங்க அதிகாரிகள் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றனர். நிமிஷத்துக்கு இருபதினாயிரம் காலன் வீதம் இருபத்திநாலு மணி நேரமும் தண்ணீர் பாதாளத்திலிருந்து மேலே பூமிக்கு இறைக்கப்படுகிறது.

விஞ்ஞான முறையில் உலகம் வளர்ந்து வந்த சென்ற நூற்றாண்டில் நாம் அடிமைப்பட்டிருந்து விட்டோம். அதனால் நாம் போதிய அளவு யந்திர நுணுக்க உற்பத்தியில் முன்னேறவில்லை. இப்பொழுது நாடு சுதந்திரம் பெற்ற பிறகு நாம் எவ்வளவோ வகைகளில் முன்னேறியிருக்கிறோம். ஆனாலும் சில யந்திரங்களுக்கு நாம் மேல்நாட்டைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது. நிலக்கரி எடுக்கும் திருப்பணியில் வெற்றி பெற்று விட்டால் நாம் இந்த நிலையை மாற்றி விடலாம். இப்போது மேல்நாட்டிலிருந்து வந்த யந்திரங்களின் உதவியினால்தான் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் தண்ணீர் இறைக்கும் வேலை தடையில்லாமல் நடைபெற்று வருகிறது. அந்த யந்திரங்கள் இடைவிடாமல் இறைத்து வருவதால்தான் தண்ணீரின் சக்தி குறைந்து வருகிறது என்று அங்குள்ள நிபுணர்கள் சொல்லி வருகின்றனர்.

உலகில் எந்தக் காரியமுமே சாத்தியமில்லை என்பது இல்லை. ஆனால் எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் அதில் பரிபூரண வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கையுடன் பாடுபட வேண்டும். "நம்பினோர் கெடுவதில்லை. இது நான்கு மறை தீர்ப்பு!" ஆகையால் எந்தக் காரியத்திலும் உண்மையாக உழைத்தால் அந்த உழைப்பு பலன் அளிக்காமல் போகாது. நெய்வேலியில் இன்றையதினம் நிலக்கரிக்கு அடியில் இருக்கும் தண்ணீரின் சக்தியைக் குறைப்பதற்குப் பாடு பட்டுக் கொண்டிருக்கும் நிபுணர்களின் கையில்தான் இருக்கிறது தமிழ்நாட்டின் எதிர்காலம். அத்துடன் அந்த நிபுணர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்ட வேண்டிய கடமை நமது இந்திய சர்க்கார் கையிலிருக்கிறது. இந்திய சர்க்காரும் இன்றையதினம் நெய்வேலி நிலக்கரி சுரங்கத்தில் தண்ணீரின் சக்தியைக் குறைக்கப் பாடுபட்டுவரும் நிபுணர்களும் தென்னாட்டின் பொருளாதார வளர்ச்சியில் உண்மையிலே அக்கறை கொண்டு உழைப்பார்களானால் நிச்சயம் அதில் வெற்றி கிடைக்கும்.

இந்தியசர்க்கார் வட இந்தியாவைக் கவனிப்பதைப் போல் தென் இந்தியாவைக் கவனிப்பதில்லை என்று பெரும் புகார் இருந்து வருகிறது! சென்ற ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய சர்க்கார் அவ்வாறு நடந்துகொண்டு விட்டது!

ஆனால் இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய சர்க்கார் தென் இந்தியாவைக் கவனிக்க ஆரம்பித்திருக்கிறது. அதிலும் தென்னாட்டைப் பொன்னாடாக மாற்றும் நிலக்கரிச் சுரங்கத்தை வெட்டி நிலக்கரி எடுக்கும் திருப்பணியில் ஈடுபட ஆரம்பித்திருக்கிறது. இந்தப் பணியில் உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும், நாட்டின் நலத்தைக் கருதிச் சம்பந்தப்பட்டவர்கள் பாடுபட வேண்டும். அத்துடன்கூட இந்திய சர்க்காரும் இடைவிடாமல் நெய்வேலியில் உள்ள நிபுணர்களுக்கு ஊக்கமளித்து வந்தார்களானால் நிலக்கரி வெட்டி எடுக்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.

** ** **

நெய்வேலியில் பூமிக்கு அடியில் இருக்கும் நிலக்கரியை வெட்டி எடுப்பதற்கு என்னென்ன செய்து வருகிறார்கள் என்பதை நேரில் போய்ப் பார்ப்பதற்கு முன்னால் இன்னும் சில ரஸமான விஷயங்களைத் தெரிந்து கொண்டால் நல்லது. நெய்வேலியில் நிலக்கரி இருக்கிறது என்ற அதிசயத்தை யார் முதன் முதலில் கண்டு பிடித்துச் சொன்னார்கள்! சென்ற எட்டு ஆண்டுகளாக அந்த முயற்சியில் ஏன் பிரமாதமான வளர்ச்சி ஏற்படவில்லை! இப்படிப்பட்ட பெரிய சாதனைகளுக்கு முதலில் பூர்வாங்க ஏற்பாடுகள் செய்வதற்கு இத்தனை ஆண்டுகள் உண்மையிலேயே வேண்டியதுதானா! என்ற விவரங்களை எல்லாம் அடுத்த இதழில் தெரிந்து கொள்வோம். (தொடரும்)



மதுரை வீரன்

காந்தன்

“என்ன மிஸ்டர் காந்தன்! உங்கள் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! புதுப் புதுப் படங்களாகப் பார்த்துக் கொண்டு வருகிறீர்கள்”— என்று என் நண்பர் என்னைப் பாராட்டி என் முதுகில் ஒரு ‘ஷொட்டு’க் கொடுத்தார்.

தினசரி ரயில் பிரயாணம் செய்யும் ‘ரயில்வே கார்டை அதற்காகப் பாராட்டினால் அது அவருக்கு எப்படியிருக்குமோ அப்படித்தான் இருந்தது எனக்கும்.

முதலில், மூன்று மணி நேரம் உட்கார்ந்து படம் பார்க்கும் சிரமம்; அப்புறம் அந்தப் படத்திலுள்ள நல்ல அம்சங்களைத் தேடித் தொகுக்கும் சிரமம்; பிறகு படத்தைப் பற்றிய நம் அபிப்பிராயத்தைப் பத்திரிகைக்கு எழுதும் சிரமம்—இவ்வளவும் இருக்கின்றன.

கிருஷ்ணா பிக்சர்ஸார் தயாரித்திருக்கும் “மதுரை வீரன்” படத்தைப் பார்த்ததும் இன்னொரு புது சிரமமும் சேர்ந்து கொண்டது. படத்தைப் பற்றி அபிப்பிராயம் சொல்லுவதே சிரமமாகி விட்டது. வெகு காலமாக நம் நாட்டில் வழங்கி வரும் கதையைத் திரைப் படத்தில் கண்டு என்ன அபிப்பிராயம் சொல்லுவது!

ஆழமான கருத்துப் பொதிந்த கதைப் போக்கினால் சில படங்களை ரஸிக்கலாம்; அடுத்து அடுத்து வரும் நிகழ்ச்சிப் பின்னல்களின் சிக்கல்களைக் கொண்டு சில படங்களை ரஸிக்கலாம்; குபீர் என்று கண்ணீர் வருவிக்கும் சோக ரஸம் காரணமாகச் சில படங்களை ரஸிக்கலாம்; கதையில் விசேஷம் எதுவும் இல்லாவிட்டாலும் படத்தில் நடித்திருக்கும் நட்சத்திர நடிகர்களின் நடிப்புக்காகச் சில படங்களை ரஸிக்கலாம். கடைசியில் குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தது “மதுரை வீரன்”.

மதுரைவீரன் கதை பழைய கதை. எல்லோருக்கும் தெரிந்த கதை. ஆனால் கர்ண பரம்பரையாக வழங்கி வரும் நிகழ்ச்சிகளைத் தவிர ஆதார பூர்வமான சம்பவம் எதுவும் இக் கதையைப் பற்றி இருப்பதாகத் தெரியவில்லை.

வாரண வாசிப் பாளையாதிபதியின் மகனாகப் பிறந்தவன், வீரன் என்னும் பெயரோடு செருப்புத் தொழிலாளியின் வீட்டில் வளருகிறான். காட்டில் கண்டெடுத்த அந்தக் குழந்தையிடம் அவனும் அவன் மனைவியும் அதிகமான அன்பு பூண்டு விடுகிறார்கள். வயது வந்த வாலிபன் வீரனது வாழ்வில் ஒரு நன்னாள் உதயமாகிறது. தொட்டியம்பாளையத்து அரச குமாரியாகிய பொம்மி ஆற்று வெள்ளத்தில் விழுந்து விடுகிறாள். வெள்ளத்தில் குதித்து அவளைக் காப்பாற்றுகிறான் வீரன். ஆற்று வெள்ளத்திலிருந்து தப்பிய பொம்மி வீரன்மீது ஏற்பட்ட காதல் வெள்ளத்தின் கரை காணாமல் தவிக்கிறாள். அந்த வெள்ளத்துடன் அவள் மாமா நரசப்பனின் உள்ளத்தில் எழுந்த பொறாமைப் புயலும் சேர்ந்து கொள்ளுகிறது. நரசப்பனுக்கும் பொம்மிக்கும் திருமண ஏற்பாடு நடக்கிறது. திருமணத்தன்று வீரன் பொம்மியைச் சிறையெடுத்துச் செல்கிறான். அதிலிருந்து அவனுக்கு அதிர்ஷ்டம் ஆரம்பமாகிறது. வீரன், விஜயரங்க



சொக்கன் உதவியால் திருமலை நாயக்கரின் தளபதியாகி, அரண்மனை நடனப் பெண் வெள்ளையம்மாளின் காதலுக்கும் பாத்திரனாகிறான்.

"மதுரைவீரன்" படத்துக்கு நடுநாயகமாக விளங்குபவர் கதாநாயகன் எம். ஜி. ராமச்சந்திரன்தான். வீரன் என்ற பெயருக்கு ஏற்ப அவருக்குக் குதிரை சவாரி, யானை சவாரி, விற்போர், மற்போர், வாட்போர் முதலிய எல்லாவிதமான வீர சாகச வாய்ப்புக்களும் தாமாக வந்து வாய்க்கின்றன. கத்திச் சண்டையோடு நின்று விடாமல் காதல் புரியவும் அவருக்கு வாய்ப்புக் கிட்டுகிறது. எல்லா வாய்ப்புக்களையும் அவர் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு சக்கைப் போடு போட்டிருக்கிறார்.



பொம்மியாக நடிக்கும் பானுமதிக்கு இந்தப் படத்தில் காதல் புரியவும், கள வொழுக்கம் பேணவும், கண்ணகியைப் போல் கதறிக் கதறிக் கண்ணீர் உருக்கவும், வீராங்கனையாக வீர முழக்கம் செய்யவும் அரிய சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பங்களில் பானுமதியின் நடிப்பு நன்றாகவே இருக்கிறது.

பண்டைத் தமிழ் நாட்டு மரபுப்படி, கன்னிப் பருவத்திலிருந்த பொம்மி கன்னிமாடத்தில் இருந்து வருகிறாள். அப்பொழுது ஊர் மக்கள் ஒருவர் பின் ஒருவராக முறைப்படிக் காவல் புரிகின்றனர். வீரனுடைய முறை வந்த அன்று பிரமாதமான மழை கொட்டுகிறது. ஆம்; அது 'அவன் காட்டில் பெய்த மழை' என்று தான் கூற வேண்டும். அவன் காவல் இருக்க வேண்டிய தினத்தில் பெய்த மழைதான் பொம்மி—வீரன் காதல் பயிரைச் செழித்துத் தழைக்கச் செய்தது. அச்சமயம் பொம்மி அவனை அடிக்கடி அழைத்துப் பேசி உள்ளம் விம்மியதும், விஷயம் புரியாமல் வீரன் வெருண்டதும் நன்கு கலை கட்டியது.

காவல் தினத்தில் பெய்த மழை அவர்கள் காதலை வளர்த்ததும் அல்லாமல், வீட்டுக்குச் சென்ற வீரனுக்குக் குளிர் ஜுரத்தை யளித்து, காதலியை அவன் வீட்டுக்கே அனுப்பி வைத்தது! இவை யெல்லாம் திரைக்கதையின் ரஸமான பகுதிகள்.

மதுரைவீரனைக் கடவுளாகக் கொண்டு வழிபடும் முறை நம் நாட்டில் நெடும் பண்டைக் கால முதல் இருந்து வந்திருக்கிறது. அந்த அளவுக்கு அவன் பாராட்டப் பட்டதற்குச் சரியான காரணம் திரைக் கதையில் புலனாகவில்லை. எடுத்த காரியத்தைச் சரியாக முடிக்காமல் அரச தண்டனைக் குள்ளாகி அகால மரணம் அடைந்த மதுரைவீரனுக்கு வணக்கமும் வழிபாடும் செலுத்தும் காரணம் ஆராய்ச்சிக் குரியது. அது நல்ல முறையில் படத்தில் விளக்கம் பெற்றிருந்தால் சிறப்பா யிருந்திருக்கும். மதுரைவீரன் கதை நம் நாட்டில் வழங்கும் பழைய கதை என்பது மட்டும் அல்லாமல், திரைப்பட உலகத்துக்கும் பழைய கதைதான். ஏற்கனவே வெளியாகி யிருக்கிறது.

நடனப் பெண் வெள்ளையம்மாளாக நடிக்கும் பத்மினி ஆடி, ஓடி அழகாக நடித்திருக்கிறார். கண்களின் வீச்சினால் கருத்தைக் கவருபவருக்கு இப்படத்தில் வாள் வீசிப் பகைவரை வீழ்த்தவும் இடம் கிடைத்திருக்கிறது.

மாமா நரசப்பனாக நடிக்கும் டி. எஸ். பாலையா தமது அநுபவ நடிப்பினால் அந்த வில்லன் பாகத்தைச் சோபிக்கச் செய்கிறார்.

திரைக் கதை வசனம் இப்படத்தில் மிகவும் நன்றாயிருக்கிறது. பாடல்கள் கர்நாடக சங்கீத மெட்டுக்களிலேயே அமைந்திருப்பது மிகவும் பாராட்டுக்கு உரியது. படத்தின் ஆரம்பத்தில் வரும் லலிதா, ராகினியின் நடனம் கவர்ச்சியுடன் விளங்குகிறது. மொத்தத்தில் களிப்பூட்டும் கவர்ச்சிகரமான காட்சிகள் கொண்ட படம் "மதுரை வீரன்."



தேவியின் கடிதம்

வசுமதி ராமசாமி

அன்பு மிக்க சுஜாதா,

ஓய்ந்த நேரங்களில் பெண்களுக்குச் சிறந்த பொழுது போக்கு ரசமாக, இன்பமாக இருப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறாய். புது தில்லி போன்ற நகரங்களில், இருக்கும் பொழுது தான் போதாது. அப்படி இருக்க நீ ஏனோ இப்படிக் குறிப்பிட்டிருக்கிறாய். ஆனால் இன்பம், ரசம், எளிமை என எழுதியிருப்பதால் அதற்கு நான் விடை எழுதுகிறேன். குடும்பத்துக்குத் தேவையான கை வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன.



தவிர, சென்னை நகரத்தில் சென்றவாரம், 7, 8 தேதிகளில் "சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்து" மகாநாடு நடைபெற்றது. உள்ளூரிலிருந்தும், வெளியூரிலிருந்தும் நூற்றுக்கணக்கான எழுத்தாளர்கள் கூடிப்பேசினார்கள், சிரித்தார்கள், விவாதித்தார்கள். அதில் பெண்களும் கலந்து கொண்டு மகாநாட்டைச் சிறப்பித்தனர். எழுத்தாளர்களுடைய உற்சாகத்தையும் நன் மதிப்பையும் பார்க்கும்போது பெருமையாகத்தானிருந்தது. மற்றக் கலைஞர்களை உற்பத்தி செய்யும் கலைஞர்கள் நாங்கள் என்று நிமிர்ந்து நின்றார்கள் பேனா மன்னர்கள்.



பெண்களாகிய நமக்கு எழுதும் கலை மிகவும் பொருத்தமானது. ரசிகமணி டி.கே.சி. அவர்கள் கலை, கதைகள் அடுப்பங்கரையில் தான் பிறக்கிறது என்பார். அரிசி கொதிக்கும் உலைச் சத்தத்தில் ஓசை இன்பமும், உரலில் நெல் குத்தும்போது நாட்டுப் பெண்கள் பாடும் பாடலில் அபிநயமும் இருப்பதாகச் சொல்லி மகிழ்வார்.

நாம் தினந்தோறும் உடல் வளர்ச்சி, அறிவு வளர்ச்சி எல்லாம் அடையும் பாதையில் தான் முன்னேற முயற்சிக்கிறோம். அந்த முயற்சியில் தடை ஏற்படும்போது தான் நம் மனமும் சோர்ந்து விடுகிறது. அறிவு வளர்ச்சிக்குப் படிப்பது மிக அவசியம். அதை ஒட்டி மிகச் சிறந்த இன்பம் தரும் கலை எழுதும் கலையாகும். காகிதத்தையும், பேனாவையும் வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டால் எழுத வருமா வெனக் கேட்பாய். உண்மைதான். சங்கீதம் என்று எடுத்துக் கொண்டால் ஒரே பாட்டை அவரவர்கள் எத்தனை விதமான பாணியில் பாடுகிறார்கள்? அதில் எவ்வளவு நுட்பம், மாறுபாடுகள். குறைந்த காலத்தில் அதாவது ஒரு சட்ட திட்டமான கால வரைக்குள் சங்கீதத்தின் சகலமேன்மைகளையும் அறிவுறுத்துவதுதான் கலை. கதைகள் எழுதுவதும் ஓரளவு அவ்விதமே. கதைகளோடு பிறக்கிறோம். வாழ்கிறோம். சின்ன வயதில் அத்தை, பாட்டிகளிடம் கதை கேட்கிறோம். பெரியவர்களான பிறகு குழந்தைகளுக்குக் கதை சொல்லி இன்பம் அடைகிறோம். இருக்கிற விஷயத்தைக் கவர்ச்சிகரமாகக் கற்பனையோடு சொல்லுவதுதான் கதை. கதைச் செல்வத்தில் மற்றைய நாடுகளுக்கு நம் நாடு பின்னடையவில்லை. இன்று அவசர வாழ்க்கை. வாழ்க்கையை ஒட்டி ரசமாக எழுதப்படும் சிறுகதைகள் படிக்கும் வாசகர்கள் பல்லாயிரக் கணக்காக இருக்கிறார்கள். ஒவ்வொரு தனி மனிதருடைய வாழ்க்கையும் ஒரு முழு நாவலாகுமென்று ஒரு அறிஞர் சொன்னார்.




பெண்களாகிய நமக்கு எழுதும் ஆற்றல் நீறுபூத்த நெருப்பைப் போல் இருக்கிறது. புதுமையாக எழுத நம்மால் முடியும். அதை வளமையாகச் செய்ய நம்மால் சாத்தியமாகும். நம்மிடையே கவித்திறனும் குறைவில்லை. சிந்தனை செய்யும் சக்தி இருக்கிறது. உண்மையை ஒட்டி எழுதும் வசதி நமக்கு உண்டு. சிருஷ்டி செய்யும் சக்தி நம்முடைய செல்வம். இவைகளுக்கு மேல் உழைக்கும் வன்மை நமக்கு இருக்கிறது. இவைகளைச் சேர்த்து உருப்படுத்துவதற்கு வேண்டிய பொறுமையை இயற்கை நமக்கு அதிகமாகவே அளித்திருக்கிறது. நாம் ஏன் பேனா அரசிகளாக ஆக முடியாது?

நீ எழுத முயன்று பார். சிறந்த கலை மனத்தைத் தூய்மைப்படுத்தும். உன்னால் ஒரு இலக்கிய சிருஷ்டி செய்ய முடிந்தது என்று அறியும்போது உண்டாகும் இன்பத்துக்கு நிகரே வேறு இல்லை.



— பூமாதேவி

சர்வர் ஐயாத்துரை



சுகி

பள்ளிக்கூடத்துக்குத் தவறாது பணம் கட்டிச் செழிக்கச் செய்து, வேலைக்கு மனுமனுவாகப் போட்டுத் தபால் இலாகாவுக்கு மனு மனுவாகப் பணங் கொடுத்து, மனங் கசந்து போன வாலிபர் திருக் கூட்டத்தில் ஐயாத்துரை ஒருவன். "கழித்துக் கட்டப் பத்தாவது வரையில் படித்தது போதாது, சுருக்கெழுத்துக் கற்றுக் கொள்" என்றேன் அவனிடம். இதனால் அவன் ஏழையானான். அந்தப் படிப்போடு தட்டெழுத்தும் படி என்றபோது தட்டெழுத்திலும் (டைப்ரைட்டிங்கில்) வெற்றிக் கொடி பிடித்து வந்தான். பையனை ஏமாற்ற வேறு பரீட்சைகள் இல்லாத காரணத்தால், அவனுக்கு வேலை தேடித்தரும் பொறுப்பு என் தோளில் விழுந்தது! முடிவில் கை காட்டி போன்று சென்னை நகரப்பகுதிக்கு, ஓட்டல் சர்வராகக் கை காட்டிய பெருமை தவிர வேறு எந்தப் பெருமையும் என்னைச் சேராது.

சர்வர் ஐயாத்துரை பொல்லாதவன், உலகம் அறிந்த மேதை! இதை அவன் கடிதங்களே சொல்லுகின்றன.

எனக்கு வந்த மூன்று கடிதங்களில் இதோ முதற் கடிதம்.

அன்புள்ள கனம் கின அண்ணாச்சி!

நீங்கள் எனக்குத் தெய்வம். என் சோற்றுக்கு வழி சொன்ன சொக்கநாதர். உங்கள் பேச்சை நம்பியதால் பலருக்கும் இன்று அன்னமிடுகிறேன். என் கையை எதிர்பார்த்து ஒரு நாளைக்கு உண்பவர் தொகை ஆயிரமாயிரம். இது எனக்குப் பெருமை. முதன் முதலில், என் ஒரு வேளைச் சோற்றுக்காக நாறு பேருக்குப் போட வேண்டுமே என்று மனங் கூசினேன்; இப்போது இது போன்ற நல்ல தொழில் பூமிதனில் எங்கணும் இல்லை.

பத்துப் படித்த பாவலன் என்ற எண்ணம் ஒழிந்து பருக்கைக்குப் பசை தேடிய பையன் என்ற எண்ணம் பிறந்து விட்டது.

என்னுடைய விலாசம், மேற்பார்வை, "மங்களாம்பிகா பவன்" என்பதே சரி. நான் அதை மேற்பார்வை செய்கிறேன். என் கடிதங்களை அது மேற்பார்வை செய்கிறது. உங்கள் நண்பர் எனக்கு முதலாளியாக வாய்த்தது பற்றி எனக்குச் சந்தோஷம்: உங்களுக்கும் கை காட்டிய பெருமை உண்டு. சின்னப் பயல் இத்தனை திமிராக எழுதுகிறானே என்று எண்ணி விடாதீர்கள். ஓட்டலில் ஒரு வாரம் வேலை செய்து விட்டால் உலகத்தில் எதையும் அவன் 'சர்வ்' செய்ய முடியும் என்ற நம்பிக்கை வந்து விடும்; வராவிட்டால் கூட ஒரு வாரம் செய்தால் கட்டாயம் வந்தே ஆகவேண்டும்.

இங்கே எத்தனை வகை மனிதர்கள் வருகிறார்கள். குணங்களிலே எத்தனையோ பிரபுக்கள்! சிலரிடம் குறிப்பறிந்து நடக்கவேண்டும்; சிலரிடம் குறிப்பை எதிர்பாராமல், அவர்கள் சொன்னதைக் கேட்க வேண்டும். சிலருக்குப் பணம் இருக்கும். தின்ன மனசு இருக்காது; மனசு இருக்கும், பர்சு இருக்காது. மனமும் பர்சும் இருந்தால், டாக்டர் சொல்லிய கட்டளை நடுவாக வந்து விடும்! ஓட்டலுக்கு வரும் மக்கள் இனத்தில் இருப்பது போல், மன வேறுபாடு, குண வேறுபாடு வேறு எவரிடமும் இல்லை. எல்லாவகைக் கலையும் முடிவில் 'இன்பம்' என்ற முற்றுப்புள்ளிக்கு வருவதுபோன்று, இத்தனை மாறுபட்ட பேர்களும் "திருப்தி" என்ற வழிக்குச் செல்லவே வருகிறார்கள்.

ஓட்டலுக்கு வருகிறவர்களையும் சேர்த்துப் பாரதியார் 'இந்நாட்டு மன்னர்' என்று பாடி இருக்க முடியாது. இருந்தாலும் 'இந்நாட்டு மன்னர்', ஓட்டலுக்கு வெளியே ஓட்டலுக்

குள்ளே எல்லாரும் 'இந்நாட்டுச் சாப்பாட்டு ராமன்கள்' என்றே சொல்வேன். "லோகோ பின்ன ருசி" என்பதை இங்கே காணலாம். ஆதியில் பின்ன ருசி என்பதே பாடபேதமாகப் பின்னப் பட்டிருத்தல் வேண்டும். இந்த ருசியான பழமொழிக்கு விளக்கம் உப்பு போதும்.

எதிர் மேஜைக்காரர் உப்பு அதிகம் என்று சொல்லும் போதே, அகஸ்தியர் போன்ற இன்னொரு ஆத்மா இன்னும் உப்புக் கரைத்துக் கொண்டு வா என்பார். (உப்பை மிகுதியாக விரும்பும் இவரைக் கடலுண்ட அகஸ்தியரோடு சேர்க்க வேண்டியதுதானே!) சர்க்கரை விஷயம் ரொம்ப ரொம்பக் கசப்பான அனுபவம். 'சீனி போடு' என்பார்கள். தனி அதிகமாகி விட்டால் "ஏனப்பா ஒரு மூட்டையும் கொட்டி விட்டாயே!" என்று சீறுவார்கள். நீங்களே போட்டுக் கொள்ளுங்கள் என்று சர்க்கரைக் கிண்ணத்தையும் கரண்டியையும் வைத்து விட்டால், அவர்கள் யோகக்தான்! தோசைக்குப் போட்டுக் கொள்ளுகிறார்கள். ஒரு சிலர் சட்டினியில் சீனியைக் குழப்பி அணை கட்டி விளையாடுகிறார்கள்.



அப்பப்பா, ஓட்டலுக்குள் வேலை பார்க்க வந்த பிறகுதான் மனித குலம் உணர்விலே எத்தனை அடி ஆழம் அடிமைப் பட்டிருக்கிறது என்று அறிகிறேன். ஆதி முன்னோர்கள் மூவாசையுடன் விட்டது தவறு. ஓட்டல் ஆசை யென்ற நாலாவது ஆசை அவர்கள் காலத்தில் இல்லை. இப்போது இருக்கிறது. அல்லது மண்ணாசை ஒழியும் இக்காலத்தில் அதற்குப் பதில் ஓட்டலாசையை வைத்தால் என்ன! மக்களுக்கு ஆனந்தம் தரும் இடங்களில் முதன்மையானது ஓட்டல் என்பதில் யாருக்கு ஆட்சேபம்!

சண்டை போடவும் ஓட்டலுக்குள் வருகிறார்கள். சமாதானம் ஆகவும் இங்கே குவிகிறார்கள். பூலோகத்துச் சொர்க்கம் ஓட்டல். சொர்க்கத்தைவிட நரகத்தை விரும்புபவர்களும் உண்டு. "நான் எந்த ஓட்டலிலும் கை நனைத்ததில்லை" என்பவர்கள் பூலோக நரகத்தின் வாசிகள்தாமே.

நான் படித்த காலத்தில் கட்டிய பணத்தை உணவுப் பண்டமாக உண்ண வேண்டியவன்; உண்ணவில்லை; இன்றோடு வட்டியும் முதலுமாக எல்லாப் பண்டங்களும் காண்கிறேன்; ருசி அறிகிறேன். தித்திப்புகள் என் நாவிலே ராகமாலிகையாக இனிக்கின்றன. நவரசம் என்ன வென்பதும் தெரிகிறது; அறுசுவையோ, தெரிசுவையாகி விட்டது. அன்றாடம் அப்பளாம், பாயஸம், வடை உண்டு. அண்ணாச்சி, நான் சாம்பார் அண்டாவுக்குள் தவறி விழுந்தால், நாலு மணிநேரம் கழித்துத்தான் என்னைக் கண்டு பிடிப்பார்கள்; நீங்கள் சொர்க செய்த ஓட்டலின் பெருமையை இதைவிட எவ்வாறு நான் விவரித்துச் சொல்வது!

இங்கே அறிஞர்கள் வருகிறார்கள்; ஆராய்ச்சியாளர்கள் வருகிறார்கள். ஆராய்ச்சிக்குச் சிறு அத்தாட்சி "நம் நாட்டில் ஓட்டல் என்று போர்டு போடுகிறார்கள், வந்தவர்களை ஓட்டுவது என்று பொருளா! ஹோட்டல் என்றால் ஹோ ஹோ என்ற மிரட்டல் உள்ள இடமா! கபே என்றால் என்ன கபேயாம்! கப கப என்று பசிக்கும். நீ இங்கே சாப்பிட்டதும் கப கப, நிற்காது என்று அர்த்தமா! கப கப வென்று பணத்தை வாங்குகிறோம் என்று பொருளோ! கிளப் என்றாலும் இப்படித்தான். உன்னுடைய பணத்தைக் கிளப்பு என்று பொருளோ! ஓட்டல், கபே, கிளப் போனால் வருவது பவனம். பவன மென்றால் இதற்குள்ள சூட்சம அர்த்தங்கள் யாருக்குத் தெரியும்! (சு. கிறு அண்ணாச்சி உங்கள் வீட்டு அகராதிக்குக்கூட இத்தனை அர்த்தம் பவனத்திற்கு உண்டென்று தெரியாது.) பவனம் என்றால் காற்று; சில பவனங்களில் காற்றுத்தான் நமக்கு நல்லுணவாகத் தருகிறார்கள்; சில பவனங்களில் காற்றுக்காக நாம் திக்குமுக்காட வேண்டும். அடுத்தபடியான பொருள் தூற்றுகை. ஓட்டலுக்கு இந்தத் தூற்றுகை நடக்காத நேரம் எது! எதையாவது யாராவது தூற்றிக் கொண்டே இருக்கிறார்கள். மற்றொரு அர்த்தம் ஒதுக்கமான குகை. பவனங்களில் பல ஒதுக்கமான குகையாகத்தான் இருக்கின்றன. இந்த ஒதுக்கமான குகைக்குள் போய் உண்டு வருவதற்குள் நாம் குகைப் பிராணிபோல ஜடா முடியுடைக வரலாம். கரிபூசிய முகத்தோடும் வரலாம். இதற்கெல்லாம் மேலாக, பவனம் என்ற சொல்லுக்குச் சுத்தம் என்று அர்த்தம். சில பவனங்கள் வெகு சுத்தம்; வேறு சில பவனங்கள் அ(சு)சுத்தம்! காராட்டை, வெள்ளாடு, விஷப் பாம்பை நல்ல பாம்பு என்ற குழூஉக்குறி போன்று பவனம் பொருந்தக் கூடியது. கடைசியாக உள்ள அர்த்தம் கொஞ்சம் உபத்திரவமானது. "வாயுவின் பொருமல்" என்று பவனத்துக்குப் பொருள். ஓட்டல் பட்சணங்கள் நல்லனவாகச் செய்யாது போனால் வாயுவின் பொருமல் மட்டுமா! வயிற்றின் பொருமலையும் இணைத்து நிற்கும். அரண்மனை என்ற கருத்தும் பவனத்துக்கு உண்டு. பவனத்துக்குள்ள பொருள்கள் பல; நம் நாட்டுப் பவனங்களும் பல திறப்பட்டவை என்று வாசாம கோசரமாக விளக்கிக் கொண்டிருந்தார் ஆராய்ச்சியாளர். உண்மையாகச் சொல்லுகிறேன். இவரைப் போலக் கரண்டியைக் கடித்தும் உடைத்தும் சாப்பிட்டவர் இல்லை. பவனத்தோடு பவன் பற்றியும் அந்த ஆராய்ச்சியாளர்—கரண்டிப் பிரியர்—விட்டு வைக்கவில்லை.

பயன், என்னும் சொல்லுக்குத் தானாக யுண்டானவன் என்று பொருளாம். நல்ல வேளை, அகராதிக்காரர்கள் தானாக யுண்டான வன் என்று போட்டார்கள். தானாக யுண்ட வன் என்று போட்டிருந்தால், ரொம்பவும் ரசாபாசமாகப் போயிருக்கும். இதனால்தான் பயன் என்ற சொல்லையே நிறைய உபயோகம் செய்கிறார்கள் போலும். நானும் ஒரு நான் பயன் (தானாக உண்டாக்கும் முயற்சியுடைய வன்) ஆவேன். பயன்களின் தரம் குறைந் தால், தானாக உண்டு கொண்டிருக்க வேண் டும்; வாடிக்கைக்காரர்கள், வேடிக்கை பார்க்கவும் வரமாட்டார்கள்.

ஒரு மாதத்துக்குள் இத்தனை அனுபவமா! என்னைக் கேளாதீர்கள். பள்ளியில் படித்த பாடங்கள், கருக்கொழுக்கும் விரைவாக ஓடி விட்டன. என் அறிவை இரண்டு தடவைகள் டிக்காஷன் இறக்கினாலும் சாரம் இருக்காது. அத்தனையும் வண்டல். ஆனால் இங்கே நான் காண்பது, அறிவது, கேட்பது எல்லாம் பல வருஷப் படிப்பைவிடத் தரமும் எடையும் அதிகமுள்ளவை. அண்ணாச்சி! சோறு தின்ற நன்றிக் கடனால் இந்த உணர்ச்சி பிடிக்க வில்லை; உண்மையும் அனுபவமும் சேர்ந்த மன நெகிழ்ச்சி நான் சொல்வது.

நான் மட்டும் கல்வி மந்திரியாக வந்தால் (அல்லது ஓட்டல் மந்திரியாக வருங்காலத்தில் இலாகா வரும்) வருஷத்துக்கு ஒரு வாரம் எல்லாப் பையன்களும் சமையல், பரிமாறுதல் தெரிய வேண்டுமென்று சட்டம் செய்வேன். பள்ளிக்கூடத்தில் வெற்றி பெற, என்னென்ன திறமைகள் வேண்டுமோ, அதைப் பள்ளிக் கூடம் விட்ட பின்பே மாணவர்கள் அடை கிறார்கள்; வருஷத்துக்கு ஒரு வாரம் ஓட்டலில் ஒவ்வொரு மாணவனும் வேலை செய்தால், தன்னம்பிக்கையும் முக்கியமாக மனனம் செய் யும் வித்தைச் சக்தியும், வெகு சுலபமாக வந்து விடும் என்று சரஸ்வதி தேவியறியத் திட்ட மாகச் சொல்லுகிறேன்.

என்னிடமுள்ள குறைபாடு உங்களுக்குத் தெரியும். தேனைத் தித்திக்கும் பாரதியார் பாட்டில் 'அச்சமில்லை அச்சமில்லை அச்ச மென்பதில்லையே' என்று அச்சத்தில் ஆரம் பித்து, இல்லைக்கு வருவதற்குள் நந்தனார் பட்டபாடு பள்ளிக்கூட வேதியர்களிடம் பட் டிருக்கிறேன். என் மனன சக்தி அத்தனை மோசம். ஆனால் இங்கே, எத்தனை எதிர் மாறான நபர்கள், சக்திகள் வேலை செய்தும் நான் தன்னம்பிக்கையுடனும், நினைவு தப்பா மலும் ஆனந்தமாக மாலை மலர்ந்த ரோஜா மலர்போல அசைந்தாடுகிறேன்.

மாலை வேளை யென்றால் கூட்டத்துக்குச் சொல்லி முடியாது. சென்னை நகர மக்கள் அத்தனை பேரும் எங்கள் ஓட்டலுக்குள் இருக் கிறார்கள். என் ஞாபக சக்தியின் சோதனைக் காலம் மாலை வேளை. மாலை மலரும் இக் நோய்க்கு மருந்துவழைய் விற்பவன் அடியேன். எங்கெங்கிருந்தோ ஆர்டர்கள் கப கப வெனக் காதில் விழுந்து கொண்டிருக்கும். திருப்பி எதையும் கேட்கக் கூடாது. சொல்லப்பட்ட குறிப்புகள் சாரை சாரையாக நினைவில் இருக் கலாம்; கொண்டு வந்து வைக்கும்போது

சொல்லப்பட்ட மேஜையா! அதே மேஜையென்றாலும் சொன்ன ஆள்தானா! பக்கடாவுக்குப் பதில் பாதம் அல்வா கொடுத்தால் அக்கடாவென்று எழுந்து விடுவார். பதர் பேணிக்குப் பாதம் அல்வா வைக்கக் கூடாது. 'லைட்' காப்பிக்கு 'ஷ்டிராங்' கொண்டு வந்தால் பாரதம் பிறந்துவிடும்.

'காப்பிக்கு ஜீனி போடாதே' என்பவருக்கு, பால் பாயசம் போன்ற காப்பி குடிப்பவர் அருகாக இருந்தாலும், இடமாற்றம் பொருள் மாற்றம் செய்யக்கூடாது. இட்லிக்குச் சாம்பார் போடக் கூடாதவருக்குப் போட்டு விட்டால் நம் கண்ணிலே மிளகாய்த் தூளைத் தூவி விடுவார். தித்திப்புக்கு இன்ன ஓசிக்காரம் வேண்டுமென அதிகாரம் செய்பவருக்குக் காது கொடுக்கவும் வேண்டும்.



அண்ணாச்சி! அழிந்து வரும் மண்ணாசைக்குப் பதில் ஓட்டல் ஆசை இடம்பெறுவது உண்மையானால், தசாவதானம், சதாவதானம் என்ற சிறப்புகள் இன்னும் உயிர் வாழ்ந்துவருகின்றன. என் போன்றவர்கள் உருவில் அவை வளர்கின்றன. பத்துப் பேர், நூறு பேர் கேட்ட, சொன்ன பொருள்களுக்கு விடை சொல்லுகிறவர்கள் இந்த அவதானிகள். ஓட்டலில் வேலை செய்யும் நாங்களோ, ஆயிரம் பேர்கள் தரும் கேள்வி பதில்—இவற்றுக்குப் பதிலிறுக்கும் நடமாடும் அவதானிகள்.

பிறர் தொல்லை தருகிறார்கள் என்ற போதும் சிரித்துக் கொண்டே அடுத்தவர் தேவையை எதிர்பார்ப்பது அவதானம். என் பிழைப்பும் இப்படியே. அடுத்தவன் கணக்கில் ஆள் சாப்பிடுகிறான்; பில் கொடுக்க வேண்டியவன் பல்லைக் கடித்துக் கொண்டிருக்கிறான். இவையறிந்தும் என் மனசைத் தவலடை போல வைத்துக் கொண்டு மெதுவடைகள் பரிமாற வேண்டும். யந்திரத்தில் காசைப் போட்டதும் டிக்கெட் விழுவது போல நான் கொண்டு வந்தாலும் கோபப்படுவார்கள். இவர்கள் உல்லாசமாகப் பொழுது போக்க வந்திருப்பார்கள். ஒரு சிலர் நின்று கொண்டே ஆர்டர் தருவார்கள்; இவர்கள் நின்றாலும், தோசை வேகாமல் கல்லை விட்டுவராதே. தாமதம் ஆனால் சிவபிரானின் மன்மத தகனம் போன்று விழிப்பார்கள். நல்ல வேளையாக ஓட்டல் பிரியர்களுக்கு நெற்றிக் கண் இல்லாததால் நான் பிழைத்தேன்!

உள்ளே வாடிக்கைக்காரர்கள், வந்தாலும் அந்த நிமிஷம் அவசரமா, அவசரமில்லையா என்று மனசிற் புகுந்து பார்க்கும் ஆருடம் தெரியா விட்டால், நம் பிழைப்பு வேருடன் கெட்டுப் போகும். அரசியல் தந்திரம் போன்று எந்த விநாடியும் நன்மை செய்து கொண்டிருப்பது போலவே நான் பாசாங்கு செய்ய வேண்டும்; செய்ய வேண்டுமென்பது இரண்டாம் பட்சம். தயிரில் பொதுமிய வடை போல இருந்து சாப்பிடுவார்கள்; பாதாம் அல்வா போன்று பிருபிரு வெனக் கோபங் கொண்டு விரட்டிச் சாப்பிடுவார்கள். ஐயோ! இந்த ஓட்டல் பிரியர்களில் எத்தனை விதமான அன்பர்கள் இருக்கிறார்கள். விநாடிக்கு விநாடி ஓட்டல் மனிதனைப் போல மாறும் பச்சோந்திகள் பிராணிகள் இனத்தில் இருக்காது; இருந்தாலும் ஓட்டலுக்குள் அவை வராது.

சாப்பாட்டு ரசிகர்களில் எத்தனை வகை தெரியுமோ. 'உனக்கு எது இஷ்டமோ அதைக் கொண்டுவா'—இது ஒரு வகை. நான் எதைச் சொல்ல விட்டுப் போகிறேனோ அதைக் கொண்டு வரச் சொல்லும் அடுத்த வகையார். இன்னுஞ்சிலர் சிறு குழந்தைகள் எழுதியதை அழித்தழித்துப் பழைய இடத்துக்கும் வராமல், புதிய உருவமும் அடையாமல் அவதிப்படுவதுபோலப் பட்சணவகையில் அவதிப்படுவார்கள்.

என் வரையில் அவர் தொழில் எனக்கு முக்கியமில்லைதான். அவர் பணங் காசின் அன்பும் தெரிய வேண்டாம். அவர் விரும்பும் உணவுப் பண்டம் என்னென்ன என்பது தெரிந்தால் போதும். இதுவே நான் தெரிய வேண்டிய ஆதியும் அந்தமும். எனக்குள்ள ஒரு முகம் ஆறுமுகமாகவும், இரு கை பன்னிரு கையாகவும் வியாபித்து வேலை செய்வது என் கடமை. ஒரு ஓட்டலின் சிறப்பு, வருமானம், பெயர் ஆகியவை சர்வர்களின் கோணாத முகத்தையும், குறிப்பறியும் திறனையும் பொறுத்திருக்கின்றன.

மனிதன் உயர்வு தாழ்வு, ஏற்றம் குறைவு மறந்து சம—அந்தஸ்துடன் பழகும் இடம் ஓட்டல்; என்றாலும் தன்னைச் சினிமா நட்சத்திரமாக எண்ணும்படி நடக்கிறவர்களும் வருகிறார்கள்; மிகப் பெரிய பணக்காரன் என்று பிறர் எண்ணும்படி விரல்களைத் துடைத்து மோதிரம் பளிச்சிட வைப்பார்கள். உண்மையான வாழ்க்கையை மறைப்பதுதான் இலக்கியமோ! அல்லது உரைப்பதுதான் இலக்கியமோ! இங்கே பணக்காரர்கள் ஏழைகள் போலவும், ஏழைகள் பணக்காரர்களாகவும் உலாவுகிறார்கள்.

நான் எழுத்தாளன் இல்லை; தப்புத்தவறாக ஏதேனும் எழுதியிருப்பேன். மற்றும் விவரங்கள், சக தொழிலாளிகள் குறித்து மற்றொரு முறை எழுதுகிறேன். ஊரும், உறவினரும் குறித்து எண்ணவே பொழுதில்லை. இடுப்பொடிய வேலை, இனிமையான உணவு உண்டிகள்; சுகமான நித்திரை இம்மூன்றையும்விட, மனித வாழ்க்கையின் பற்றுக்கு வேறு என்ன வேண்டும்!

தங்கள் அன்பான
சர்வர் ஐயாத்துரை

கல்கியின் அமர தாரா



அத்தியாயம் 10

மனம் கலங்கியது

படத்தைப் பார்த்தது முதல் என் மனம் நிலைகொள்ளாமல் தவித்தது. இந்துவைப் பற்றிய ஒரு சினிமாப் படமே என் உள்ளத்தில் ஓடிக்கொண்டிருந்தது. அவளுடைய திறமையைப் பற்றிய வியப்புத்தான் எல்லாவற்றுக்கும் மேலாக எழுந்துகொண்டிருந்தது.

இந்தப் படத்தில்தான் இந்து எத்தனை அழகாக நடித்திருக்கிறாள்? கதையும் அவளுடைய அன்னை தந்தையைப் பற்றியதுதான். அதையும் எவ்வளவு அழகாகச் சித்திரித்திருக்கிறாள்? படத்தில் உள்ள மற்ற அம்சங்கள் நன்றாக இருந்த போதிலும், படத்தின் வெற்றிக்கு இந்துதான் காரணம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

இந்துவின் படத்தைப் பார்த்து ஸ்ரீமதி ஹார்வி 'சினிமா நட்சத்திரம் மாதிரி இருக்கிறாளே!'- என்று வியந்தது என் நினைவுக்கு வந்தது.

பாவம்! இந்துவுக்கு முதலில் இதில் பிரவேசிக்க எவ்வளவு தயக்கமாக இருந்திருக்கும்? அந்த மனோகரிடம் அவளுக்கு வருவதற்குச் சூழ்நிலையின் நிர்ப்பந்தம்தான் காரணமாக இருந்திருக்கும். இல்லாவிட்டால் குங்குமத்துறைப் பண்ணையார் மந்திரமூர்த்தியைப் போன்ற சினிமாவை வெறுக்கும் ஒரு மனிதரால் வளர்க்கப்பட்ட பெண் இப்படி நடிப்பதற்குத் துணிந்திருக்க முடியுமா?

இந்துவின் நிலையைக் கற்பனை செய்துகொண்டு பார்த்த போது எனக்கு மனம் உருகிப் போய்விட்டது.

நல்ல வேளையாக இப்போதாவது சௌக்கியமாக இருக்கிறாளே. சந்தோஷமாக இருக்க மாட்டாள். ஆனால் கஷ்டப் படாமல் இருப்பாளல்லவா? அந்த சந்தோஷத்தையும் அவளுக்கு அளிக்க நான் அவளிடம் போய்விடப் போகிறேன். அதன் பிறகு வாழ்க்கையே ஆனந்த மயமாக இருக்கும்.

இவ்வாறெல்லாம் சிந்தனை செய்துகொண்டே நான் காரை ஓட்டிக்கொண்டு போனேன். அத்தனை நேரம் பேசாமலிருந்த கலோசனு, "என் ரமேஷ்! இப்போதாவது உனக்கு நிச்சயமாயிற்றா? அவள் யாரென்று தெரிந்ததா?" என்று கேட்டான்.

"தெரிந்தது. அவள்தான் என்று நானும் நம்புகிறேன்."

"இல்லையென்று ஒரேயடியாகச் சாதித்தாயே. நான் அவனுக்குக் கடிதம் எழுதப் போகிறேன்."

"லீலா! நான் சொல்வதை நீ எப்போதும் கேட்பதில்லை. தயவு செய்து இதை மாத்திரம் கேள். வீணுக வம்பை விலைக்கு வாங்கிக் கொள்ளாதே. அப்பாவுக்குத் தெரிந்தால் அவருக்கு அடியோடு பிடிக்காது."

"அது வாஸ்தவம்தான்."

"மேலும் அவன்தான் சௌக்கியமாக இருக்கிறுனென்று தெரிகிறது. நாம் மறுபடியும் அவனுடைய வாழ்க்கையில் குறுக்கிடுவானேன்? அதனுல் யாருக்கும் நன்மை இல்லை."

"சரி! ரமேஷ். நான் எழுதவில்லை."

இந்தச் சந்தர்ப்பத்தில் நான், "இந்தச் சினிமாவில் நடித்த பெண்ணைப் பற்றியா நீங்கள் பேசுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"ஆமாம்! இவள் எங்கள் வீட்டில் கொஞ்ச நாட்கள் இருந்தாள். இது ஒரு அதிசயமில்லையா?"

"அப்படியா?"

"ஒன்றுமே தெரியாத அப்பாவிப் பெண்ணுக இருந்தாள். இப்போது எவ்வளவு கெட்டிக்காரியாகிவிட்டாள்!" என்ருன் ரமேஷ்.

"ஏன் அவள் உங்கள் வீட்டை விட்டுப் போய் விட்டாள்?"

"அது ஒரு கதை. அதைப் பிறகு சொல்கிறேன்" என்ருன் ரமேஷ்.

அவனுடைய குரலின் தொனியிலிருந்து அதைப் பற்றிச் சொல்ல அவனுக்கு இஷ்டமில்லை என்று தெரிந்தது.

எனக்கு அப்போது என்ன தோன்றியது தெரியுமா? இந்துவைப் பற்றிய அவதூருன விஷயங்களை இவர்களும் நம்புகிருர்கள். ஆனுல் பத்மநாபனைப் போல் சுயநல நோக்கமில்லாதபடியால் அதைப் பற்றிக் கூற இவர்கள் விரும்பவில்லை என்று எண்ணினேன்.

அவர்களை விட்டுவிட்டு நான் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தபோது மணி பத்து அடித்து விட்டது. எனக்குச் சந்தோஷத்தினுல் மனம் நிறைந்திருந்தது. சாப்பிடப் பிடிக்கவில்லை. சமையல்காரனிடம் எனக்குப் பால்மாத்திரம் கொண்டு வரச் சொல்லி விட்டுப் படுக்கையில் போய்ப் படுத்துக் கொண்டேன்.

இந்து இந்த வீட்டில் இருந்தால் இப்படியா சூனியமாக இருக்கும்? வீடே என்ன களையாக இருக்கும்? எவ்வளவு சுத்தமாகவும், ஒழுங்காகவும் இருக்கும்? இந்தமாதிரி சாப்பிடாமல் படுத்துக் கொள்ள விடுவாளா? சாதத்தைப் பிசைந்து எடுத்துக் கொண்டு வந்து கொஞ்சமாவது சாப்பிட வேண்டும் என்று வற்புறுத்துவாள். அதற்கு மேலும் மறுத்தால், "நானும் சாப்பிட மாட்டேன்" என்று பயமுறுத்துவாள்.

ஆமாம். நான் இன்னும் அவளைப் பழைய மாதிரியே இருப்பாளென்று நினைத்துக் கொண்டிருக்கிறேனே. எப்படி மாறியிருக்கிருளோ? பணம், புகழ், அந்தஸ்து எல்லாம் சேர்ந்து வந்திருக்கிறதல்லவா? வீடு வாங்கக் கூடிய அளவுக்குச் செல்வம் சேர்ந்து விட்டது. இன்னும் எவ்வளவு சம்பாதித்திருக்கிருளோ? அப்படி இருக்கும்போது பழைய மாதிரியே இருப்பாளா? ஒருவேளை மனம் மாறியிருக்கலாமல்லவா? பணம் யாருடைய மனத்தையும் மாற்றிவிடக்கூடிய வஸ்துவாயிற்றே.

சே! சே! என்ன இப்படி நினைக்கிறேன். இந்தச் சந்தேகம் பிடித்த வக்கீல்களுடனும், வாதி, பிரதிவாதிகளுடனும் பழகிப் பழகி எனக்குக்கூட அவர்களை மாதிரி சந்தேகப் பிசாசு பிடித்துக் கொண்டு விட்டது போலும்.



என் அருமை இந்துவைப் பற்றியா இவ்வாறெல்லாம் எண்ணுவது? அவள் என்னை மறந்திருக்கவே மாட்டாள். பின் ஏன் என் நெஞ்சத்தில் இப்படி ஒரு எண்ணம் எழுந்தது?

சற்று நேரம் யோசித்தேன். நான் அவ்வாறு எண்ணியதற்குப் பத்மநாபனின் விஷந் தோய்ந்த வார்த்தைகள் ஒரு காரணம். இரண்டாவதாக அவளிடம் எனக்கே சிறிது பொருமை உணர்ச்சி ஏற்பட்டிருந்தது. எனக்கே சொந்தமான இந்துவைப் பற்றி அத்தனை பேர் பாராட்டி எழுதுவதும், பேசுவதும் எனக்கு உள் அந்தரங்கத்தில் சம்மதமாக இல்லை. அவள் முழுதும் எனக்கே உரியவள் என்ற எண்ணத்தை என்னால் போக்கிக் கொள்ள முடியவில்லை. இது தெரிந்ததும் எனக்கே அவமானமாக இருந்தது.

அவளைக் காப்பாற்ற என்னால் முடியவில்லை. அவள் தன் திறமையை வெளியிட்டுப் புகழுடைவதைப் பார்த்து நான் பொருமைப்படுவதா? 'ஏ! வஞ்சக நெஞ்சமே நீ எங்கிருக்கிறாய்? இப்படிப் பட்ட பாதக எண்ணங்களை யெல்லாம் எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்?' என்று என்னை நானே கேட்டுக்கொண்ட பின்னர் மறுபடியும் மனம் தெளிவடைந்தது.

இந்துவின் மீது எனக்கிருந்த அளவிலாத அன்பினால் தான் இப்படி ஒரு எண்ணம் எழுந்தது என்று அறிந்து சற்றுச் சமாதான மடைந்தேன்.

உடனே எழுந்து உட்கார்ந்து இந்துவுக்குக் கடிதம் எழுதத் தொடங்கினேன். இரவு இரண்டுமணி வரையில் ஏதேதோ எழுதி எழுதிக் கிழித்துப் போட்டேன். எப்படி எழுதுவது? என்ன விதமாய் என் உணர்ச்சிகளைச் சொல்லுவது என்றே புரியவில்லை. திடீரென்று இந்துமதி என்னிடமிருந்து விலகிப் போய் நின்றாள்.

அவளுடைய நடிப்பைப் புகழ்ந்து எழுதுவதா? அவளுடைய தைரியத்தைப் பாராட்டி எழுதுவதா? அல்லது அவளுடைய கஷ்டங்களை யெல்லாம் குறித்துப் பரிதாபப்பட்டு எழுதுவதா? அல்லது என் அன்பைக் கொட்டி எழுதுவதா? எது அவளுக்குப் பிடிக்கும்? இது எனக்குப் புரியவில்லை.

கடைசியில் இந்துவைப் போய்ச் சந்திப்பது என்றும், நேரில் பார்த்து எல்லாவற்றையும் விவரமாகக் கூறுவது என்றும் தீர்மானித்துக் கொண்டு தூங்கிப் போனேன்.

மறுநாளே அமரதாராவின் விலாசத்தைக் கேட்டு ஒரு பத்திரிகையாளருக்கு எழுதினேன். உடனேயே பதிலும் வந்தது. அதில் இந்துவின் விலாசத்தைக் கண்டதும் எனக்கு இந்துவையே பார்த்து விட்டது போல் சந்தோஷமாக இருந்தது.

நான் சென்னை போவதாகச் சொன்னதும் பத்மநாபன், தனக்கும் வேலையிருப்பதாகவும், தானும் வருவதாகவும் கூறினார். எனக்கு இதற்கு அவ்வளவாகச் சம்மதமில்லை என்றாலும், அவர் வருவதை நான் தடுக்கவா முடியும்? கலோசனாவும் கிளம்பினாள். அவளுக்



குத் திடீரென்று தன் சிநேகிதிகளையெல்லாம் பார்க்க வேண்டுமென்று ஆசை வந்து விட்டது. இது ஒரு சாக்குத்தான் என்றும், அவள் என்னுடன் வர வேண்டும் என்பதற்காகவே வருகிறாள் என்றும் எனக்குத் தோன்றியது.

சென்னைக்கு நாங்கள் போய்ச் சேர்ந்த மறுநாள் நான் அமரதாராவின் வீட்டைத் தேடிச் சென்றேன். அங்கே தான் எனக்கு எப்பேர்ப்பட்ட ஏமாற்றம் உண்டாயிற்று. எனக்கு இந்துமதியின் மீது வெறுப்பே உண்டாகி விட்டது என்று சொல்ல வேண்டும்.

இந்துவைப் பார்க்க நான் ஆவலுடன் போய்க் கொண்டிருந்த போது பற்பல விதமாகக் கற்பனைகள் செய்து கொண்டே போனேன்.

நான் சென்றவுடன் இந்து ஆவல் ததும்ப ஓடி வருவாள் என்றும், அன்பு பொங்கப் பார்ப்பாள் என்றும் கற்பனை செய்து கொண்டேன்.

பிறகு பத்மநாபன் கூறிய விஷ வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

'பத்மநாபன் கூறியதெல்லாம் பொய் தான். சந்தேகமில்லை. ஆனால் இந்து முன்மாதிரியே இருப்பாளா? குழந்தை மாதிரி என்னை நேசித்த அதே இந்துமதியை நான் இன்று பார்ப்பேனா? அல்லது அகம்பாவம் கொண்ட ஒரு நடிகையைப் பார்ப்பேனா? இப்போது இந்து உலகமறிந்த, அனுபவசாலியான புகழ்பெற்ற பெண்மணியாகி விட்டாள். குங்குமத்துறை இந்துமதிக்கும், அமரதாராவுக்கும் எத்தனையோ வித்தியாசங்கள் இருக்கும்' என்று எண்ணினேன்.

கடைசியில் அவளைப் பார்த்த உடனே என் உணர்ச்சிகளை வெளிக் காட்டிக் கொள்ளக் கூடாதென்றும், நிதானமாகவும், விளையாட்டாகவும் பேசுவதென்றும் தீர்மானித்துக் கொண்டேன்.

ஆனால் விளைந்த விபரீதத்தை இப்போது நினைத்துப் பார்க்கும்போதுகூட வருத்தமாக இருக்கிறது.

அத்தியாயம் 11

கனல் அணைந்தது

நான் மாத்திரம் அன்று இந்துவைப் பார்த்தவுடனே அவளை அன்புடன் அழைத்து மனம் விட்டுப் பேசியிருந்தால் எவ்வளவோ தொல்லைகள் விளையாமல் இருந்திருக்கும்.

சந்தேகப் பிசாசு வாழ்க்கையை அடியோடு குலைத்து விடுகிறது. பாவம்! புண்பட்ட இந்துவின் நெஞ்சை வறண்ட குரலில் பேசி இன்னும் புண்ணாக்கினேன். "பத்மநாபன் கூறியது உண்மை" என்றேன். அதைச் சொல்லும்போதே 'அட பாவி! இப்படிச் சொல்லுகிறாயே!' என்று இதயத்தின் அடிவாரத்திலிருந்து ஒரு குரல் கேட்டது. ஆனால் இந்துவின் அலட்சிய பாவத்தை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

என்னைப் பார்த்த உடனே இந்துவின் கண்களில் திகைப்புத் தான் காணப்பட்டது. நான் எதிர்பார்த்த மாதிரி அன்பு என்னும் அமிருததாரை பெருகிப் பாய்ந்து என் இதயத்தில் வந்து கலக்கவில்லை. எங்களுக்கு நடுவில் யாரோ ஒருவர் ஆழமான பள்ளத்தை வெட்டி விட்டது போலத் தோன்றியது.

அன்று நான் அடிபட்ட பறவையைப் போலிருந்தேன். பத்மநாபன் என்னைப் பார்த்ததும், "எங்கே போயிருந்தீர்கள்?" என்று கேட்டார்.

"நண்பன் வீட்டுக்குப் போயிருந்தேன். சுலோ எங்கே?" என்று கேட்டேன்.

"மாடியில் இருக்கிறாள்" என்றார் பத்மநாபன். முதலில் அவர் குரலில் இருந்த கடுமை மாறிக் கனிவு இருந்ததாகத் தோன்றியது.

நான் மாடிக்கு ஓடிச் சென்றேன். யாரிடமாவது என் மன வேதனையை அப்படியே கொட்டி ஆறுதல் பெற வேண்டும் போலிருந்தது எனக்கு.

இந்துவின் மீது கோபம் கோபமாகப் பொங்கி வந்தது. என் இதயத்தில் எரிமலைகள் அக்னிக் குழம்பைக் கக்கின.

"போய் வாருங்கள்" என்று இந்து கூறியது ஒவ்வொரு தடவை நினைவுக்கு வந்த போதும் ஒரு பெரிய கொதிக்கும் பாறாங்கல் என் நெஞ்சில் வெடித்துச் சிதறியது. ஐந்து வருஷங்களாகப் புனிதமான யாக குண்டத்து அக்னியைக் காப்பாற்றுவது போல் நான் அவளுடைய நினைவை என் நெஞ்சம் என்னும் ஹோம குண்டத்தில் காப்பாற்றி வைத்திருந்தேன். அதன்மீது எப்பொழுதாவது சாம்பல் பூக்கும்படி விட்டிருக்கிறேனா? 'ஒரு கணமேனும் அதன் உஷ்ணம் குறைந்திருக்கிறதா? அதை எவ்வளவு பக்தி சிரத்தையோடு காப்பாற்றினேன்? அவளுடைய நினைவே புனிதமானதென்று நம்பியிருந்தேனே?

தக்ஷிண ரெயில்வே

டெண்டர் நோட்டீஸ்

டெண்டர் நெ. S/MISC/56/2 கழித்து ஒதுக்கப்பட்ட அண்டர் பிரேம்ஸ் இரும்பு அல்லாத மற்ற உலோக சாமான்களின் விற்பனை

ரயில்வேயாரால் கழிக்கப்பட்ட வாகன், லாரி அண்டர் பிரேம்கள், பாய்லர்கள் மெஷின்கள், இரும்பல்லாத மற்ற உலோக சாமான்கள் ஆகியவற்றை வாங்கி அப்புறப் படுத்த சீலிட்ட டெண்டர்கள் கோரப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட பொருள்கள் பெரம்பூர், ஹூப்ளி, மைசூர் இவ்விடங்களில் உள்ள ஜெனரல் ஸ்டோர் டெப்போக்களிலும் அரக்கோணம் என்ஜினீயரிங் ஓர்க்ஷாப்புகளிலும் எழும்பூர் டிராபிக் யார்டிலும் இருக்கின்றன. டெண்டர்கள் கண்ட்ரோலர் ஆப் ஸ்டோர்ஸ் ஆபீஸ், தக்ஷிண ரயில்வே (பெரம்பூர்), அயனாவரம், சென்னை - 23 என்ற விலாசத்தில் 8-5-56 பிற்பகல் 3 மணி வரை ஏற்றுக்கொண்டு மறு நாள் 9 - 5 - 56 காலை 11 மணிக்கு பரிசீலிக்கப்படும்.

டெண்டர்களை, அதற்கான பாரங்களில்தான் பூர்த்தி செய்ய வேண்டும். டெண்டர் பாரம் பெற விரும்புவோர் முழுப் பெயர், விலாசம் முதலியவைகளைக் குறித்து பாரம் ஒன்றுக்கு ரூ. 5/- வீதம் ரொக்கமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ செலுத்தி கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரியின் காரியாலயத்திலிருந்து டெண்டர் பாரங்களைப் பெறலாம். (இப்பணம் திருப்பித் தரப்படமாட்டாது) மற்ற எவ்வகையிலும் அனுப்பும் தொகை அங்கீகரிக்க இயலாது. டெண்டர் பாரங்கள் மாற்றத் தக்கதல்ல. டெண்டர் பாரங்கள், வாராந்திர வேலை நாட்களில் காலை 10-30 முதல் மாலை 3 மணி வரையிலும், சனிக்கிழமைகளில் காலை 10-30 முதல் பகல் 12 மணி வரை கொடுக்கப்படும்.

பல இடங்களில் விற்பனைக்குள்ள இப்பொருள்களை, டெண்டர் பாரத்துடன் கொடுக்கப்படும் அனுமதிச் சீட்டைக் காண்பித்து அப்பொருள்களைப் பார்வையிடலாம்.

டெண்டர் பாரம் கோரி செய்யப்படும் விண்ணப்பங்கள் 5-5-56ம் தேதி பகல் 12 மணிக்கு மேல் அங்கீகரிக்கப்பட மாட்டாது.

P. N. TALATI
கண்ட்ரோலர் ஆப் ஸ்டோர்ஸ்



Price : Rs. 2/4
plus postage.

சரித்திரப் பிரசித்தி வாய்ந்த சந்திப்பு

ருஷ்யத் தலைவர்களின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்திய விஜயம் சம்பந்தமான போட்டோப் படங்கள் அடங்கிய அழகிய ஆல்பம். மற்றும்

ருஷ்யத் தலைவர்களின் பர்மா, ஆப்கானிஸ்தான் விஜயம் சம்பந்தமான போட்டோ ஆல்பங்களும், எதிர்பாருங்கள்.

ஆர்டர் அனுப்ப வேண்டிய விலாசம்:

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 199, மவுண்ட் ரோடு, மதராஸ்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், C/17, மெஜஸ்டிக் சர்க்கிள், பெங்களூர் சிட்டி

V/O MEZDUNARODNAYA KNIGA, Moscow 200, U.S.S.R.

அந்த அக்னியை, ஐந்து வருஷங்களாக நான் பாதுகாத்த அந்தப் புனிதமான கனலை இந்து திடீரென்று குளிர்ந்த நீரைக் கொட்டி அணைத்து விட்டாள். இப்போது அந்த ஹோம குண்டத்தில் விகாரமான கரிதான் மீதியிருந்தது. அதைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை. அதை மறுபடியும் பற்ற வைக்கவோ, அல்லது அதை எடுத்து வெளியே எறிந்து விடவோ நான் அசக்தனாகி விட்டேன்.

ஐயோ, இந்து! நான் எவ்வளவு ஆசையுடன் என் உயிரைக் காப்பாற்றிக் கொண்டேன். எல்லாம் உனக்காகத் தானே. உன்னை ஒரு கணமேனும் நான் மறந்திருப்பேனா? இப்படி என்னை மோசம் செய்து விட்டாயே!

நீ செத்தாவது போயிருக்கக் கூடாதா? அப்போதுகூட எனக்குத் துயரம்தான் ஏற்பட்டிருக்கும். துயரத்திலும் அன்பின் இனிமை கலந்திருந்திருக்கும். இப்போது என்னைச் சித்திரவதை செய்து விட்டாயே. உன் நினைவு எனக்கு அளித்து வந்த ஆறுதல் எங்கே போயிற்று? இப்போது அதுவே உப்புத் தாளால் தேய்ப்பது போல் நெஞ்சை அறுக்கிறதே!

எனக்கு நினைவு வந்தபோது சுலோசனா என் எதிரில் நின்று கொண்டிருந்தாள். நான் மாடியின் கடைசிப் படியில் உட்கார்ந்திருப்பது அப்போது தான் எனக்குத் தெரிந்தது.

"என்ன இது? உட்கார உங்களுக்கு வேறு இடம் கிடைக்கவில்லையா?"

"உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்."

"உண்மையாகவா?"


"ஆமாம்! சற்று நேரம் கடற்கரைக்குப் போய் விட்டு வருவோமா?"

"கட்டாயம் போகலாம். நானே உங்களைக் கேட்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தேன். இங்கே எனக்கும் பொழுதே போகவில்லை. இதோ அப்பாவிடம் சொல்லி விட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு விடுவிடென்று கீழே இறங்கிப் போனாள்.

நாங்கள் கடற்கரைக்குச் சென்று மணலில் உட்கார்ந்தோம். மணலின் சூடு இன்னும் ஆறவில்லை. ஆனால் ஜிலுஜிலுவென்று காற்று சுகமாக வீசியது. அந்தச் சூழ்நிலை என் மனம் அப்போது இருந்த நிலைக்குப் பொருத்தமாக இருந்தது. உள்ளம் இந்து பேசிய விதத்தால் கொதித்துக் கொண்டிருந்தது. வெளியே சுலோசனாவுடன் குதூகலமையாகப் பேச முயற்சித்துக் கொண்டிருந்தேன்.

மணலில் போய் உட்காரும் வரையில் என் மனம் முழுவதையும் சுலோசனாவிடம் திறந்து காட்டி ஆறுதல் பெற வேண்டும் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். என் மனம் அப்படி மறுகிக் கொண்டிருந்தது. சொன்னால் தான் நெஞ்சிலுள்ள துன்பம் குறையும் என்று தோன்றியது.

மணலில் போய் உட்கார்ந்ததும் என் அறிவு சற்றுத் தெளிவடைந்தது. ஜன்னலுக்கு வெளியே உள்ள மரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் வரை நமக்கு ஜன்னல் கம்பிகள் கண்களில் தென்படவே செய்யாது. ஆனால் பார்வையை மிகச் சிறிதளவு உள் பக்கம் திருப்பினால் உடனே கம்பிகள் மட்டும் தான் தெரிகிறது. வெளியே உள்ள



மரங்கள் மறைந்து போகின்றன. அந்த மாதிரி நான், இந்து பேசியவிதத்தையே எண்ணிக் கொண்டிருந்தேன். திடீரென்று அவளிடம் நான் வைத்திருக்கும் பரிசுத்தமான பிரேமை, அளவிலாத அன்பு என் கண் முன் வந்து நின்றன. உடனே அவள் மீது எனக்கிருந்த கோபம் மறந்து போய் விட்டது. சற்றுநேரம் மறந்ததே தவிர கோபம் முழுதும் மறைந்து விடவில்லை.

சுலோசனாவிடம் இந்துவைப் பற்றிச் சொல்ல எனக்கு மனம் வரவில்லை. நான் சொன்னேனானால் அவள் இந்துவைப் பற்றிக் குறைவாகப் பேசுவதை நான் கேட்டுச் சகித்துக் கொள்ளும்படி நேரிடும். ஏற்கனவே இந்துவைப் பிடிக்காதவளிடம் இன்னும் அவள் பொருமை கொள்ளும்படியான விஷயத்தை எதற்காகச் சொல்வது? அதனால் உண்மையில் எனக்கு மனச் சாந்தி கிடைத்து

விடப் போகிறதா? ஒரு நாளும் இல்லை. இந்த நெஞ்சம் இப்படியே குமுறிக் கொண்டுதான் இருக்கும். பூமியின் அடியில் கொந்தளித்துக் கொண்டிருக்கும் அக்கினிக் குழம்பு எரிமலை வழியாகப் பொங்கிச் சில சமயங்களில் வழியலாம். பூகம்பங்களின் மூலம் சில சமயம் தன் ஆத்திரத்தைக் காட்டலாம். ஆனால் அதன் உஷ்ணம் தணிந்து விடுகிறதா?

என் ஆழ்ந்த மௌனத்தைக் கண்டு சுலோசனாவுக்குக் கோபம் வந்து விட்டது. "இப்படி மௌனச் சாமியாராக உட்கார்ந்திருப்பதற்காகத்தான் இங்கே என்னை அழைத்து வந்தீர்களா?" என்று கேட்டாள்.

"இல்லை, சுலோ! மனம் குழம்பிக் கிடக்கிறது. சில சமயங்களில் காரணமில்லாமல் மனம் குழம்பி வேதனைப் படுகிறதல்லவா?"

"வேதனைக்கு என்ன காரணம்? அதைத்தான் சொல்லுங்களேன்."



"கட்டாயம் சொல்கிறேன், சுலோ! ஆனால் இன்று வேண்டாம். இன்னொரு நாள் சொல்கிறேன்" என்றேன்.

"உங்களுடைய வேதனை என்னவென்று தெரிந்தாலாவது ஆறுதல் கூறலாம். முகத்தைத் தூக்கிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்கள். பேசவும் மாட்டேன் என்கிறீர்கள். நான் என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை."

சுலோசனாவின் பேச்சு எனக்கு இதமாக இருந்தது. அவளுடைய ஆறுதலான வார்த்தைகளைக் கேட்டு நன்றி உணர்ச்சி உண்டாயிற்று.

"நீங்கள் இப்படிச் சொல்வதே எனக்கு ஆறுதலாக இருக்கிறது, சுலோசனா!" என்று கூறினேன்.

உண்மையாக அப்போது என் நெஞ்சத்தில் ஒரு பைத்தியக்காரத் தனமான எண்ணம்கூட உண்டாயிற்று. சுலோசனா இவ்வளவு படித்த பெண். இந்து மாதிரி அவ்வளவு அழகியாக இல்லாவிட்டாலும், அழகானவள்தான். இவளும் என்னை விரும்புகிறாள். பத்மநாபனும் அதற்கு ஆசைப்படுகிறார். அவளை மணந்து கொண்டால் என்ன? இந்துவுக்குச் சரியான தண்டனையாக இருக்கும். ஆனால் அவள் அதைப் பொருட்படுத்தினாலல்லவா தண்டனையாக இருக்கும்? அலட்சியம் செய்து விட்டால்...... என் சிந்தனைகளின் போக்கு எனக்கே கொஞ்சமும் பிடிக்கவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு பெண் தன்னைக் காதலிக்கிறாள் என்று தெரியும் போது ஒரு வகைக் கர்வம் உண்டாகிறது. தனக்கு அந்தக் காதலில் விருப்பமே இல்லாவிட்டாலும்கூட, அந்தப் பெண் தன்னை நேசிக்கிறாள் என்ற எண்ணத்தினால் ஒரு பெருமிதம் ஏற்படுகிறது. எல்லாம் அகம்பாவத்தின் விசித்திரமான பசிக்கு ஆகாரம்தான்.

சுலோசனாவை மணந்து கொள்ள என்றால் முடியவே முடியாதென்று நன்றாகத் தெரியும். ஆயினும் அப்படி நினைப்பதில் ஒரு திருப்தி.

இந்து இத்தனை நாள் உட்கார்ந்திருந்த என் இதய சிம்மாசனத்தில், இன்னொருத்தியை ஏற்றி வைப்பது சாத்தியமா? அது என்னாலும் முடியாது, யாராலும் முடியாது. வீம்புக்காக வேண்டுமானால் மணந்து கொள்ளலாம். ஆனால் சுலோசனாவுக்கு என் இதயத்தில் மட்டும் இடம் கொடுக்க முடியவே முடியாது. அங்கே இந்துமதிதான் என்றும் இருப்பாள். அமரதாரா எப்படியாவது நாசமாகப் போகட்டும். இந்துமதி என்னை விட்டு எங்கேயும் போக முடியாது. அவளை என் மனத்திலிருந்து தப்பிச் செல்ல விடவே மாட்டேன்.

இந்த எண்ணங்களை நான் மறக்க முயற்சித்தேன். அதற்காகச் சுலோசனாவுடன் புத்தகங்களைப் பற்றியும், கதாசிரியர்களைப் பற்றியும் பேச ஆரம்பித்தேன். அவை அவளுக்கு ரொம்பப் பிடித்தமான விஷயமாகையால் உற்சாகமாக வரவேற்றாள்.

வெகு நேரம் பேசிய பிறகு வீட்டுக்குக் கிளம்பினோம். சுலோசனாவின் படிப்பும், புத்தி கூர்மையும், சாதுர்யமும் எனக்குப் பல சமயங்களில் வியப்பு அளித்திருக்கின்றன. இன்று அவளுடைய பேச்சு

உண்மையிலேயே இலக்கியச் சுவை சொட்டச் சொட்ட இருந்தது.

நான் சரித்திரம் படித்த மாணவன் அல்லவா? அவன் சரித்திர நாவல்களைப் பற்றிப் பேசிய போது கேள்விகள் கேட்டு மடக்கினேன். எல்லாவற்றுக்கும் சளைக்காமல் அவன் பதில் சொன்னான். கிரேக்க நாட்டு அறிவாளியான ஸாக்ரடீஸிலிருந்து, சீன தேசத்து மகானான கன்ப்யூஷஸ் வரையில் அனைவரையும் பற்றிப் பேசினோம்.

வீட்டுக்குள் நாங்கள் நுழைந்த போது எதிரே ஒரு கார் புறப்பட்டுச் சென்றது. அதில் உட்கார்ந்திருந்த பெண் இந்துமதியோ என்று சந்தேகமாக இருந்தது. நன்றாக இருள் சூழும் வேளை. ஆகவே நிச்சயமாகத் தெரியவில்லை. பத்மநாபனிடம், வந்து விட்டுப் போவது யாரென்று கேட்டேன். யாரோ வழக்கு சம்பந்தமாக வந்திருந்தார்கள் என்று மட்டும் கூறினார்.

நானும், சுலோசனனும் மாடிக்குச் சென்றோம். சுலோசனன் என்னைப் பார்த்து, "நீங்கள் என் அறைக்கு வந்ததே இல்லையே. உள்ளே வந்தால் உங்களுக்கு ஒரு அற்புதமான புத்தகம் தருகிறேன்" என்றான்.

என்னை அவனுடைய அறைக்கு வரச் செய்ய அவன் கையாண்ட தானோபாயம் எனக்கு வேடிக்கையாக இருந்தது. சிரித்துக் கொண்டே உள்ளே சென்றேன்.

அறை மிக அழகாக இருந்தது. "நீங்கள்தான் கல்கத்தாவில் இருக்கிறீர்களே? இங்கே இந்த அறையை எப்படி இவ்வளவு நன்றாக வைத்துக் கொள்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"என்னால் எதையும் அரைகுறையாகச் செய்து கொள்ள முடியாது, மிஸ்டர் ராய்! அப்படி நேரும் போதெல்லாம் சொல்ல முடியாத சங்கடம் ஏற்படுகிறது" என்றான் சுலோ.

"உங்களைப் பார்த்தால் சங்கடப்படக் கூடியவராகவே தோன்றவில்லையே?"

"எரிமலையின் சிகரத்தின்மீது பனி உறைந்து வெண்மையாக மூடிக் கொண்டிருக்கும் விஷயம் உங்களுக்குத் தெரியாதா?"

எரிமலை! என் உள்ளத்திலிருப்பதை இவன் எப்படிக் கண்டு பிடித்து விடுகிறான்? பொல்லாத பெண். பேச்சை நான் மாற்ற விரும்பினேன்.

"அதோ உங்கள் அறையில் இன்னொரு கதவு இருக்கிறதே. அதற்குப் பக்கத்தில் என்ன இருக்கிறது?" என்று கேட்டு வைத்தேன்.

"அதைத் திறந்தால் உங்கள் அறை. இந்துமதி இங்கே இருந்த போது இரவில் அந்தக் கதவு வழியாகத்தா இந்த அறைக்கு வருவாள். நாங்க இரவெல்லாம் பேசிக் கொண்டிருப்போம். அப்படிப்பட்ட பெண் இப்போது எப்படியாகி விட்டாள்?"

நான் திக்பிரமை அடைந்து நின்றேன். அவர்கள் வீட்டில் முன்பு நான் வந்து தங்கிய போதும், அதே அறையில்தான் தங்கினேன். இந்துவும் அங்கேதான் இருந்தாளா? என்ன ஆச்சரியம்?

"அவள் எப்படி மாறிப்போய் விட்டாள் என்கிறீர்கள்? சினிமாவில் நடிப்பதைப் பற்றியா?"

"அது மட்டுமில்லை. அவள் ரொம்பக் கர்வக்காரியாகப் போய் விட்டாளென்று எல்லோரும் சொல்லுகிறார்கள். யாரையும் பார்க்க மாட்டேனென்கிறாளாம். வீட்டுக்குள்ளேயே இருந்து கொண்டு இல்லையென்று சொல்லச் சொல்கிறாளாம். நான் சாதாரணமாக மற்றவர்கள் சொல்வதை நம்புவதில்லை. இது



ஒரு வேளை பொய்யாகவும் இருக்கலாம். ஆனால் அப்படி ஒரு பத்திரிகையில் எழுதி யிருந்தது."

என் நெற்றியில் முத்து முத்தாக வியர்வை துளித்தது. 'ஆமாம்! உண்மைதான்' என்று சொல்ல எண்ணினேன். ஆனால் சொல்லவில்லை. இந்துவைப் பற்றிப் பேசவே என்னுடைய நாக்கு மறுத்தது.

* * *

சுலோசனனின் அறையிலிருந்து என் அறைக்குச் சென்றேன். செல்லும் போதே நெஞ்சை வேதனை அழுத்தியது. என் கட்டிலின்மீது உட்கார்ந்தவுடன் இந்துவும் இதே கட்டிலின்மீதுதான் படுத்துறங்கி யிருப்பாள் என்ற

ஊரும் பெயரும்!



நினைப்பு உண்டாயிற்று. அந்தப் படுக்கையில் பன்னீர் தெளித்திருப்பது போலவும், ரோஜா இதழ்களைத் தூவியிருப்பது போலவும் எனக்குத் தோன்றியது. படுத்துக் கொண்டேன். ஐயோ! அதில் யாரோ நெருஞ்சி முட்களைப் பரப்பியிருக்கிறார்கள்!

இந்து! இந்து!! நீ இப்படிச் செய்யலாமா? உன்னை நான் இங்கிலாந்தில் குண்டு வீச்சுக்களுக்கு மத்தியில் கூட மறக்கவில்லையே. உனக்காகவே என் உயிரைக் காப்பாற்றிக் கொண்டேனே. உன்னைத் தேடிக் கண்டு பிடிக்கத்தான் எவ்வளவு பிரயத்தனம் செய்தேன். அத்தனைக்கும் பிறகு உன்னைப் பார்க்க வந்தபொழுது நீ என்மீது அக்னித் திராவகத்தை யல்லவா இரக்க மில்லாமல் கொட்டி விட்டாய்?

"மாலைப் பொழுதிலொரு மேடை மிசையே
வானையும் கடலையும் நோக்கி யிருந்தேன்"

என்று யாரோ பாடுவது காதில் விழுந்தது. நாற்காலியைப் போட்டுக் கொண்டு எழுந்து உட்கார்ந்தேன். ஒரு வேளை இந்து தன் உயிரை இந்த அறையில் விட்டு விட்டுப் போயிருக்கிறாளோ? அதுதான் பாடுகிறதோ?

எனக்குச் சீன தேசத்துப் பிரபல நாவலாசிரியரான "லின் யூ டாங்" எழுதிய கதை நினைவுக்கு வந்தது.

'ஒருகாதலன் தன் காதலியைப் பிரிந்து செல்கிறான். கப்பல் புறப்படும் சமயத்தில் அவளும் ஓடி வந்து சேருகிறாள். வெகு நாட்கள் சென்ற பின்னர் இருவரும் அதே ஊருக்குத் திரும்பி வருகிறார்கள். மனைவியை ஒரு இடத்தில் விட்டு விட்டு அவனுடைய தாய் தந்தையரை அவன் பார்க்கச் செல்கிறான். அவர்கள் அவனைப் பார்த்ததும் கண்ணீருடன் 'எங்கள் பெண் நீ சென்ற தினத்திலிருந்து மயக்கமாகக் கிடக்கிறாள். சுய நினைவே இல்லை' என்கிறார்கள். அதைக் கேட்டு இவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

கடைசியில் அவள் இருக்கும் அறைக்குச் செல்கிறான். உண்மையிலே அவன் மனைவி அங்கே மயக்கத்தில் ஆழ்ந்திருக்கிறாள். இவன் அருகில் சென்றதும் அவளுக்கு உணர்வு வருகிறது. அவன் தன் மனைவியை விட்டு வந்த இடத்தில் போய்ப் பார்க்கிறான். அவளைக் காணவில்லை. ஆகவே தன் காதலியின் ஆத்மா மாத்திரம் தன்னுடன் வந்திருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்கிறான்.'

இந்தக் கதை ஞாபகம் வரவே எனக்கு உடல் சிலிர்த்தது. சே! என்னவெல்லாம் தோன்றுகிறது. காதலின் வேகம் சுய புத்தியுள்ளவனைக் கூடப் பைத்தியமாக்கி விடும் போலிருக்கிறது. பக்கத்து அறையில் சுலோசனா அல்லவா பாடிக்கொண் டிருக்கிறாள்?


"நெரித்த திரைக்கடலில் நின்முகம் கண்டேன்" என்று பாடினாள் சுலோ. அந்த ஒரு வரி என்ன காட்சிகளை யெல்லாம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியது. பாதிரித் தோட்டம், புன்னை மரம், அதன் வெண் முத்துக்களைப் போன்ற புஷ்பங்கள், இந்து நின்றகாட்சி, அவள் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தது எல்லாம் படமாக வந்து நின்றன. இந்துவை என் நெஞ்சிலிருந்து பிரிக்க முடியுமா? முடியவே முடியாது.

சுலோசனா என் அறைக் கதவை இலேசாகத் தள்ளித் திறந்து, "சாப்பிட வருகிறீர்களா?" என்று இனிய குரலில் கேட்டாள். நான் முதலில் மறுத்தேன். பிறகு அவள் வற்புறுத்தியதற்காகச் சாப்பிடப் போனேன். (தொடரும்)

வஸந்தத்தின் புத்துணர்ச்சி

உங்களுக்கு இன்றும்.... என்றும்!

காஷ்மீர்பொக்கே டால்கம் பௌடர் சுத்த மனோரம்மியமே! மிக்க மிருதுவாக உங்கள் உடலில் வஸந்தகாள் காலையின் புத்துணர்ச்சியை அள்ளித் தெளிக்கிறது- உடலை ரம்மியமணத்துடனும் குளிர்ச்சியுடனும் மணிக்கணக்காக வைத்திருக்கிறது. அதிகப்படி ஈரத்தை உறிஞ்சுகிறது ... அரிப்பையும் எரிச்சலையும் தவிர்க்கிறது ... உங்கள் வசீகரத்தையும் மென்மையையும் பன்மடங் காக்குகிறது.






காஷ்மீர் பொக்கே

டால்கம் பௌடர்

ஆண்கள் விரும்பும் நறுமணத்துடன்

ஒரு கால்கேட்—பாமாலிவ் தயாரிப்பு


கால்கேட் 1806 முதல் தரத்துக்குப் பெயர் போனது



ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட் 6, கோர் பிபி லெயின், கல்கத்தா-11

டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

மெஸர்ஸ் ஹிந்துஸ்தான் டீலர்ஸ் லிமிடெட், 4, ஸ்டிரிங்கர்ஸ் தெரு, சென்னை

ரகுபதி  ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் ‘சத்தியமே தெய்வம்’ என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

23

மனிதனுக்கு உள்ள ஆயுதங்களுக்குள் மகத்தான ஆயுதம் அஹிம்ஸை. படைவீரர்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள் அனைத்தையும் விட பலம் கொண்ட ஆயுதம்.

மானுட தர்மத்திற்குக் கொலை என்பது முற்றிலும் மாறுபட்டது. மனிதன் முன்னேற வேண்டுமானால் கொல்லுவதல்ல வழி; தன் உயிரை நீப்பதற்கு ஆயத்தமாக இருப்பதே வழி. ஒவ்வொரு கொலையும், வதையும் எந்தத் தனிக்காரணம் எந்தத் தனிச் சந்தர்ப்பத்தில் நடந்ததாயினும் அது உலகத்துக்கே செய்த ஒரு துன்பமாகும்.

[ஹரிஜன் 20—7—35]

சிலருக்கு ஒரு சந்தேகம், ஹிம்ஸையைக் கையாளும் எதிரிகளின் மேல் அஹிம்சை என்ன பயன்படும் என்று. அசத்தியம், ஹிம்சை, துவேஷம், கொடுமை இவற்றிற்கு எதிராக நின்று சோதனையில் வெற்றி பெற்றால் அல்லவோ சத்தியம், அன்பு, அஹிம்சை, கருணை இவை வெற்றி பெற்றதாகும். ஒரு கொலையாளிக்கு முன் அஹிம்சையைக் கடைப்பிடித்த ஒருவன் நின்றால் சாவது நிச்சயம்தான். ஆனால் அதற்குத்தான் அஹிம்சை என்று பெயர். அந்தச் சோதனையிலும் பின் வாங்காமல் இருந்தாலேதான் அஹிம்சையாகும். ஆனால் என்னால் ஒன்றும் செய்ய இயலாது என்று பலவீனத்தினால் இறந்தவன் சோதனையில் வெற்றி பெற்றவன் என்று கருதப்படமாட்டான். இறக்கும் போதும் தன்னைக் கொன்றவன் பேரில் கோபம் இல்லாமல் உயிர் துறக்க வேண்டும். ஏன்? ஆண்டவன் அவனை மன்னிப்பானாக என்று பிரார்த்தனையும் செய்ய வேண்டும். அதுதான் உண்மையான அஹிம்சை. இப்படியே செய்தான் என்று ஏசுநாதனைப் பற்றிச் சரித்திரத்தில் சொல்லப்படுகிறது அல்லவா?

“எந்தையே! இவர்களை மன்னித்தருள். அறியாமையினால் செய்கிறார்கள்!” என்று சொல்லி உயிர் நீத்ததாக எழுதப்பட்டிருக்கிறது அல்லவா? மற்ற மார்க்கங்களிலும் இதைப் போன்ற சம்பவங்கள் பல உண்டு. ஆனால் ஏசுநாதரின் சரித்திரம் உலகப் பிரசித்தம். அதற்காகத்தான் அதை எடுத்துச் சொன்னேன்.

நம்முடைய அஹிம்சை உச்ச நிலையை அடையவில்லை என்பதை ஒப்புக்கொள்ளலாம். அது நம்முடைய குற்றம் அல்லது அநுபவக் குறைவு. அதற்காக நாம் அஹிம்சா தத்துவத்தின் கொடியைத் தாழ்த்த வேண்டியதில்லை. தத்துவத்தின் பூரண அளவை அறிந்தால்தான் அந்த மார்க்கத்தில் நாம் எந்த முயற்சியையும் சரிவரச் செய்ய முடியும். அஹிம்சையின் பூரண சக்தியை ஆராய்ந்து உணர வேண்டியது அவசியம்.

[ஹரிஜன் 28—4—46]

படித்துப் பாருங்கள்

பாபுவின் கதை

மாந்தருக்குள் ஒரு தெய்வமாகவும், மகா புருஷர்களுக்குள் ஒரு மகாத்மாவாகவும், தீனர்களுக்குப் பந்துவாகவும், தியாகத்தின் சிகரமாகவும் விளங்கி, பாரத நாட்டுக்கு விடுதலை தேடித் தந்த காந்தி மகானின் வாழ்க்கை வரலாற்றை இந் நூல் மிகவும் சுலபமாகச் சிறுவர் சிறுமியர்களுக்கு ஏற்ற முறையில் கூறுகிறது. நேருஜியின் சகோதரிகளுள் ஒருவரான ஸ்ரீமதி கிருஷ்ணா ஹத்திஸிங் எழுதிய இந்நூலை நம் தமிழகத்துக் குழந்தைகளுக்குப் பயன் படும் வண்ணம் மிகவும் எளிய தமிழில் மொழி பெயர்த்து உதவியிருக்கும் ஸ்ரீ எம். எல். சபரிராஜன் நம் பாராட்டுக்கு உரியவர். இந்நூல் நல்ல தாளில், பெரிய எழுத்தில், கணிசமான பெரிய அளவில், சித்திரங்களுடன் நன்றாய் அமைந்திருக்கிறது.

பிரசுரம்: புக்ஸ் (இந்தியா) லிமிடெட், தபால் பெட்டி எண்: 1803, சென்னை — 1; விலை: ரூ. 1—8—0.

தாமரைக் குமரி

இனிக்கும் தீந்தமிழில் தீஞ்சுவைக் கவிதைகள் புனையும் கவிஞர்கள் பலர் ஆர்வத்தோடு கவிதைகள் இயற்றித் தமிழன்னைக்குச் சூட்டி வருகின்றனர். அத்தகைய பாமாலைகளுக்குள் இத் தொகுதியும் மணம் வீசி மகிழ்விக்கிறது. இயற்கை வர்ணனையில் துவங்கிப் பிறகு பல் வேறு பொருள்களையும் கருத்துக்களையும் பற்றி இயற்றப்பட்ட கவிதைகள் இந்தத் தொகுதியில் இடம் பெற்றிருக்கின்றன.

"பெண்ணொருத்தி உணவுமறந்தாள்
என்பதற்கா
பேச்சற்று மூச்சற்றுக் கிடந்தாய்
நெஞ்சே!
மண்மீதில் பெண்ணினமே மறைந்த
துண்டா?
மடநெஞ்சே எதற்காக மயங்குகின்றாய்?"

என்பதை மாதிரிக்கு இங்கே கொடுக்கிறோம்.

இயற்றியவர்: மு. அண்ணாமலை; பிரசுரம்: அன்புப் பண்ணை, சென்னை-5; விலை: ரூ. 1-8-0.

செம்பைச் செல்வம்

சங்கீத வித்வான்கள் சங்கீதக் கச்சேரியினால் மாத்திரம் மக்களை மகிழ்விப்பார்கள் என்பதில்லை; அந்த மாபெரும் கலைத் துறையில் பரந்த அனுபவம் பெற்று, பல ரஸிகர்களின் பாராட்டைப் பெற்று, மேடையேறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புது உணர்ச்சியைப் பெற்றுத் தங்கள் வாழ்க்கை வரலாறுகளைப் பலரும் சுவைத்து ரசிக்கும் வண்ணம் விரித்து வைத்திருக்கிறார்கள். முயற்சியினால் முன்னுக்கு வந்து, பல மாணவ வர்க்கங்களை வாரிசுகளாகத் தயாரித்துப் பெரு வாழ்வு வாழ்ந்த சங்கீத வித்வான்களின் வாழ்க்கை வரலாறுகள் வருங்கால சங்கீத மாணவர்களுக்கு இன்றியமையாதவை. மனோ தர்மத்திலும் சாரீர சம்பத்திலும் இணையற்று விளங்கி வரும் சீனியர் வித்வான் ஸ்ரீ செம்பை வைத்தியநாத பாகவதர் அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த ருசிகரமான பல தகவல்களைத் தொகுத்து இந் நூல் சுவாரஸ்யமாகக் கூறுகிறது.

எழுதியவர்: "எல்லார்வி"; பிரசுரம்: அமுத நிலையம், சென்னை 18; விலை: ரூ. 3—0—0.

டாகூரின் கடிதங்கள் (மனைவிக்கு)

பிறருக்கு வந்த கடிதங்களைப் படித்துப் பார்ப்பது போன்ற தவறு எதுவும் இல்லை என்பதை யாவரும் அறிவார்கள். ஆனால் மேற்படி தவறு ஒரு மகா புருஷரின் விஷயத்தில் அடியோடு மாறிவிடுவதை இந்த நூலில் நன்கு காண்கிறோம். கவி ரவீந்திரரின் வாழ்க்கையே ஒரு காவியம். அவர் உள்ளம், சிந்தனை, பேச்சு, எழுத்து எதிலுமே கவிதையின் உயிர்த் துடிப்பை உணர முடிகிறது. ஜப்பான், இந்தோனேஷியா முதலிய தூர தேசங்களில் பிரயாணம் செய்துள்ள கவிஞர் தம் மனைவி மிருணாளினிக்குப் பல கடிதங்கள் எழுதியிருக்கிறார். இலக்கிய மணமும் கவிதை நயமும் கமழும் மேற்படி கடிதங்களில் சுவை மிக்க பல விஷயங்களைக் கூறுகிறார். மனைவியிடம் அவர் கொண்டிருந்த அன்பு, மக்களிடம் அவர் வைத்திருந்த பாசம், ஆடம்பரமற்ற எளிய வாழ்வில் அவருக்கு இருந்த ஆவல் ஆகியவற்றை இந்நூலில் காண முடிகிறது.


தமிழாக்கம்: த. நா. சேனாபதி; பிரசுரம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை; விலை: ரூ. 1—4—0.

முதல் தாம்பூலம்

சிறு கதைக்குப் பல வடிவங்கள் உண்டு. ஒவ்வொரு வடிவமும் ஒவ்வொரு விதத்தில் படிப்பவர் உள்ளத்தைக் கவர்ந்து விடும். சுவாரஸ்யமான கதைப் போக்கும், அதைச் சுவையோடு சொல்லும் திறனும் ஒரு கதையில் அமைந்து விட்டால் அப்புறம் அக் கதைக்கு வேறு எந்த அம்சமும் வேண்டியதில்லை.

இந்தத் தொகுதியில் அடங்கியிருக்கும் கதைகளில் சுவை நிரம்பியிருக்கிறது. சந்தர்ப்பத்துக்கு ஏற்ற சம்பாஷணைகள் கதைகளுக்கு உயிரூட்டுகின்றன. பலதரப்பட்ட பாத்திரங்கள் இக் கதைகளில் பங்கு கொள்ளுகின்றன. அலுப்பு ஏற்படாமல் கதைகள் துரித கதியில் செல்லுகின்றன. "முதல் தாம்பூலம்" கதையில், சங்கீத சபைக் காரியதரிசி, இந்திராணி, ராஜாராம், இருவருடைய பெற்றோர்கள் ஆகிய பாத்திரங்களே கதையைத் துவக்கி முடித்து வைக்கின்றனர். நம் மனத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. புற நிகழ்ச்சி எதுவும் இல்லாமலே கதை இன்ப கீதம் இசைக்கிறது. மற்றக் கதைகளும் இக் கதைக்குச் சரியாக ஈடு கொடுக்கின்றன.

எழுதியவர்: கா. ராமச்சந்திரன்; பிரசுரம்: வித்யாசங்கர் பப்ளிகேஷன்ஸ், மயிலாப்பூர், சென்னை—4; விலை: ரூ. 1—12—0.— விஜயம்.



உலகமெல்லாம்.....
மேன்மையான வாழ்வின் சின்னமாக மர்பி ரேடியோ கருதப்படுகிறது. இதன் தெளிவு குரல், அபார வரவேற்பு, நம்பகமான சாதனை பெருமையுடன் போற்றி வைத்திருக்க இதுவே காரணம்.
மாடல் டிஏ 224 ஏஸியில், டியு 224 ஏஸி / டிஸியில், எல்லா வேவ் 8-பாண்டு, 5-வால்வுகள். ரூ. 425.
மர்பி ரேடியோ



ருசியான உணவை சமைக்க ஏற்றது...
துஷார்
விடமின் சேர்ந்த வனஸ்பதி
Tushar
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட். கர்நூல்.
துஷார் சுத்திகரித்த எண்ணெயும் கிடைக்கும்

க்ளூகோவிட்டா மீண்டும் சக்தி அளிக்கிறது

அன்றாடம் உங்கள் அலுவல்களில் அபரிமிதமான சக்தியைச் செலவழிக்கிறீர்கள்– இந்த சக்தியை ஈடுசெய்தாக வேண்டுவது அவசியம்.

வியாதியை எதிர்த்துப் போராட நீங்கள் ஆரோக்கியமாயும், உடல் வலிமையுடனும் இருக்கவேண்டியதவசியம். உங்கள் தேகத்தில் சக்தி குறைந்திருந்தால், வியாதியை எதிர்த்துநிற்கும் சக்தியும் குறைந்திருக்கும். நீங்கள் களைப்பும் தெம்பற்றதுமான உணர்ச்சி அடைகிறீர்கள். சக்தியை மீண்டும் அடைய மிகச் சிறந்த வழி க்ளுக்கோவிட்டா சாப்பிடுவதேயாகும்.





சூடான அல்லது குளிர்ந்த பானத்துடன் இரண்டு தேக்கரண்டி க்ளுக்கோவிட்டா சேர்த்துப் பருகுவதால், நாள் முழுவதும் விரயமாகும் சக்தியைத் திரும்ப அடைவதுடன், ஓய்வு நேரத்தை உற்சாகமாய் அனுபவிக்க உதவுகிறது. மேலும் ரத்த புஷ்டியை அதிகரிப்பதுடன், தசைகளை வலிவுறுத்தி எப்பொழுதும் உங்களை ஆரோக்கியமாக இருக்கவும் செய்கிறது. க்ளுக்கோவிட்டா ஒரு மருந்தல்ல - உங்கள் ஆகாரத்துடன் உட்கொள்ளும் ஒரு சேர்க்கைப் பொருள்.

காரன் பிராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) லிட்.


பம்பாய் 1 கல்கத்தா 1

அந்த அறையில் இலேசாகக் கவிந்து கொண்டிருந்த இருளைத் தன்னுடைய மங்கிய ஒளிக் கதிர்களினால் ஒதுக்க முயன்று கொண்டிருந்தது, ஒரு சிறு விளக்கு. பார்ப்பதற்கு மிகவும் சிறியதாகத் தோற்றமளித்துக் கொண்டிருந்த அந்த இடத்தின் நாலாபுறமும் சில நாற்காலிகளும் மேஜைகளும் அங்கு மிங்குமாகக் கிடந்தன. கூரையினின்று ஊசலாடிக் கொண்டிருந்தது கருநிற ஒட்டடை. ஏதோ ஒருவித துர்க்கந்தம் அந்த அறையைச் சூழ்ந்து கொண்டிருந்தது.

அறையின் ஒரு பக்கத்தில் கவரோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது ஒரு சிலை.

அது பாரத மாதாவின் உருவம். அன்னையின் பாதார விந்தத்திலே கிடந்தன சில சிவந்த மலர்கள். அன்னையின் சிலையருகே மகாத்மா காந்தியடிகளின் உருவப் படம் வைக்கப்பட்டிருந்தது.

அறையின் நடுவே போடப்பட்டிருந்த வட்டமான பழையமேஜையைச் சுற்றிக் கிடந்தன பல ஆசனங்கள். அவைகளிலே சிந்தனையில் ஆழ்ந்தவாறே நாலைந்து பேர் உட்கார்ந்திருந்தனர்.



நிம்மதி

ரா. சுப்பிரமணியன்

பாரதத் தாயின் சிலையை நோக்கியபடியே உட்கார்ந்திருந்தான் நரேன்பாபு.

அவன் உதடுகள் ஏதோ வார்த்தைகளை முணுமுணுத்துக் கொண்டிருந்தன.

அவன் மனத்தினுள்ளே ஏதோ ஒன்று சுழன்று சுழன்று வந்தது! மெதுவாகத் தலையை உயர்த்தி எதிரே அமர்ந்திருந்தவர்களைப் பார்த்தான்.

"நண்பர்களே! இவ்வறையில் சூழ்ந்திருக்கும் இருளைப் போல்தான் நம் நாட்டிலே கவிந்து கொண்டிருக்கிறது இருள்......அதோ பாருங்கள், நம் அன்னையின் முகத்தை! அவள் இப்போது சிறைப்பட்டிருக்கின்றாள். அடிமைத் தளை நமது அன்னையின் கரங்களை இறுகப் பிணைத்திருக்கின்றது.

"ஆயிரக்கணக்கான வருடங்களாக நாம் இந்தியர்கள்—இந்த நாட்டிலே வாழ்கின்றோம். நம் பெற்றோர்கள் வாழ்ந்த - நம் மூன்னோர்கள் சிறந்து விளங்கிய தேசம் இது. இதிலே உரிமை உடையவர்கள் நாம்!

"நம் அளவிலா செல்வத்தைக் கண்டு, நம்முடன், வர்த்தகம் செய்ய வேண்டுமென்று அவாக்கொண்டு வந்தவர்கள் ஆங்கிலேயர்கள். நாம் வந்தவர்களை விரட்டவில்லை. வரவேற்றோம்; ஆதரித்தோம். ஆனால் நம் செல்வத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு சென்றதோடு அல்லாமல் சிறிது சிறிதாகச் சுதந்திரத்தையும் பறித்து விட்டார்கள். அத்துடன் துப்பாக்கி முனையிலே நம்மை அடக்கி ஆளுவதற்குப் பார்க்கின்றார்கள்.

"நம் நாட்டின் தந்தை காந்தி அடிகள் சொல்படி நடப்பதுதான் நம் கடமை. அவர் மொழிகளை மீறி நடப்பது தவறு."

நரேன்பாபு எதிரே அமர்ந்திருந்தவர்களில் ஒருவனை நோக்கினான். மறுபடியும் தொடர்ந்தான்:

"பகவன்ஸிங்! உண்மையில் நீ செய்த செயலுக்கு வருந்துகின்றேன் நான். மகாத்மாஜி அஹிம்சா முறையிலே 'ஹர்த்தால்' நடத்த விரும்பினார். ஆனால் இங்கே அமிர்த சரஸிலே - நடந்ததென்ன! எல்லோரும் பலாத்காரத்தைக் கடைப் பிடித்தனர்..."

இந்த இடத்திலே பகவன்ஸிங் குறுக்கிட்டான். "நரேன்! காந்தியடிகளை நான் வெறுக்கவில்லை; விரும்புகின்றேன். ஆனால் பொறுமைக்கும் ஓர் அளவு உண்டல்லவா!... எதையும் பொறுத்துக் கொள்ளும், – சகித்துக் கொள்ளும் தன்மை அவரிடம் குடிகொண்டிருக்கின்றது. நம்மால் பொறுத்துக் கொள்ள முடியாது. இந்தவெள்ளையர்செய்வது அநியாயம்! அக்கிரமம்!"

பகவன்ஸிங் எழுந்து நின்றான். கோபத்தினால் அவன் உடல் ஆடியது!

"அக்கிரமத்தை அன்பினால் வெல்லவேண்டும் என்பதுதான் காந்தியடிகளின்கொள்கை."

"நரேன்!...'ஹர்த்தாலி'ன் போது மக்களைச் சுட்டு, அவர்கள் துடிதுடிக்க—இரத்தம் ஆறாக ஓட—ஓலமிடச் சாகடித்தார்களே, அந்த மூர்க்கர்களிடமா அன்பு காட்ட முடியும்!"

"ஸிங்! நீ இன்னும் காந்தியடிகளின் சத்தியாக்கிரஹ முறையை, அஹிம்சையின் தத்துவத்தைச் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. அன்பைக் கடைப்பிடி. துன்பத்தையும் பொறுத்துக் கொள்."

பகவன்ஸிங் உட்கார்ந்து கொண்டான்.

"சரி, நரேன்! ஜாலியன் வாலாபாக் கூட்டத்துக்கு இன்னும் மூன்றே நாட்கள்தான் இருக்கின்றன. அது உனக்குத் தெரியுமா!"

"ஆம்! சட்டத்தை மீறி, கூடப்போகும் இந்தக் கூட்டத்தில் என்ன நடக்கப் போகிற தென்று பார்ப்போம்" என்று நரேன் பாபு கூறிக் கொண்டிருந்தபோது, "பாபு! பாபு!" என்ற குரல் கேட்டது. வாயிற்பக்கத்தில் காவலாக நிறுத்தப்பட்டிருந்த அக்ஷாய், "நரேன்! ராபர்ட்ஸ் வந்திருக்கிறான்" என்றான்.

"யார்! ராணுவ வீரன் ராபர்ட்ஸ்தானே!" என்று கேட்டான் பகவன்ஸிங்.

"ஆம்!" என்று கூறிக் கொண்டே அவனைத் திரும்பி நோக்கினான் நரேன்.

"அப்படியானால் நானும் உன்னுடன் வரு கிறேன்" என்று கூறிக்கொண்டே சென்றான் பகவன் ஸிங்.

நரேன் பாபுவைக் கண்டதும் அவன் அரு கிலே வந்தான் ராபர்ட்ஸ்.

"நரேன்! உன்னிடம் ஒரு முக்கியமான விஷயத்தைக் கூற வேண்டும்."

"அப்படி என்ன அவ்வளவு முக்கியமான செய்தி, ராபர்ட்ஸ்!"

"இன்னும் மூன்று நாட்களில், ஜாலியன் வாலா பாக்கில் ஒரு மாபெருங் கூட்டம் நடக்கப் போகிறதல்லவா!"

"ஆமாம்: உங்களுக்கு இந்த விஷயம் எப் படித் தெரியும்!" என்று கேட்டான் நரேன்.

ராபர்ட்ஸ் சிரித்தான். "எங்கள் இலாகா வுக்குத் தெரியாமல் ஒரு சிறு விஷயங்கூடச் சுதந்திரப் படையிலே நடக்காது, தெரியுமா!"

"சரி!...விஷயத்தைச் சொல்லு."

"கேள் நரேன்!......இப்போது நினைத்தால் கூட நான் 'ரௌலட்' சட்டத்தின்படி உன்னைக் கைது செய்யலாம். ஏனெனில் நீ ஒரு தீவிர சுதந்திரவாதி. ஆனால் என் ஆப்த நண்பன் என்பதனால்தான்......"



நரேன் பதில் கூறவில்லை.

"என்ன நரேன்! நான் கூறுவதில் விசேஷம் இல்லாமல் இல்லை. கூட்டத்தன்று போலீஸார் தக்க நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்."

"அதனால் என்ன! சட்டத்தை மீறினதற் காகக் கைது செய்வார்கள்; சிறைகள் நிரம்பி வழியும்; நாட்டில் கலகம் அதிகரிக்கும், அவ்வளவுதானே!"

"நரேன்! விளையாட வேண்டாம். ராணு வத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் போகிறார்கள். துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகாமல் கூட்டத்தில் ஒருவர் கூடத் தப்ப மாட்டார்கள்!"

நரேன் பாபுவின் இரத்தம் கொதித்தது. ராபர்ட்ஸ் உண்மையைக் கூறி விட்டான். அவன் அதைச்சொல்லி இருக்கக் கூடாதுதான். ஆனால் நண்பன் என்ற பாசம் அவனைக் கூறும் படி தூண்டி விட்டது.

"சுடட்டும்!...சுடட்டும்!... நன்றாய்ச் சுடட் டும்....அதனால் என்ன!"

"நீ போக வேண்டாம், நரேன்!"

"ராபர்ட்ஸ்! என்னை நீ சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை. நான் நாட்டுக்காக உயிரை விடவும் சித்தமாக இருக்கிறேன். என்னுடைய நண்பர்களும் அதற்கு ஆயத்தமாகத்தான் இருக்கின்றார்கள்."

"இதென்ன அசட்டுப் பிடிவாதம், நரேன்!"

"ராபர்ட்ஸ்! வெள்ளையர்கள் எங்களை எவ் வளவோ துன்புறுத்தலாம். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் அவர்களுக்குப் பிரதியாக, காந்தியடிகளின் கொள்கையின்படி நன்மைக ளாவது செய்வேனே ஒழியப் பழிவாங்க முயல மாட்டேன். உங்களை எதிர்ப்பதெல்லாம் அஹிம்ஸா சத்தியாக்கிரஹ முறையிலேதான். அவரவர் செய்கைகளுக்கு மற்றொருவன் தண்டனை அளிக்கத் தேவை யில்லை. ஆண்டவனே அளிப்பார்."

ராபர்ட்ஸ் குனிந்த தலையுடன் அங் கிருந்து வெளியேறி விட்டான்.

* *

1917-ஆம் ஆண்டில், படிப்படி யாகவே சுயாட்சி கொடுக்கப்படும் என்றும் அது கொடுக்கப்படும் விதமும் காலமும் பிரிட்டிஷ் பார்லிமெண்டிலே நிர்ணயிக்கப்படும் என்றும் பிரிட்டிஷ் அறிக்கை வெளியிட்டது. ஆங்கிலேயர் சொன்ன சொல்லைத் தவறிச் சுதந்திரம் கொடுப்பதற்குத் தாமதம் செய்வதைக் கண்டு மக்கள் கொதித் தெழுந்தனர். எங்கும் ராஜத் துவேஷம் மிகுந்தது. உடனே ரௌலட் என்பவரின் தலைமை யிலே வெளியிடப்பட்ட 'ரௌலட் சட் டத்'தின்படி சந்தேகப் பட்டவர்களை யெல்லாம் விசாரியாமலேயே சிறையி லிட்டார்கள். நிலைமை மேலும் மேலும் மோசமாகி விட்டது.

அந்தச் சமயத்திலேதான் காந்தி யடிகள் அரசாங்கத்தைச் சத்தியாக்கிர ஹத்தினால் எதிர்க்க முற்பட்டார். நாட்டு மக்கள் பலர் அவருடன் மனப் பூர்வமாக ஒத்துழைத்தனர்.

1919-ம் ஆண்டு ஏப்ரல் மாதம், 6-ம் தேதி நாடெங்கும் அரசாங்கத்திடம்



தாங்கள் கொண்டிருந்த அதிருப்தியைக் காட்டும் சின்னமான 'ஹர்த்தால்' நடத்தத் தீர்மானித்தார் காந்தியடிகள். குறிப்பிட்ட நாளிலே இந்தியாவில் எங்கும் கடைகள் மூடப்பட்டன. தொழிற் சாலைகளில் வேலைகள் நடைபெறவில்லை. பஞ்சாபிலே, அமிர்தஸரஸ், லாகூர் ஆகிய இடங்களில் மக்கள் கலகங்கள் புரிந்தனர். போலீசார் சுட்டனர்; 'ரௌலட்' சட்டத்தின்படி பலர் கைது செய்யப்பட்டனர். வீதிகளிலே மூன்று நான்கு பேர்கள் கூடிப் பேசக்கூடாது என்பது கடுமையான சட்டம்.

நரேன் பாபு காந்தீயத்தைப் பரப்ப விரும்பினான். மற்றவர்களுக்காகவோ, தேசத்துக்காகவோ தன்னையே அர்ப்பணிக்க வேண்டும் என்பது அவனுடைய கொள்கை. அமைதியை விட்டுப் பலாத்காரத்தில் மக்கள் இறங்குவதை அவன் கண்டித்தான்.

பகவன்ஸிங் மகா கோபக்காரனாக இருந்தான். அவனிடத்தில் பொறுமையே இல்லாமல் இருந்தது. 'ஹர்த்தால்' நடந்த மறு நாளே யாரோ ஒரு வெள்ளையனைப் பழி வாங்கி விட்டு, இரத்தம் தோய்ந்த கத்தியை மற்றவர்களுக்கு அவன் காட்டியபோது நரேன் துடிதுடித்து விட்டான்.

ஒருமுறை நரேன் பாபு, வெள்ளையன் ஒருவனால் பேராபத்து ஒன்றிலிருந்து காப்பாற்றப் பட்டான். அந்த ஆங்கிலேயன்தான் ராபர்ட்ஸ். அன்று முதல் இருவரும் நண்பர்களாகி விட்டனர். நரேன் ஒரு சுதந்திரவாதி என்று ராபர்ட்ஸுக்குத் தெரியும்.

நரேன் அடிக்கடி ராபர்ட்ஸிடம் கூறுவான்:

"ராபர்ட்ஸ்! நாம் இருவரும் உண்மை நண்பர்கள்தான். ஆனால் அரசியலில் இருவரும் விரோதிகள். அரசியல் அரங்கிலே சந்திக்கும்போது நட்பைக் கவனிக்கக் கூடாது. கடமையைத்தான் நிறைவேற்ற வேண்டும்."

ஆனால் கடமை பின்வரும் முறையிலே நிறைவேறும் என்று ராபர்ட்ஸ் நினைக்கவேயில்லை.

* * *

ஏப்ரல் 13-ம் தேதி. காங்கிரஸ் தீவிரவாதிகள் தீர்மானித்தபடி, ஜாலியன்வாலாபாக் மைதானத்திலே மக்கள் கூட ஆரம்பித்தனர்.

நரேன் பாபு தன் நண்பர்களுடன் கூட்டத்துக்குச் சென்றான். ஆனால் அவன் நினைத்தபடி மைதானத்தைச் சுற்றி ராணுவத்தினர் யாரையும் காணவில்லை. 'ஒருவேளை ராபர்ட்ஸ் பொய் சொல்லி யிருப்பானோ!......கூட்டத்தை நிறுத்துவதற்காக வெள்ளையர் பரப்பிய வதந்தி

யாக இருக்குமோ!' என்று மனத்துக்குள் நினைத்தான் நரேன்.

நேரம் சென்றது. மக்கள் கூடிக்கொண்டே இருந்தார்கள். மைதானம் முழுவதும் கூட்டம் நிரம்பி விட்டது.


சற்று நேரத்துக்கெல்லாம் தலைவர்கள் பேசத் தொடங்கினர். நரேன் பாபுவும் சிறிய சொற்பொழிவொன்றை ஆற்றிவிட்டுப் பிரசங்க மேடையை விட்டு இறங்கி மக்களோடு ஒன்று சேர்ந்து கொண்டு மற்றவர்கள் பேசுவதைக் கேட்கத் தலைப்பட்டான். மக்கள் அமைதியாக இருந்தனர்.

திடீரென்று 'டுமீல்' என்ற துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது. மக்கள் அனைவரும் திரும்பிச் சுற்றும் முற்றும் நோக்கினர்.

மைதானத்தில் நுழையும் சிறு வாயிலிலே, வரிசையாகப் பல ராணுவ வீரர்கள் நின்று கொண்டிருந்தனர்.

மக்கள் இதைக் கண்டு திகைத்தனர். அவர்கள் திகைப்பை அதிக நேரம் நீடித்து வைக்க விரும்பவில்லை ராணுவ அதிகாரி ஜெனரல் ஓ. டையர். இடுப்பிலே கையை வைத்துக் கொண்டு நின்ற அவன் 'கட கட' வென்று நகைத்தவாறு, "அழியுங்கள்; செத்து ஒழியுங்கள்! உங்கள் பாரத மாதா உங்களை அழைக்கிறாள்" என்றான்.

மறுவிநாடி பிரிட்டிஷ் ராணுவ வீரர்களின் துப்பாக்கிகள் கனலைக் கக்கின! மக்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. எங்கும் ஓரே ஓலம்தான்! இறந்து கொண்டிருக்கும் குற்றமற்ற பாரத மக்களின் கூக்குரல்கள்தான்!



"என்ன ஸார் இது? துணி இல்லாமல் குடையை எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டீங்க?"

"என்ன செய்யறது? துணியோடு இருந்தால் குடையை இரவல் கேட்டு வாங்கிக் கொண்டு போய் விடுகிறார்களே!"

வெளியே செல்லும் வழியை ராணுவத்தினர் அடைத்துக் கொண்டிருந்ததால் மக்கள் மதிற் சுவரை நோக்கி ஓடினர். மிகுந்த சிரமப்பட்டு அதன் மீது ஏறினர்.

ஆனால், சுவருக்கு மறுபுறம் மதிலைச் சுற்றி நிறுத்தி வைக்கப் பட்டிருந்த வீரர்களின் துப்பாக்கிக் குண்டுகள் சுவரேறியவர்களின் உயிரற்ற உடல்களையே தாக்கிப் பூமியில் விழச் செய்தன!

நரேனின் மனம் கொதித்தது. 'மேடைக்கு அருகே நடப்பட்டிருந்த கொடியை நோக்கி ஓடினான். அதைத் தன் பலம் மிகுந்த கையிலே எடுத்துக் கொண்டான்.

"என் நினைவு இருக்கும் வரை என் நாட்டுக் கொடியைக் காப்பேன்" என்று சபதம் செய்து கொண்டான். மைதானத்தின் பிரதான வாயிலை நோக்கி நிமிர்ந்து நடந்தான்!

மைதானமெல்லாம் ஓரே பிணக் குவியல்! அவலக் குரல்!

அவைகளுக்கு நடுவே கொடியைக் கையிலே தாங்கிக் கொண்டு, வீர நடை போட்டுக் கொண்டு கம்பீரமாக வரும் நரேன் பாபுவைக் கண்டதும் அவன் இரத்தம் கொதித்தது.

தன் பக்கத்திலிருந்தவனை நோக்கி, "அவனைச் சுடு! சுடு!!" என்று கத்தினான்.

கட்டளை யிடப்பட்டவன் திரும்பி ஜெனரலை நோக்கினான்; முன்னேறி வரும் நரேனைப் பார்த்தான். அவன் கால்கள் நடுங்கின!

ஆம்! அது ராபர்ட்ஸ்தான்!

ராபர்ட்ஸ் கண்களை மூடிக் கொண்டு துப்பாக்கியின் குதிரையைத் தட்டி விட்டான். பாய்ந்து சென்ற குண்டு, நரேனின் தொடையைத் துளைத்துக் கொண்டு சென்றது!

"பாரத மாதாவுக்கு ஜே!" என்று கோஷமிட்டான் நரேன். அவன் கைகள் கொடியை இறுகப் பிடித்தன. சுருண்டு கீழே இரத்த வெள்ளத்தில் விழுந்தான் அவன். அவனுடைய குரல் மைதான மதில்களிலே எதிரொலித்தது. ஜெனரலின் மனத்தையே ஒரு குலுக்குக் குலுக்கியதென்று கூறலாம்.

பஞ்சாபில் நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பிறகு ஆறு மாதங்கள் வேகமாக ஓடிவிட்டன.

அமிர்தசரஸ் வீதி யொன்றில் சென்று கொண்டிருந்தான் ஒருவன். ஒரு காலில்லாத நொண்டியாக இருந்த அவன் இரண்டு கட்டைகளைக் கைகளுக்கிடையே இடுக்கிக் கொண்டு நடந்து கொண்டிருந்தான். ஆமாம்; சுதந்திர வீரன் நரேன் பாபுதான்!

நரேனின் குழுவில், படுகொலையில் உயிர் தப்பியவர் இருவரே தான். நரேன்பாபு ஒருவன்; மற்றொருவன் பகவன் சிங்.

பகவன்சிங் கையில் ஏற்பட்ட சாதாரணக் காயத்தோடு தப்பி விட்டான். குற்றுயிராகக் கிடந்த நரேனும் உயிர் பிழைத்து விட்டான். ஆனால் குண்டு பாய்ந்ததன் காரணமாகத் தன் காலை இழக்க வேண்டியதாயிற்று.

நரேன் பாபு படுக்கையில் கிடந்தபோது, அவனைப் பார்ப்பதற்காகப் பகவன்சிங் தினமும் வருவான். அப்போதெல்லாம் வெள்ளை

யரைப் பழி வாங்குவதைப் பற்றியேதான் இருக்கும் அவன் பேச்சு.

"உன் மனம் எப்போது திருத்தி அஹிம்ஸா முறையில் செல்லுமோ, அப்போது தான் எனக்கு நிம்மதி" என்று அடிக்கடி நரேன் சொல்லுவது வழக்கமாகி விட்டது. ஆனால் பகவன் ஸிங்கின் மனம் சிறிதும் மாறவேயில்லை.

ஒருநாள் ராபர்ட்ஸைப் பற்றிப் பேச்சு வந்தபோது, தன்னைச் சுட்டவன் ராபர்ட்ஸ்தான் என்பதை நரேன் தெரிவித்து விட்டான். வந்தது ஆபத்து! பகவன்ஸிங் சினத்தால் பொங்கினான். வெள்ளையரிடம் அவன் கொண்டிருந்த துவேஷம் முழுவதும் ராபர்ட்ஸ் ஒருவன் மீதே திரும்பியது.

பஞ்சாப் படுகொலை நடந்து மாதங்கள் ஆறு உருண்டோடியும் ஊரில் பூரண அமைதி நிலவவில்லை. ஆங்காங்கே சிறு சிறு கலகங்கள் நடந்து கொண்டுதான் இருந்தன. அவைகளுக்குக் காரணமானவர்களில் பகவன்ஸிங்கும் ஒருவன்.

அன்று நரேனுக்கு மனசு சரியாகவே இல்லை. ஏனோ அன்று முழுவதும் பகவன்சிங் அவன் வீட்டுக்கு வரவேயில்லை. 'ரணம்தான் ஆறிவிட்டதே, வெளியே சென்று வருவோம்' என்று தீர்மானித்து, ஆதாரக் கட்டைகளை எடுத்துக் கொண்டு, தெருவில் இறங்கிப் பகவன்ஸிங்கின் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான் நரேன்.

பகவன்ஸிங்கின் வீட்டு வராந்தாவில் உட்கார்ந்திருந்தவன், "என்ன பாபு! நடந்தா வந்தீர்கள்!" என்று மரியாதையோடு கேட்டான். "ஆம்" என்று விடையளித்த நரேன், "பகவன் இருக்கிறானா!" என்று கேட்டான்.

"இருக்கிறார்!"

"என்ன செய்கிறான்!"

அதற்கு மற்றவன் பதில் கூறவில்லை; தயங்கினான். நரேன் நேராகப் பகவன்ஸிங்கின் அறையை நோக்கி நடந்தான். மற்றவன் அவனைத் தடுக்கவில்லை.

ஸிங்கின் அறையை நெருங்கிய போது உள்ளேயிருந்து பகவனுடைய கோபக்குரல் கேட்டது. நரேன் கதவைத் தட்டினான்.

கதவு திறந்தது!

உள்ளே காலை எடுத்து வைத்த நரேன்பாபு மின்சாரத்தால் தாக்குண்டவன் போலத் திகைத்து நின்றான்.

அங்கே —

அறையிலே பகவன் ஸிங்கின் கோஷ்டியினர் நாலைந்து பேர் அமர்ந்திருந்தனர்.

அறையின் மூலையிலே இருந்த ஒரு இரும்புக் கம்பத்தோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தான் ஒருவன். அவன் முகத்தைக் கண்டு திடுக்கிட்டான் நரேன். அது ராபர்ட்ஸ்!

ராபர்ட்ஸின் எதிரே குரூரமான பார்வையோடு நின்று கொண்டிருந்தான் பகவன் ஸிங். அவன் கையிலே இருந்த நீண்ட துப்பாக்கியின் முனையிலே பளபள வென்று மின்னிக் கொண்டிருந்தது ஒரு கத்தி!

அறையினுள்ளே நரேன் பாபு நுழைந்ததும் திகைத்து நின்றான் பகவன் ஸிங்.

"நரேன்! கால் ரணத்தோடு ஏன் இங்கே வந்தாய்!" என்று கேட்டான் பகவன்ஸிங்.

"அதிருக்கட்டும். இதெல்லாம் என்ன! ஏன் ராபர்ட்ஸைக் கட்டிப் போட்டாய்!"

"உன் காலை இழக்கச் செய்த குற்றத்துக்குப் பழி வாங்குவதற்காக!"


ராபர்ட்ஸ் திரும்பி நரேனின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தான். அதிலே, 'நான் உன்னை ஒரு முறை பேராபத்திலே யிருந்து காப்பாற்றினேனே, இப்போது என்னை இந்த ஆபத்திலிருந்து காக்கமாட்டாயா!' என்ற பொருள் தேங்கி இருந்தது!

"பகவன்! இவனைக் கொல்வதனால் என்ன பலன் இருக்கிறது!"

"பல இந்திய மக்களின் உயிர் பிழைக்கும், நரேன்!" என்றான் அவன்.

"ஸிங்! இவன் ஒருவன்தானா இந்தியர்களை அழித்தான்!......வேண்டாம், இந்தப் பாபச்

குட்டித் தமாஷ்!



டாக்டர்:—உங்க காது வைத்தியம் செய்ததற்கு நாற்பது ரூபாய் பீஸ். என்ன காது கேட்கிறதா! பத்து ரூபாய் கொடுக்கிறீங்களே!

நோயாளி:— நீங்க சொன்னதிலே கால் திட்டம் கேட்டது.

* * *



"அந்த மாட்டுக்கு என்ன வயது!"

"இரண்டு."

"எப்படிச் சொன்னீங்க!"

"அதன் கொம்பைப் பார்த்துச் சொன்னேன்!"

"ஆமாம்! அதற்குத்தான் இரண்டு கொம்பு இருக்கே!"

* * *

"அமெரிக்காவைப் பத்தி ரொம்ப ஓசத்தியா பேசிக்கிறானே, வாஸ்தவமா!"

"என்ன ஓசத்தி! நாம் தின்க ஒரு குட்டிச் சுவர் கிடையாதாம்."



செயல். இவனை மன்னித்து விடுவோம். அதற்காக ஆங்கிலேயர்களுடன் கட்டிப்பட வேண்டுமென்று நான் கூறவில்லை. அவர்களை அஹிம்ஸா முறையிலே எதிர்ப்போம்......"

"நரேன்! நீ பேசாமலிரு. இந்திய மக்களின் இரத்தத்தைச் சிந்தவைத்த இந்தப் பாவிகளைச் சும்மா விடக்கூடாது. பழிக்குப் பழி வாங்கியே தீரவேண்டும். இல்லாவிட்டால் என் மனம் சாந்தி அடையாது."

"ஆம்! இவனைத் தண்டித்தே ஆக வேண்டும்!" என்று அவனது தோழர்களும் அவனைப் பின்பற்றிக் கோஷித்தனர்.

நரேனின் இதமொழிகள் அவர்கள் மனத்தைக் கரைக்க வில்லை. அவர்கள் பிடிவாதமாகவே இருந்தனர்.

நரேன் மெதுவாக நொண்டி நொண்டிக் கொண்டு பகவன்ஸிங்கின் அருகில் சென்று நின்று கொண்டான்.

"ஸிங்! நண்பனென்னும் முறையில் உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன், இவனைக் கட்ட விழ்த்து விட்டுவிடு."

"நரேன்!" என்று கர்ஜித்தபடி பகவன் கையிலிருந்த துப்பாக்கியோடு பொருத்தப் பட்டிருந்த துப்பாக்கிச் சனியனை ஓங்கினான். ஓங்கிய கத்தி பாயுமுன் நரேன், ஸிங்குக்கும் ராபர்ட்ஸுக்கும் இடையே பாய்ந்தான்.

"ஆ!" வென்று அலறியபடியே கீழே விழுந்து, உருண்டு உருண்டு துடியாய்த் துடித்தான் நரேன்பாபு.

"ஐயோ!" என்று கத்தினான் பகவன்ஸிங்.

பகவன் ஸிங்கும், அவன் நண்பர்களும் நரேன் பாபுவை ஓடிவந்து தூக்கினர்; படுக்கையில் கிடத்தினர்.

கண்களைத் திறந்து பகவன் ஸிங்கை நோக்கினான் நரேன். அவன் கண்கள் அபாரமான அஹிம்சை ஒளியை வீசின.

"நரேன்! இனி நான் ஆயுதங்களைத் தொடவும் மாட்டேன், நரேன்! எனக்கு அறிவு வந்து விட்டது" என்று கதறினான் பகவன்ஸிங்.


மரணத்தின் வாசலிலே நிற்கும் நரேன் பாபு பகவன் ஸிங்கைப் பார்த்துப் புன்னகை புரிந்தான். தன்னுடைய இரண்டு கைகளாலும் பகவன் ஸிங்கைப் பற்றி அணைத்துக் கொண்டான். அஹிம்சையின் வெற்றியைக் கண்டு அவன் உள்ளம் பெருமிதமடைந்தது.

"பகவன்! இப்போதுதான் எனக்கு நிம்மதியாக இருக்கிறது! என்னுடைய நோக்கங்கள் நிறைவேறி விட்டன. உன்னைத் திருத்த வேண்டுமென்று நினைத்தேன்; மற்றவர்களுடைய உயிருக்காக என் உயிரைத் தியாகம் செய்ய வேண்டும் என்று நினைத்தேன். என்னுடைய இந்த மரணத்தினால் இரண்டுமே நிறைவேறி விட்டன. அஹிம்ஸா முறையிலே போரிடு. நிச்சயம் இன்னும் சில நாட்களிலே நம் பாரத அன்னை விடுதலை பெறுவாள்...... நான் வருகிறேன்......!"

நரேன் பாபு அமரன் ஆனான். அவன் ஆத்மா நிம்மதி பெற்றது.

புதிய சுதேசிச் சாதனம்

பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்நாட்டில் அஹிம்சை முறையில் பணியாற்றக் கூடிய மார்க்கம் நூல் நூற்பதுதான் என்பது மகாத்மா காந்தியடிகளின் சித்தாந்தம். மக்கள் வீண் பொழுது போக்கும் நேரத்தில் நூல் நூற்று வந்தால் அதனால் நாட்டின் உற்பத்திப்பெருக்கு அதிகமாகிச் சுபிட்சம் ஏற்படும் என்று மாநிலத்தை வாழ்விக்க வந்த மகான் காந்திஜி கருதினார். மக்களின் குண நலத்தையே இது உயர்த்தும் என்றார்.



நூல் நூற்க ராட்டை, தக்ளி இவை மக்களுக்குப் பயன் படுகின்றன. தக்ளியில் புது விதமான இயந்திரத்தைப் பொருத்தி எளிய முறையில் அதிக நூல் நூற்கும் சாதனையைச் செய்திருக்கிறார் திரு எஸ். நாராயணய்யர். இந்தப் புது விதத் தக்ளியினால் தரமுள்ள நன்கு முறுக்கப்பட்ட நூலைத் தயாரிக்கலாம். இந்தப் புதிய சுதேசித் தக்ளியைத் திருவனந்தபுரத்தில் 1956-ம் வருஷம் ஜனவரி, பெப்ருவரியில் நடந்த அகில இந்தியப் பொருட் காட்சியில் இயக்கிக் காண்பித்தார். இவ்வதிசய சாதனம் அருமையாக நூல்நூற்பதைக் கண்டு களித்த பல பிரமுகர்களும் அதைப் பாராட்டி வியந்திருக்கிறார்கள். திருவனந்தபுரம் ராஜப்பிரமுக், அகில இந்திய காதி, குடிசைத் தொழில் காரிய தரிசிகள், தொழில் இலாகா டைரக்டர்கள், நிதி இலாகா காரியதரிசிகள் முதலியோரும் இந்நூல் நூற்கும் தக்ளியைப் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள். இந்த அற்புதசுதேசித் தக்ளியை உருவாக்கிய வீரவநல்லூர் திரு நாராயணய்யரைப் பாராட்டுகிறோம். இதைப் பெருமளவில் அகில இந்திய காதி ஸ்தாபனத்தின் துணையோடு தயார் செய்து மக்களுக்கு வழங்கிக் காந்தி மகானின் கனவை நனவாக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.



மதிப்பில் சிறந்த ப்ளேட் எதுவென்று நீங்கள் எளிதில் சொல்லமுடியும்

ஒரு ப்ளேடின் மேன்மையை நிர்ணயிக்க உறுதியான பரீக்ஷை அதைக்கொண்டு க்ஷவரம் செய்துகொள்வதுதான்! ஒரு சிறந்த, கூர்மையான ப்ளேட் சுக க்ஷவரத்தை ஒரு தடவையல்ல, அநேகம் தடவைகள் அளிக்கிறது.

ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகளை ஏது தயாரிப்பான வேறெந்த ப்ளேடுகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். உங்கள் முகத்தில் எவ்வளவு சுலபமாக வழுக்கிக்கொண்டு செல்லுகிறது. அதற்குப் பிறகு எவ்வளவு மழுமழுப்பாக உங்கள் முகம் ஆகிறது என்பதையும் கவனியுங்கள். அதே போல் அதன் கூர்மை எவ்வளவு காலத்திற்கு நீடித்திருக்கிறதென்றும் பாருங்கள். நாளுக்கு நாள் அதன் சுக க்ஷவரத்தை அநுபவிப்பீர்கள்.


ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகள் எவ்வளவு நேர்த்தியாக இருக்கின்றன என்பதை, அவைகளைக்கொண்டு க்ஷவரம் செய்துகொண்டு பாருங்கள். இதில் தவறுதலுக்கு இடமேற்படுவதில்லை. ஸெவன் ஓ'க்ளாக்தான் உங்கள் பணத்திற்குப் பெறுமானம் கொடுக்கிறது என்று தெரிந்துகொள்ளுவீர்கள்.

7 o'clock



BLADES

ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகள்



கருணை உள்ளம்

பார்வதி

சென்ற மார்ச் மாதம் ராஜாஜி அவர்கள் ரேடியோவில் சொல்லிய 'மடியில் மூட்டை' என்ற கதையைக் கேட்டேன். அந்தக் கதை என்னை ஆனந்தத்தில் ஆழ்த்தியதும் அல்லாமல் என் சிந்தனையையும் தூண்டிற்று. அதன் பயனாக என் மனத்தில் பிறந்த கதையை இங்கு எழுதத் துணிகிறேன்.

மாசி மாதம். சிவராத்திரி தினம். காளஹஸ்தி சிவன் கோவிலில் குழுமியிருந்தனர் ஜனங்கள். ஸ்ரீ காளத்தி நாதருக்கு அபிஷேகமும், அர்ச்சனைகளும் தீபாராதனையும் இடைவிடாமல் நடந்து கொண்டிருந்தன. ஜனங்கள் மெய் மறந்து பகவானைத் தரிசித்து மகிழ்ந்த வண்ணம் இருந்தனர்.

ஒருதூண். அதன் ஓரத்தில் கோடியில் ஒரு கிழவர், சுமார் எண்பது வயது இருக்கும், நின்று கொண்டிருந்தார். தலைமேல் கை கூப்பிக் கண்கள் மூடி தியானம் செய்து கொண்டிருந்தார். அவர் கண்கள்வழியாகத் தாரை தாரையாகக் கண்ணீர் பெருகிக் கொண்டேயிருந்தது.

அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் ரகுநாதன். அவனுக்குச் சுவாமி தரிசனத்துக்கு மேல் கிழவர் தரிசனம் என்னமோ மனத்தைக் கிளர்ச்சி செய்தது. சற்று நேரம் மௌனம். பிறகு கிழவர் கண்கள் திறந்தன. மெல்லிய குரலில் அவர் சொன்னது ரகுநாதன் காதில் நன்றாக விழுந்தது.

''ஈசா, உன்னைப் புரிந்து கொள்ள எனக்கு, இந்த மதிமூடனுக்கு, இவ்வளவு நாட்கள் ஆயினவே! கருணாமூர்த்தியாகிய நீ என்மேல் காட்டிய அளவு கடந்த அன்பைத் தவறாக அல்லவோ நினைத்து விட்டேன்! அப்பனே, ஐயனே, என்னே உன் கருணை! என் மனம் நிர்மலமாயிற்று. இந்தப் பாபியை ஏற்றுக் கொள்வாய்!'' என்று உணர்ச்சியோடு கூறினார்.

மறுபடியும் மடை திறந்தாற் போலக் கண்களில் ஜலம் பெருகிற்று.

ரகுநாதனுடைய அவாவும் பெருகிற்று. அந்தக் கிழவரை அணுகி அவர் கதையைத் தெரிந்து கொண்டால் தான் தன்னுடைய மனத்திற்கும் சாந்தி கிடைக்கும் என்று தோன்றிற்று.

மெதுவாக அவரை அணுகினான். அச்சமயம் அர்ச்சகர் விபூதிப் பிரசாதம் எல்லோருக்கும் வழங்கினார். ரகுநாதனும் கிழவரும் தரித்துக் கொண்டார்கள். கிழவர் கண்கள் ஈரமாகவே யிருந்தன.

''பெரியவரே, மன்னிக்க வேண்டும். கண்ணப்ப நாயனருக்கு மூன்றே நாட்களில் மோக்ஷம் கொடுத்த எம்பிரானைப் பார்த்தால் மெய் சிலிர்க்கத்தான் செய்கிறது. ஆயினும் நீங்கள் இப்படி உருகுவதில் ஏதோ காரணம் இருக்கிறது. நான் அறிந்து கொள்ளலாமோ? எனக்கும் பெரியவராகிய உங்கள் கதையைக் கேட்பதினால் கொஞ்சம் நன்மை ஏற்படும் என்று தோன்றுகிறது. நான் ஒரு பாபி'' என்றான் ரகுநாதன் உணர்ச்சியுடன்.


''யாரப்பா நீ? என் விருத்தாந்தத்தைத் தெரிந்துகொள்ள ஆவலுள்ளவனாயிருக்கிறாய்? எனக்கு இனி என்ன? அந்த ஆண்டவன் திருவடியைச் சேரக் காத்துக் கொண்டிருக்கிறேன். அவன் மனம் எப்பொழுது இரங்குமோ!''

''இல்லை, இல்லை, உங்கள் வாழ்க்கையில் ஒரு ரகசியம் இருக்கிறது. அதை எனக்குச் சொல்லத்தான் வேண்டும்'' என்று கூறிப் பெரியவரை நமஸ்கரித்தான் ரகுநாதன்.

பெரியவர் சொன்னார்: ''சரி, அப்படியானால் கேள். நீ பயனடைந்தால் நல்லது.''

இருவரும் மண்டபத்தில் ஒரு மூலையில் போய் உட்கார்ந்தார்கள்.

கிழவர் ஆரம்பித்தார்: ''நான் ஒரு காலத்தில் வெகு நல்ல ஸ்திதியில் இருந்தேன். செல்வமும் செருக்கும் என்னை அடிமையாக்கிக் கொண்டிருந்த காலம். எனக்கு மிஞ்சியவன் இல்லை என்ற ஆணவத்தில் மூழ்கியிருந்தேன். திங்கட்கிழமை தோறும் கோவிலுக்குச் சென்று சிவபிரானுக்கு அர்ச்சனை செய்வேன். விக்னேச்வரருக்குத் தேங்காய் உடைப்பேன். எதற்கு? என்னை எல்லோரும் பக்தசிரோமணி என்று நினைப்பதற்காக. தேங்காயை உடைத்தேனே தவிர என் ஆணவத்தை



தமிழில் சிறுகதைகள் எழுதி வரும் ஸ்ரீமதி கே. ஆர். கௌசல்யாவுக்கும், காவிரிப்பட்டினம் போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு டி. பி. சீனிவாசன் அவர்களின் குமாரன் சிரஞ்சீவி சம்பத்துக்கும் சென்ற மார்ச்சு மாதம் சென்னையில் மிகவும் சிறப்பாகத் திருமணம் நடந்தது. வாழ்க மணமக்கள்!

உடைக்கவேயில்லை. என்னுடைய போலி பக்தியைக் கண்டு கடவுள் ஏமாந்து எனக்கு என்ன பிரதி செய்து விடப் போகிறார் என்று பார்த்தேன்!

உரிய காலத்தில் வாய்த்த மனைவியின் மேல் அளவிலாப் பாசம் வைத்தேன். நாலு பிள்ளைகளுக்கும் இரண்டு பெண்களுக்கும் தகப்பனானேன். ஐசுவரிய சம்பத்துடன் சந்தான சம்பத்தும் எனக்கு அளித்த கடவுள் ஒன்றே ஒன்று அளிக்கவில்லை. அது தான் என் மனைவி மக்களின் அன்பு. என் மனைவி நான் வைத்த பாசத்தை ஏற்றுக் கொண்டு திரும்ப எனக்கு அன்பை அளிக்க மறுத்து விட்டாள். என் குழந்தைகள் மேல் செல்வத்தையும் அன்பையும் சொரிந்தேன். என்னால் எவ்வளவு பயன் அடைய முடிந்ததோ, அவ்வளவையும் அடைந்தார்கள். ஆனால் ஆச்சரியம்! தகப்பனார் என்ற மரியாதை, விசுவாசம் கொஞ்சம் கூட இல்லாமல் வெவ்வேறு வழியாகச் சென்றனர்.

கடைசியாக மனைவியும் என்னைத் தனியே விட்டு விட்டுப் பிறந்த வீட்டுக்குப் போய் விட்டாள்.

நண்பர்களும் உறவினர்களும் எல்லாரும் என் செல்வத்தைப் பங்கு போட்டுக் கொண்டார்களே ஒழிய யாரும் என் மேல் உண்மையான அன்பை வைக்கவில்லை.

மனம் சலித்து எம்பெருமானை, கருணை மூர்த்தியைக் கடிந்தேன். நிந்தித்தேன். சதா வைது கொண்டேயிருந்தேன். கடவுள் என் மேல் கருணை காட்டவில்லை என்றெண்ணி வருத்தப்பட்டேன். நாளடைவில் என் போலி பக்தி நிஜ பக்தியாக மாறியது. நன்றி கெட்ட மனிதர்களிடம் வைக்கும் அன்பை அப்படியே ஆண்டவனிடம் திருப்பினேன். எனினும் மனம் கலங்கியே நின்றது. புரியாமல் திகைத்தேன், நொந்தேன், வாடினேன்.

ஆனால் இன்று புரிந்து விட்டது! என் மைந்தா! புரிந்து விட்டது! என் ஆண்டவன் செயல் புரிந்து விட்டது!"

ரகுநாதனுக்கு 'மைந்தா' வென்று கிழவர் தன்னைக் கூப்பிட்டது ஆனந்தமாயிருந்தது. கிழவர் திடீர் என்று ஆவேசம் வந்தவர் போல் கூத்தாடினார்.

அவனுக்கு விஷயம் ஒன்றும் புரியவில்லை. அவரைக் கட்டி அணைத்து உட்கார வைத்து, "என்ன, தயவு செய்து சொல்ல வேண்டும்" என்று கெஞ்சினான்.

"என் மூட்டையை அல்லவோ பகவான் பிடுங்கித் தூரப் போட்டு விட்டான். என்னைத் தன்னிடம் அழைத்துக் கொள்வதற்கு வழியல்லவோ செய்து விட்டான் என்னப்பன்! ஆகா, என் ஈசன்!"

ரகுநாதன் கிழவரைப் பார்த்தான். அவனுக்கு வியப்பும் ஆச்சரியமும் தாங்கவில்லை. கிழவருக்குப் பைத்தியமோ வென்று நினைக்க ஆரம்பித்து விட்டான்.

"என் மனைவி, மக்கள், நண்பர்கள், உறவினர் என் பாசத்தைத் திருப்பிக் கொடுத்து என் அன்பை வளர்த்திருந்தார்களேயானால் நான் கடவுளை நினைப்பதேது? என் மூட்டையைக் கீழே வைப்பதேது? என் விருப்பத்துக்குப் பதில் அவர்கள் வெறுப்பைத் தந்ததனால்தான் இன்றைக்கு நான் என் பாசம், பற்றுதல் என்ற மூட்டையை விட்டெறிந்து விட்டு அவனை அடையச் செல்லும் ஓடத்துக்குக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

"ஆகா! என்ன கருணை! என்னப்பனுக்கு என்ன கருணை!" என்று சொல்லிக் கொண்டே சாய்ந்து விட்டார் கிழவர்.

அவ்வளவுதான். பிறகு அவருக்கு நினைவே வரவில்லை. கோவிலில் கும்பல் கூடி விட்டது. ரகுநாதனுக்குக் கண்ணீரை அடக்க முடியவில்லை. கிழவரை மற்றவர்கள் உதவியைக்கொண்டு தான் இறங்கியிருந்த வீட்டுக்கு எடுத்துச் சென்றான். அன்றிரவே அவர் ஞாபகம் வராமலேயே சிவராத்திரி புண்ணிய தினத்திலே சிவலோகப் பிராப்தி யடைந்தார்.

ரகுநாதன் உண்மையில் அவருடைய நன்றிகெட்ட மைந்தர்களில் ஒருவன். அது அவனுக்குத்தெரியாமலேயே தகப்பனாருடைய ஈமக் கடன்களைச் செய்தான். பாப நிவர்த்தி யடைந்தான்.


கோடை காலத்தில்
கசகசப்பின்றி புத்துணர்ச்சியுடன் இருக்க
Two by Two
FULL VOILE
ராஜ்ரேகா
ராஜ்லக்ஷ்மி
MAFATLAL FINE MILLS
NAVSARI
தி மாபட்லால்



சாம்பசிவ முதலியாருடைய தகப்பனார் சங்கர முதலியார் பண்பாட்டிலும் படிப்பிலும் மிக ருசி கண்டவர். மகனையும் தன்னைப் போலவே ஆகும்படி வளர்த்தார். சங்கர முதலியார் இறந்துவிட்ட பின்னே சாம்பசிவ முதலியாருக்கு விவாகமாயிற்று. மாமன் மகள்தான். வயது 23.

நன்றாகப் பாடத் தெரியாத மனைவி இருந்துஎன்ன. இல்லாமலிருந்தாலென்ன என்று சாம்பசிவ முதலியார் மனைவியைக் கும்பகோணத்துக்குப் பக்கத்தில் மீனாட்சிபுரம் கிராமத்தில் ஒரு புகழ் பெற்ற பாடகியிடம் பாடக் கற்றுக் கொள்ள அனுப்பினார். கூட உதவிக்கு ஒரு வேலைக்காரியையும் அனுப்பினார். "அவசரப்பட வேண்டாம்! நன்றாகக் கற்றபின்வா" என்று சொல்லியனுப்பினார்.

ஆறு வருஷங்கள் கற்றாள். சுமாராகக் கற்றுக் கொண்டதாகத் தெரிந்தது. ஆயினும் முதலியாருக்கு நம்பிக்கையில்லை. பார்த்து வரச் சொல்லித் தம் காரியஸ்தரை அனுப்பினார். அவர் போய்க் கௌரியம்மை பாடுவதைக் கேட்டுத் திரும்பி வந்தார்.

"சுருதி சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் தாளம் கொஞ்சம் திருப்தியில்லை" என்றார் காரியஸ்தர். இவர் நல்ல பெரிய வித்துவான்கள் பாடியதைக் கேட்டவர். இவருடைய ஆட்சேபணையைச் சாம்பசிவ முதலியார் தள்ளி விடுவதற்கில்லை.

"அப்படியானால் திருவாரூர் சுப்பய்யரிடம் சிட்சை செய்து கொண்டு வரச் சொல்லவும்" என்று சொல்லிக் காரியஸ்தரை அனுப்பினார்.

அப்படியே திருவாரூரில் நான்கு வருஷம் இருந்தான் கௌரியம்மை. சுப்பய்யரே முதலியாருக்குச் சொல்லியனுப்பினார்: "கௌரியம்மைக்குத் தாளஞானம் நன்றாக இருக்கிறது. இன்னும் இரண்டு வருஷமிருந்தால் ஒரு குறையுமில்லாமல் பாடுவாள். ஆனால் அவசரப்படுகிறாள். என்ன செய்வது?"

இதைக் கேட்டதும் முதலியார், "அவசரப்பட்டு என்ன பிரயோசனம்? சங்கீதமும் அவசரமும் சேராது. இன்னும் இரண்டு வருஷம் சிட்சை அடைந்தே திரும்பலாம்" என்று சொல்லியனுப்பினார்.

இரண்டு வருஷம் முடிந்த பின்—பழைய காரியஸ்தர் இறந்து விட்டார். புதுக் காரியஸ்தர், பெரிய தமிழ்ப் புலவருடைய குமாரர், ஆனந்தரங்கம் பிள்ளையை அனுப்பினார். "போய்ப் பார்த்து விட்டு வாரும், எவ்வளவு தூரம் படிப்பு நடந்திருக்கிறது என்பதை தாட்சணியமின்றிச் சோதித்து வாரும்" என்று சொல்லியனுப்பினார்.

அவரும் போய்த் திரும்பி வந்தார். "சங்கீதத்தைப் பற்றி ஒரு குறையுமில்லை எந்த வித்துவானும் அம்மாளுக்குச் சமானமாக மாட்டார். ஆனால் தமிழ்ச் சொற்கள்



சரியான உச்சரிப்பில்லை. கொஞ்சம் தெலுங்கு சப்தமாக இருக்கிறது. இந்தக் குறையும் தீர்ந்தால் நல்லதாகும்" என்றார்.

"சந்தேகமென்ன? சங்கீதம் எவ்வளவு குற்றமற்றதாக இருந்தாலும் சாகித்தியத்தில் இலக்கணமோ உச்சரிப்போ தவறு ஏற்பட்டால் சகிக்க முடியுமா? இதற்கு என்ன செய்ய?" என்றார் சாம்பசிவ முதலியார்.

ஆனந்தரங்கம் பிள்ளை, "இதற்கு ஒரு கஷ்டமும் இல்லை. யாழ்ப்பாணத்தில் சுப்பிரமணிய நாவலர் இருக்கிறார்கள். எப்பேர்ப்பட்ட குற்றங்களையும் திருத்தி விடுவார்" என்றார்.

யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டாள். அவ்விடம் இரண்டு ஆண்டுகள் தொல்காப்பியமும் நன்னூலும் மிகக் கவனமாகப் படித்துத் தேறின பிறகு ஊருக்குக் கௌரியம்மையார் திரும்பி வந்தார்கள்.

முதலியாருடைய ஆரோக்கியத்தில் இதற்குள் கொஞ்சம் குறை ஏற்பட்டு இரண்டு சித்த வைத்தியர்கள் பார்த்து வந்தார்கள். அவர்கள் கொடுத்து வந்த மருந்துகளின் சூட்டினால் சில கஷ்டங்கள் தோன்றின. அதன் பேரில் நெல்லைக்குச் சென்று அவ்விடம் ஆஸ்பத்திரி மருந்து பார்த்தார். "வயது ஐம்பது ஆனபடியால் குணமடைவது கஷ்டம். பாஷாண மருந்துகளின் வேலை இது. சித்த வைத்தியத்தில் ரொம்ப ஆபத்து" என்றார் சீமையில் படித்துத் திரும்பி வந்த டாக்டர் கோவிந்த பிள்ளை.

கௌரியம்மை ஊருக்குத் திரும்பியதாக அறிந்ததும் முதலியாரும், "சரி, நான் ஊருக்குப் போகிறேன். ஆண்டவன் இட்ட வழி" என்று டாக்டரிடம் விடைபெற்றுக் கொண்டு திரும்பினார்.

முதலியாருக்குக் கௌரியம்மையை அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. அம்மையாரும் புருஷனைப் பார்த்து, "இவரா என் அத்தான்?" என்று கொஞ்ச நேரம் சந்தேகித்தாள்.

பாட்டை நிறுத்தி விட்டுப் புருஷனுக்கு சிசுருஷை செய்ய முற்பட்டாள். ஆறு மாதத்திற்குள் முதலியாருக்கு உடம்பு தானாக மருந்தில்லாமல் சொஸ்தமாகி விட்டது. இருவரும் சந்தோஷமாக இருந்தார்கள். கற்றுக் கொண்டு வந்த பாட்டாவது தொல்காப்பியமாவது முதலியாரும் கேட்க வில்லை; கௌரியம்மையும் பிரஸ்தாபிக்க வில்லை.


ஒரு பெண் குழந்தை பிறந்தது. மிக்க மகிழ்ச்சியுடன் வள்ளி என்று பெயரிட்டார்கள்.

குழந்தை வள்ளி வளர்ந்தாள்.

பள்ளிக்கூடமே வேண்டாம் என்றார் முதலியார்.

"ஊரெல்லாம் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிறார்களே!" என்று கௌரியம்மையார் வாதாடிப் பார்த்தும் பயனில்லை. முதலியார் ஒரே பிடிவாதமாகப் படிப்பு வேண்டாம் என்று சொல்லி விட்டார். 'நான் பட்டது போதும்' என்று நினைத்தார் போலிருக்கிறது. வள்ளி தப்பினாள்.





பர்மா ரமணி

அழ. வள்ளியப்பா

41. ஆஸ்பத்திரியில் !

அந்த மனிதனுடன் கீழே விழுந்த சுந்தரம் சமாளித்துக் கொண்டு எழுந்தான். எழுந்ததும், கவலையோடு அந்த மனிதனின் அருகிலே சென்றான். அவன் முகத்தை உற்றுப் பார்த்தான். தலையிலிருந்து 'குபு குபு' என்று இரத்தம் வழிந்து கொண்டிருப்பது தெரிந்தது. அத்துடன் அவன் மயக்கம் போட்டுக் கீழே கிடந்தான். அந்தக் காட்சியைக் கண்ட சுந்தரம், 'ஆ!' என்று அலறிப் போய்த் துடித்து விட்டான்.


அப்படி அவன் அலறுவதற்கும், லாரி பிரகாசமான வெளிச்சத்துடன் அருகில் வந்து 'சரக்' என்று நிற்பதற்கும் சரியாக இருந்தது. அதற்குள் முரடர் தலைவனும், அவனுடன் வந்தவர்களும், "ஐயோ! போலீஸ் லாரிபோல் இருக்கிறது!" என்று கூறிக்கொண்டே காட்டுக்குள் ஓடிப்போய் விட்டார்கள்.

ஆனால், அங்கு வந்தது போலீஸ் லாரியல்ல. அது மரம் ஏற்றும் லாரி. லாரி நின்றதும் அதிலிருந்து டிரைவர் கீழே குதித்தான். அவனுடன் நான்கைந்து வேலைக்காரர்களும் கீழே குதித்தார்கள். எல்லோரும் சுந்தரத்தின் அருகே வந்தார்கள். சுந்தரத்தைக் கண்டதும், 'ஆ, சுந்தரம்!' என்று அலறி விட்டான் டிரைவர். மற்றவர்களும், "தம்பி சுந்தரமா!" என்று ஆச்சரியத்தோடு கூறினார்கள். அவர்கள் எல்லோரும் சுந்தரத்தின் அப்பாவிடம் வேலை பார்ப்பவர்கள்தான். லாரியும் சுந்தரம் வீட்டு லாரிதான். அவர்களைக் கண்டதும் சுந்தரத்துக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. கீழே மயக்கமாகக் கிடந்த மனிதனை அவர்களுக்குக் காட்டி, நடந்ததைச் சுருக்கமாகக் கூறினான் சுந்தரம். தன்னைக் காப்பாற்றிய அவனை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டுமென்று துடிதுடிப்போடு கூறினான்.

உடனே, அவர்களில் ஒருவன் பக்கத்தில் இருந்த குளத்துக்கு ஓடிப்போய்த் தண்ணீர் எடுத்து வந்தான். முகத்தில் தண்ணீரைத் தெளித்துப் பார்த்தார்கள். அவன் எழுந்திருக்கவில்லை. அதற்குள் சுந்தரம் தன் சட்டையை இரண்டாகக் கிழித்து அவன் தலையில் காயம் பட்ட இடத்தைச் சுற்றிக் கட்டினான். அந்தக் கட்டையும் மீறி இரத்தம் மேலே வந்து கொண்டிருந்தது.

அதற்கு மேலும் அந்த மனிதனை அங்கே வைத்திருக்க அவர்கள் விரும்பவில்லை. அவனைத் தூக்கி லாரியில் படுக்க வைத்தார்கள். சுந்தரத்தையும் அழைத்துக் கொண்டு நேராக மாந்தலேக்குச் சென்றார்கள். அங்குள்ள ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

டாக்டர் வந்தார். ஏதோ சிகிச்சை செய்து பார்த்தார். அந்த மனிதனின் மூர்ச்சை தெளியவில்லை. சுந்தரத்துக்குப் பயமாக இருந்தது. "என் டாக்டர்,



"என்ன முயலாரே, ஏணியை எடுத்துக் கொண்டு எங்கே புறப்பட்டீங்க?"
"ஒட்டகச்சிவிங்கியின் காதோடு ஒரு ரகசியம் பேசப் போறேன்."

உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லையே!" என்று அடிக்கடி அவன் கேட்டுக் கொண்டேயிருந்தான்.

"நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. தலையில் பலமான அடி. மயக்கம் தெளிய ஊசி போட்டிருக்கிறேன். இன்னும் அரை மணி நேரத்தில் மயக்கம் தெளியலாம்" என்றார் டாக்டர்.

சுந்தரம் அந்த மனிதனின் கட்டிலின் ஓரமாக உட்கார்ந்து கொண்டு, அவனையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆஸ்பத்திரி விளக்கு வெளிச்சத்தில் அவன் முகம் நன்றாகத் தெரிந்தது. கன்னங் கரேலென்று அவன் இருந்தான். தலை பரட்டையாயிருந்தது. தாடியும் மீசையும் அடர்த்தியாக இருந்தன. ஆனாலும், அவை எண்ணெய் கண்டு எத்தனை நாட்கள் ஆகியிருக்குமோ!

இதற்குள் சுந்தரத்துக்குத் துணையாக வேலைக்காரர்களை வைத்து விட்டு, டிரைவர் லாரியை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். நேராக அமரபுராவை நோக்கி அறுபது மைல் வேகத்தில் ஓட்டினான். தனது எஜமானரை, அதாவது சுந்தரத்தின் அப்பாவை அழைத்து வரத்தான் டிரைவர் அவ்வளவு அவசரப்பட்டான்.

அரை மணி நேரம் சென்றது. மயங்கிக் கிடந்த அந்த மனிதன் மெதுவாகக் கண் விழித்தான். கண் விழிப்பைக் கண்டதும், சுந்தரம் மிகவும் ஆவலோடு அவனைப் பார்த்தான்.

"சுந்தரம்!" என்று மிகவும் மெல்லிய குரலில் அழைத்தான் அந்த மனிதன்.

'இவருக்கு நம் பெயர்கூடத் தெரிந்திருக்கிறதே!' என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டே, "இதோ இருக்கிறேன்" என்றான் சுந்தரம்.

"தம்பி, உனக்குக் காயம் எதுவும் இல்லையே!" என்றார்.

"எனக்கு ஒரு சிறு காயம்கூட இல்லை. என் மேல் அடி விழாமல், நீங்கள்தான் எல்லா அடிகளையும் வாங்கிக் கொண்டு விட்டீர்களே! முரடர்கள் இப்படியா அடிப்பது! ஐயோ, என்னால் அல்லவா உங்களுக்கு இந்தக் கஷ்டம்.. இப்போது வலி எப்படி இருக்கிறது?"

"இனி எதைப் பற்றியும் கவலையில்லை. நான் செய்ய வேண்டியதைச் செய்து விட்டேன். சுந்தரம், நான் போலீஸாரிடம் சில விஷயங்கள் சொல்ல வேண்டும். உடனே போலீசார் வருவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா?"

"இதோ டாக்டரிடம் சொல்லி 'போன்' பண்ணச் சொல்கிறேன்" என்று கூறி டாக்டரிடம் விஷயத்தைச் சொன்னான். டாக்டரும் உடனே போலீஸாருக்குத் தகவல் தெரிவித்து அவர்களை வரச் சொன்னார்.

இதற்குள் அந்த மனிதன் சுந்தரத்திடம், "சுந்தரம், ரமணியைப் பார்க்க வேண்டுமே! உடனே அவனைப் பார்க்க வேண்டும்" என்றான்.

"ரமணிதானே! இதோ அழைத்து வரச் சொல்கிறேன்" என்று சுந்தரம் கூறிக் கொண்டிருக்கும் போதே, "சுந்தரம்! சுந்தரம்!" என்று கத்திக் கொண்டே ஆஸ்பத்திரிக்குள் ஓடி வந்தான் ரமணி. அப்படியே சுந்தரத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, கட்டிலில் கிடந்த மனிதனைப் பார்த்தான். பார்த்ததும், "சுந்தரம், இவர்தான் உன்னைக் காப்பாற்றினாரா! ஐயோ! இவர் உடம்பெல்லாம் பலத்த காயமாயிருக்கிறதே!" என்றான்.

"இவர்தான் என்னைக் காப்பாற்றினார். உன்னைக்கூட இவர்தான் காப்பாற்றியிருக்க வேண்டும்" என்று கூறினான் சுந்தரம்.

அப்போது சுந்தரத்தின் அப்பா, அம்மா, சிற்சபேசன், காமாட்சி

அம்மாள், மாலதி எல்லோரும் அங்கே வந்து சேர்ந்து விட்டார்கள். எல்லோரும் ஒரே லாரியில்தான் வந்தார்கள். சுந்தரத்தின் அப்பாவிடம், லாரி டிரைவர் விஷயத்தைச் சொன்னதும் அவர் தன் மனைவியை அழைத்துக் கொண்டு மாந்தலே ஆஸ்பத்திரிக்கு வந்தார். வரும் வழியிலேதான் கிற்சபேசனின் பங்களா இருந்தது. அதனால், அங்கே அவர் லாரியை நிறுத்தி அவர்களையும் அழைத்துக் கொண்டு வந்தார். ரமணிகூட அந்த லாரியில்தான் வந்தான். ஆனால், ஆஸ்பத்திரிக்கு முன்னால் லாரி நின்றதும், எல்லோருக்கும் முன்பாகத் தான் கீழே இறங்கினான். வேகமாக உள்ளே ஓடினான்.

"மணியும் மற்றவர்களும் கட்டிலில் அடிபட்டுக் கிடந்த அந்த மனிதனைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர் யார் என்று உற்றுப் பார்த்தார்கள். அடையாளம் தெரியவில்லை. "முன்பின் தெரியாத இந்த மனிதர் எவ்வளவு பெரிய உதவியைச் செய்திருக்கிறார்! அதற்காக எவ்வளவு கஷ்டப் பட்டிருக்கிறார்!" என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அந்த மனிதன், "தம்பி, ரமணி!" என்று மெதுவான குரலில் அழைத்தான்.

உடனே ரமணி, "இதோ இருக்கிறேன்" என்று கூறி அந்த மனிதனின் முகத்திற்கு நேராகத் தன் முகத்தைக் காட்டிக் கொண்டு நின்றான்.

"ரமணி, நீ சுகமாக இருக்கவேணும். உன் சிநேகிதன் சுந்தரம் சுகமாக இருக்க வேணும். எல்லோரும் சுகமாக இருக்க வேணும்" என்று கூறிக் கொண்டே ரமணியின் கன்னங்கள் இரண்டையும் தன் கைகளால் தடவிக் கொடுத்தான் அந்த மனிதன். அப்போது அவன் குரல் கம்மி யிருந்தது. அரை குறையாகவே வார்த்தைகளும் வெளி வந்தன.

உடனே ரமணி, "ஐயா, எங்களுக்காக நீங்கள் இவ்வளவெல்லாம் கஷ்டப் பட்டிருக்கிறீர்கள். ஆனாலும், நீங்கள் யார் என்பதை நாங்கள் இன்னும் தெரிந்து கொள்ளவில்லையே!" என்று கலக்கத்தோடு கேட்டான்.

"தம்பி, சொல்லத்தான் போகிறேன். இந்தக் கடைசி காலத்திலாவது சொல்லித்தானே ஆகவேண்டும்! அப்போது தான் எனக்கும் நிம்மதி ஏற்படும்" என்றான் அந்த மனிதன்.


அப்போது 'சரக், சரக்' என்ற 'பூட்ஸ்' சத்தத்துடன் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரும், சில போலீஸ்காரர்களும் அங்கே வந்து சேர்ந்தார்கள். அவர்களைக் கண்டதும் கட்டிலில் படுத்திருந்த மனிதன், "ஐயா, நான் இனிப் பிழைக்க மாட்டேன். செத்துப் போவதற்கு முன்னால் உங்களிடம் சில உண்மைகளைக் கூறவேண்டும். அதற்காகவே அழைத்து வரச்சொன்னேன்" என்றான்.

உடனே எல்லோரும் அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதை ஆவலுடன் கேட்கத் தயாரானார்கள்.

"ஐயா, நான் யாரென்பது உங்களுக்குத் தெரிய வேண்டுமானால், முதலில் இந்தத் தாடியையும், மீசையையும் எடுத்தாக வேண்டும்" என்று கூறிவிட்டு, அவன் தன் தாடியையும் மீசையையும் பிடித்துப் பலமாக இழுத்தான். என்ன ஆச்சரியம்! அவை கையோடு வந்து விட்டன! ஆம், பொய்த் தாடி மீசைகளைத்தான் அவன் ஒட்ட வைத்திருக்கிறான்!

தாடியையும் மீசையையும் எடுத்தவுடனே ரமணியும் சுந்தரமும் அவனைப் பார்த்தார்கள். பார்த்ததுமே, "ஆ! சுப்பையாவா! குகையில் இருந்த சுப்பையாவா!" என்று ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.

"ஆம், சுப்பையாதான். அந்த முரட்டுக் கோஷ்டியைச் சேர்ந்த சுப்பையாவே தான்" என்றான் அவன்! (தொடரும்)



FS. 462
முறையான
உடைகள்
அல்லது
சாதாரண
உடைகள்
எதுவாயிருப்பினும்
டாடா 501 ஸ்பெஷல்
அவைகளை
சிறப்பாக
சலவை செய்கிறது
501
SPECIAL SOAP
FOR DELICATE MATERIALS
TATA PRODUCT
சுதேசிப் பொருள்களை
வாங்கி இந்தியத் தொழில்களை ஆதரியுங்கள்.
டாடா ஆயில் மில்ஸ்

குழந்தைகள் மலர்

"வெங்கு"

குழந்தை தத்தித் தடுமாறி நடக்கும் தளர் நடை நமக்கு எவ்வளவு இன்பம் அளிக்கிறது! குழந்தை திக்கித் திணறிப் பேசும் மழலை எவ்வளவு ஆனந்தத்தை ஊட்டுகிறது. அதனால் தான் குறளாசிரியர் குழலையும் யாழையும் விட இன்பம் அளிப்பது குழந்தைகளின் மழலை என்று உண்மையை வன்மையாக அடித்துச் சொல்லி விட்டார்.

அதேபோல் குழந்தைகளின் சித்திரங்கள் அளவு கடந்த இன்பத்தை அளிப்பவையாகும். ஆம், கோணல் மாணலாக ஒரு உருவத்தை வரைகிறது குழந்தை. அந்த உருவத்தை யார் என்று கேட்டால், "எங்கம்மா!" என்று சொல்லும். அதைக் கேட்டு யாரும் கோபமடைவதில்லை. அளவு கடந்த மகிழ்ச்சியே அடைகிறார்கள்.

குழந்தையின் மனத்தில் தன் தாயைப் பரிகசிக்க வேண்டும் என்ற எண்ணம் எள்ளத்தனையும் இல்லை. தன் தாயினிடமுள்ள மாசுமறுவற்ற பரிபூரண அன்பின் காரணமாகத்தான் அந்த உருவத்தை வரையத் துணிகிறது குழந்தை. ஆகவே, அந்தச் சித்திரத்தின் மூலம் குழந்தையின் அன்பின் ஆழத்தைக் கண்டு வியக்கிறோம். தோற்றத்தில் கேலிச் சித்திரம்போலிருந்தாலும் அதன் அடிப்படைக் காரணம் அன்பு என்பது எல்லா மக்களுக்கும் இன்பம் அளிக்கிறது. எந்நாட்டுக் குழந்தையின் சித்திரமும் நமக்கு மகிழ்ச்சியூட்டுவதின் அடிப்படைக் காரணம் இதுவே.

இத்தகைய மகிழ்ச்சியை நீங்கள் பெற வேண்டுமானால் அதிகமாகச் சிரமப்பட வேண்டியதில்லை. '1956ம் வருஷத்திய 'ஷங்கர்ஸ் வீக்லி' குழந்தைகளின் கலை மலர்' ஒன்றை வாங்கிப் பாருங்கள். உலகிலுள்ள 57 நாட்டுக் குழந்தைகளுடன் உறவாடலாம். அவர்களுடைய பாவனை உலகில் எல்லாம் சஞ்சரித்து மகிழலாம். சில குழந்தைகள் தாங்கள் எப்படி யிருக்கிறார்கள் என்பதைச் சித்திரம் மூலம் வரைந்து காட்டியிருக்கிறார்கள். அவற்றைப் பார்க்கப் பார்க்க அக்குழந்தைகள் தங்களைப்பார்த்துச் சிரிக்கும் உயரிய ஹாஸ்ய உணர்ச்சியை அல்லவா பெற்றிருக்கின்றன என்றுவியக்கத் தோன்றுகிறது. ஓர் ஐந்து வயதுக் குழந்தை போலீஸ்காரர் சாலையில் நின்று வண்டி போக்கு வரத்துக்களைக் கட்டுப் படுத்துவதைச் சித்திரித்திருக்கிறது. அதைப் பார்க்கப் பார்க்கச் சிரிப்பு கொப்புளித்துக் கொண்டு வருகிறது.

பதினைந்து வயது ஈரான் தேசக் குழந்தை தங்கள் நாட்டுக் கவிஞனை உமர்கய்யாமின் ஒரு பாடலுக்குச் சித்திர உருவம் கொடுத்திருக்கிறான். அதை இன்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

அப்படியேதான் இம்மலரிலுள்ள சின்னஞ்சிறு கட்டுரைகள் குழந்தைகளின் உள்ளத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன.

பல நாட்டுக் குழந்தைகளின் கதைகளும், பாடல்களும் படிக்கப் படிக்கத் தெவிட்டாத தேனாக இருக்கின்றன.

'விளையும் பயிர் முளையில் தெரியும்' என்பது தமிழில் வழங்கும் ஓர் அரிய பழமொழி. சில குழந்தைகளினிடத்து இயல்பாகவே சித்திரம், சங்கீதம் போன்ற நுண்கலைகளினிடத்து ஆர்வம் இருப்பதைக் காணலாம். ஆனால் அதை வளர்ப்பதற்கு நல்ல வாய்ப்பு இன்றியே நசித்துப் போய் விடுவதையும் காண்கிறோம். அப்படி நசித்துப் போகாமல் வளர்ப்பதற்கு ஷங்கர்ஸ் வீக்லி காரியாலயத்தினர் சென்ற சில ஆண்டுகளாக இத்தகைய சித்திரப் போட்டிகள் நடத்தியும் நூற்றுக் கணக்கான பரிசுகள் வழங்கியும் அரும்பணியாற்றி வருகின்றனர்.

உலகின் பல பாகங்களிலிருக்கும் குழந்தைகளிடமிருந்து வந்துள்ள 35,000 கதை கட்டுரை சித்திரங்களி லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவைகளைக் கொண்டது இம்மலர். மொத்தத்தில் இவ் வருஷத்திய குழந்தைகள் மலர் ஓர் அரிய பொக்கிஷம்.

இன்று உலக நாடுகளிடையே பரஸ்பர அன்பும் நேசமும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற தீவிர உணர்ச்சி நிலவுகிறது. இந்த உணர்ச்சிக்கு நல்ல ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது, "ஷங்கர்ஸ் வீக்லி" பத்திரிகையின் குழந்தைக் கலை மலர்.

கிடைக்குமிடம்: ஷங்கர்ஸ் வீக்லி, ஒடியன் பில்டிங், கன்னாட் பிளேஸ், புதுடில்லி. விலை: ரூ. 5.



பத்து வயதுச் சிறுவன் வரைந்த சித்திரம்

இளவரசி மரியா



2

அரசனுடைய கட்டளையைக் கேட்ட மந்திரி பயந்து போனர். தலையைத் தடவித் தடவி விட்டுக் கொண்டார். ஆம். அதற்கல்லவோ ஆபத்து நேரும் என்று அரசன் மிரட்டியிருக்கிறன்!

ஆனல் மந்திரிக்கோ எவ்வளவு யோசனை செய்தும் ஆண்டிரியை ஒழித்துக் கட்ட வழி புலப்படவே இல்லை. அதனல் பானக் கடைக்குப் போய்ப் பானங்கள் வாங்கிக் குடித்துத் தமது துயரத்தை மறக்கப் பார்த்தார்.

அந்தப் பானக் கடைக்கு வழக்கமாக வரும் ஒரு சோம்பேறி அன்று வந்தான். அவன் "மந்திரியாரே! என்ன ஒருமாதிரி சோகமே உருவமாக உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.


"போடா! போடா! என்னை வந்து இப்போது தொந்தரவு செய்யாதே!" என்று அவன்மீது எரிந்து விழுந்தார் மந்திரி.

"மந்திரியாரே! என்னை இப்படி விரட்டுவதற்குப் பதில் ஏதாகிலும் பானம் வாங்கிக் கொடுத்தால் உங்களைக் கஷ்டத்திலிருந்து விடுவிக்க வழியாகிலும் சொல்லுவேன்!" என்றான்.



மந்திரி அவனுக்குப் பானம் வாங்கிக் கொடுத்துத் தமது கஷ்டங்களைச் சொன்னர்.

அவற்றை யெல்லாம் கேட்ட அவன், "ஆண்



மொழிபெயர்ப்பு:
எஸ். வி. எஸ்.

டிரி நல்லவன், சாது. அவனை ஒழிப்பது கஷ்டமில்லை. ஆனால் அவன் மனைவி ரொம்பவும் கெட்டிக்காரி! அவள் மட்டும் கெட்டிக்காரியாக இல்லையென்றால் வெகு எளிதில் ஆண்டிரியைத் தீர்த்துக் கட்டி விடலாம். இப்பொழுது அவளது கற்பனைக்கும் எட்டாத ஒரு வழி கண்டு பிடிக்க வேண்டும். அவள் சித்தனையைத் திகைக்க வைக்கும்படியான யோசனையாக இருக்க வேண்டும்!.........சரி, நீங்கள் ஸாரிடம் போங்கள். ஆண்டிரியை வரவழைத்து ஸாரின் தந்தை மேலுலகத்தில் எப்படியிருக்கிறார், ஏதாக இருக்கிறார் என்று பார்த்து விட்டு வரும்படி கட்டளையிடச் சொல்லுங்கள். அவன் போவான்! பிறகு திரும்பியே வர மாட்டான்!" என்றான்.

மந்திரி அவனுக்கு நன்றி செலுத்தி விட்டு ஸாரிடம் ஓடினார்!

"நான் ஆண்டிரியை ஒழித்துக் கட்டவழி கண்டு பிடித்து விட்டேன்" என்றார். பிறகு அரசன் என்ன செய்ய வேண்டும் என்பதையும் சொன்னார்.

அரசன் அதைக் கேட்டு அளவு கடந்த திருப்தி அடைந்தான்.

ஆண்டிரிக்குச் சொல்லியனுப்பினான்; ஆண்டிரி வந்தான்.

அரசன் சொன்னான்: "ஆண்டிரி! நீ எனக்கு இதுகாறும் விசுவாசமுள்ள சேவகனாக இருந்து பணி செய்து வந்தாய். உன் விசுவாசத்தையும் வேலைத் திறமையையும் கண்டு நான் அளவுகடந்த மகிழ்ச்சியடைந்துள்ளேன். ஆனால் நீ செய்ய வேண்டிய காரியம் இன்னொன்று இருக்கிறது. என் தந்தை யமலோகத்திலிருக்கிறார். அவர் அங்கு எப்படியிருக்கிறார், என்ன செய்கிறார் என்று நீ பார்த்துவிட்டு வர வேண்டும். இதை நீ செய்ய வேண்டும். செய்ய மறுத்தாயானால் உன் தலையைச் சீவி விடுவேன்!" என்று மிரட்டினான்.

பாவம், ஆண்டிரி! அவன் என்ன செய்வான்? வீட்டுக்குப் போனான். கையைக் கன்னத்தில் வைத்துக் கொண்டு சோகமே உருவமாய் அமர்ந்து விட்டான்.

"ஆண்டிரி! ஏன் சோகமாய் இருக்கிறாய்?" என்று கேட்டாள், அவன் மனைவி இளவரசி மரியா.

ஆண்டிரி ஸார் தனக்குப் பணித்த வேலையைச் சொன்னான்.

"இதற்கா இவ்வளவு வருத்தத்தோடு உட்கார்ந்திருக்கிறீர்கள்? இது அற்ப விஷயமல்லவா? பெரிய வேலை, உண்மையிலேயே கஷ்டமான வேலை இனிமேல் அல்லவா வரப்போகிறது! போங்கள், இப்போதைக்குப் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள். ராத்திரி ஏதாகிலும் யோசனை தட்டுப்படும்" என்று ஆறுதல் கூறினாள்.

மறுநாள் காலை ஆண்டிரி படுக்கையை விட்டு



எழுந்திருந்தான். அவன் மனைவி மரியா ஒரு பின்கோத்துப் பொட்டணமும் ஒரு தங்க மோதிரமும் அவனிடம் கொடுத்தாள். அத்துடன் ஒரு முக்கியமான விஷயமும் சொன்னாள்:


"நீங்கள் இப்பொழுது ஸார் மன்னரிடம் போங்கள். அவரது மதி மந்திரியையும் உங்களுடன் அனுப்பி வைக்கச் சொல்லுங்கள். அப்போது தானே நீங்கள் நிஜமாகவே மேலுலகுக்குப் போனீர்களா இல்லையா என்ற சமாசாரம் அரசனுக்குத் தெரிய முடியும். அதனால் மந்திரியை அழைத்துக் கொண்டு புறப்பட்டதும் இதோ இந்த மோதிரத்தை உருட்டி விடுங்கள். அது உருண்டு உருண்டு போகும்.

நீங்கள் அதைத் தொடர்ந்து போங்கள். ஏனெனில் அது உங்களுக்குச் சரியான வழி காட்டிக் கொண்டு முன்னாலே போகும்" என்றாள் மரியா.

ஆண்டிரி, பிஸ்கோத்துப் பொட்டலங்களையும் மோதிரத்தையும் எடுத்துக் கொண்டு மனைவியிடம் விடைபெற்றுக் கொண்டான். புறப்பட்டான். நேரே அரசனிடம் போய் மந்திரியையும் கூட அனுப்புமாறு கேட்டான்.

மந்திரி தன்னுடன் வர வேண்டியதன் காரணத்தை விளக்கினான். அதைக் கேட்ட மன்னனுக்கு மந்திரியை அவனுடன் அனுப்புவதைத் தவிர வேறு வழி இல்லாமற் போய் விட்டது!

ஆக, இரண்டு பேருமாகப் புறப்பட்டனர். ஆண்டிரி தன் மோதிரத்தை உருட்டி விட்டான். அது வயலிலும் வரப்பிலும் சேற்றிலும் ஆற்றிலும் மலையிலும் மடுவிலும் உருண்டு உருண்டு போய்க் கொண்டேயிருந்தது. ஆண்டிரி அதைப் பின் தொடர்ந்து போனான். மந்திரியோ ஆண்டிரியைத் தொடர்ந்து நடக்க முடியாமல் தள்ளாடித் தடுமாறி நடந்து போனார்.



இப்படி நடந்து நடந்து அவர்களுக்குக் களைப்பு அதிகமாகும்போது கொஞ்சம் பிஸ்கோத்துகளைச் சாப்பிடுவார்கள். மீண்டும் நடக்கத் தொடங்குவார்கள். இப்படி அவர்கள் நடந்து சென்ற தூரத்தை யாரால் கணக்கிட்டுச் சொல்ல முடியும்?

ஒரு நாள் அவர்கள் ஒரு பெரிய இடுகிடு பள்ளத்தை அடைந்தார்கள். இரு மருங்கும் பெரியமலைகள், அங்கே மோதிரம் நின்றது. மோதிரம் நகராமற் போகவே அவர்களும் மேலே நடக்கவில்லை. களைப்பு அதிகமாக இருந்தது. 'சரி, சாப்பிடுவோம்' என்று உட்கார்ந்தார்கள். அப்போது அவர்கள் கண்ட காட்சியை என்னவென்பது? அவர்கள் கண்களை அவர்களால் நம்பவே முடியவில்லை. ஏன்?

ஸார் மன்னனின் தந்தை ஒரு பெரிய பார வண்டியை இழுக்க முடியாமல் இழுத்துக் கொண்டிருந்தார். அது விறகு ஏற்றப்பட்ட பார வண்டி. அவர் இழுக்க முடியாமல் திணறிய போது அவருக்கு இருபுறமும் நின்று கொண்டிருந்த யமகிங்கரர்கள் தங்கள் சாட்டைகளினால் பளீர் பளீர் என்று அடித்து, அவரை விரட்டிக் கொண்டிருந்தார்கள்.

இந்தக் காட்சியைப் பார்த்த ஆண்டிரி மந்திரியிடம் "காலஞ் சென்ற மன்னர் தானே அவர்?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்றான் மந்திரி.

உடனே அந்த யமகிங்கரர்களிடம் ஆண்டிரி, "ஐயா, வண்டியிழுக்கிற அந்த மனிதரைக் கொஞ்சம் அனுப்புங்களேன். அவரோடு சற்றுப் பேச வேண்டியிருக்கிறது. பேசி விட்டு அனுப்புகிறேன்" என்றான்.

அதற்கு அந்தக் கிங்கரர்கள், "ஏன், ஐயா! நீ பேசி முடிக்கிற வரைக்கும் எங்களைக் காத்திருக்கச் சொல்லுகிறாயா? அல்லது அவருக்குப் பதிலாக அந்தப் பார வண்டியை எங்களை இழுக்கச் சொல்லுகிறாயா?" என்றார்கள்.

"கோபிக்காதீர்கள்! இதோ இங்கே இன்னொரு மனிதர் இருக்கிறார். இவர் அவருடைய ஸ்தானத்தை எடுத்துக் கொள்வார்" என்றான் ஆண்டிரி மந்திரியைச் சுட்டிக்காட்டி.

கிங்கரர்கள் இந்த யோசனையை ஒப்புக் கொண்டார்கள். மன்னனை அவிழ்த்து விட்டு மந்திரியை வண்டியில் பூட்டி விரட்டினார்கள். விரட்டினார்கள் என்றால் எப்படி? மந்திரியோ குனிந்து குனிந்து வண்டியை இழுக்கப் பார்த்தார். முடியவில்லை. இருவரும் தங்கள் சாட்டைகளினால் விளாசி விரட்டினார்கள்.


ஆண்டிரி, ஸார் அரசனைக் குசலம் விசாரித்தான். "மகாராஜா! சௌக்கியமாய் இருக்கிறீர்களா?" என்று கேட்டான்.


"ஆண்டிரி! நான் இந்த உலகத்தில் படும்பாடு சொல்லி முடியாது. என் மகனிடம் நான் அன்புடன் விசாரித்ததாகச் சொல்லி, இங்கு நான் படும் தொல்லையையும் கூறு. அவனை ஏழைகளைத் துன்புறுத்த வேண்டாம் என்று சொல்லு. இல்லாவிடில் அவனும் இங்கு வந்து என் மாதிரி மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கும்" என்றார்.

அவர்கள் பேசி முடியவில்லை. அதற்குள் கிங்கரர்கள் காலி வண்டியுடன் திரும்பி வந்தார்கள். ஆண்டிரி அரசனிடம் விடைபெற்றுக் கொண்டான்.


மந்திரி ஆண்டிரியோடு வந்து சேர்ந்து கொண்டான். தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பினார்கள். ஊரில் ஆண்டிரியைப் பார்த்ததும் ஸார் அளவு கடந்த கோபம் அடைந்தான்.

"அடே, திரும்ப வந்து விட்டாயா? உனக்கு என்ன அவ்வளவு துணிச்சல்?" என்றான் ஸார்.





உங்கள் வீட்டிலுள்ள செம்பு, பித்தளையினால் செய்யப்பட்ட ஒவ்வொரு சாமானையும் சுத்தமாகவும் தகுந்த பளபளப்புடனும் வைத்திருப்பது அவசியம். இந்தப் பளபளப்புத்தான் அவைகளின் அழகை அதிகப்படுத்துகிறது. அவைகளுக்கு இந்த பிராஸோ பாலிஷினால் பளபளப்பை, மிகச் சிக்கனமாகவும் சுலபமாகவும், விரைவாகவும் நீங்கள் அளிக்க முடியும். உங்கள் வீட்டில் இருக்கும் நிரந்தர பிராஸோ பளபளப்பைக் கண்டு நீங்கள் பெருமைப்படுவீர்கள்
BRASSO
BRASSO
பிராஸோ
மெட்டல் பாலிஷ்
திரவம் அல்லது பேஸ்ட்



தசை
வலியா ?
நோபெயின்
வலியை வேகமாக
நிவர்த்திக்கிறது
NOPAIN
சுகாதாரமான சீல்வைத்த
டியூபுகளில்
ஒரு கல்கத்தா கெமிகல் தயாரிப்பு
தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை–1

"மகாராஜா! அடுத்த உலகத்தில் தங்கள் தந்தையைப் பார்த்தேன். அங்கு அவர் படும் கஷ்டம் சொல்லி முடியாது. அவர் தமது மனமார்ந்த அன்பைத் தங்களுக்குத் தெரிவிக்கச் சொன்னார். அத்துடன் பொது மக்களைத் துன்புறுத்த வேண்டாம் என்றும் உங்களுக்குச் சொல்லச் சொன்னார். ஏனெனில் அங்கு வந்தால் தம்மைப் போலவே நீங்களும் கஷ்டப்பட நேரும் என்று அவர் எச்சரிக்கை செய்கிறார்."

இதைக் கேட்டதும் ஸார், "ஆமாம், நீ அடுத்த உலகுக்குப் போயிருந்தாய் என்பது என்ன நிச்சயம்? என் தந்தையைக் கண்ட விஷயத்தை எப்படி நீ நிரூபிக்கப் போகிறாய்?" என்று கேட்டான்.

"இதோ உங்கள் மந்திரியின் முதுகைப் பாருங்கள்! யமலோகத்துக் கிங்கிரர்கள் சாட்டை கொண்டு அடித்த வடுக்கள் இன்னும் இருக்குமே!" என்றான்.

மந்திரி தம் முதுகைக் காண்பித்தார். அதைப் பார்த்து ஆண்டிரி நிச்சயமாக யமலோகம் போய் விட்டு வந்திருக்கிறார்கள் என்று உறுதி செய்து கொண்டான் அரசன்.

இப்படி ஆண்டிரியைத் தொலைக்கவேண்டும் என்று ஆரம்பித்த முயற்சி வீணாயிற்று.

ஆண்டிரி வீட்டுக்குப் போனான்.

* * *

மீண்டும் ஒருநாள் அரசன் மந்திரியை அழைத்தான். "மந்திரி! இந்த ஆண்டிரியை நீ ஒழிக்கவில்லை என்றால், அவ்வளவுதான், நீ தொலைந்தாய்" என்றான்.

மந்திரியின் கவலை முன்னைவிட அதிகமாகிவிட்டது. ஹோட்டலுக்குப் போய்ப் பழையபடி கவலைகளை மறக்கக் கண்டதை வாங்கிச் சாப்பிடத் தொடங்கினார் மந்திரி.

அந்தச் சமயத்தில் அந்தப் பழைய சோம்பேறி அவனிடம் வந்தான்.

"மந்திரியே! ஏன் இப்படிச் சோகமே உருவமாய் இருக்கிறீர்? எனக்கு ஏதாகிலும் வாங்கிக் கொடுங்கள்! உங்களுக்குத் தக்க யோசனை சொல்லுகிறேன்" என்றான்.

மந்திரி அவனுக்கு ஏதோ வாங்கிக் கொடுத்துத் தன் கஷ்டங்களையெல்லாம் விவரமாகச் சொன்னார்.

"இதற்காகக் கவலைப்படாதீர்கள்! நீங்கள் அரசனிடம் போய், ஆண்டிரியை இந்த ஒரு கஷ்டமான காரியம் செய்யும்படி கட்டளையிடச் சொல்லுங்கள். அதை அவன் மட்டுமே செய்ய வேண்டும் என்றும் கட்டளையிடச் சொல்லுங்கள். அதாவது அவன்



ஓடுபவர்:— எல்லோரும் அங்கேயே இருங்கள். ஓடிப் போய் அந்தப் பஸ்ஸை 'மிஸ்' பண்ணிட்டு உடனே வந்து விடுகிறேன், பிறகு பேசலாம்.

நிற்பவர்:—அதை இங்கே நின்றுகொண்டே 'மிஸ்' பண்ணுங்களேன்."

இருபத்தேழு உலகங்கள் கடந்து, முப்பது ராஜ்யங்களுக் கப்பாலுள்ள பயங்கரமாக உறுமும் பூனையைக் கொண்டு வரச் சொல்ல வேண்டும்" என்றான்.

அவ்வளவுதான்; மந்திரி பிய்த்துக் கொண்டு ஓடினார். அரசனிடம் ஆண்டிரியை ஒழித்துக் கட்டத் தான் வழிகண்டு பிடித்து விட்டதாக மிகுந்த எக்களிப்போடு சொன்னார்.

உடனே அரசனும் ஆண்டிரியை அழைத்து வர ஆளை அனுப்பி விட்டான்.

ஆண்டிரி வந்ததும் அரசன், "ஆண்டிரி! நீ எனக்கு ஒரு நல்ல உதவி செய்தாய். இப்பொழுது இன்னொரு பணியாற்ற வேண்டும். இருபத்தேழு உலகங்களையும் முப்பது ராஜ்யங்களையும் கடந்து அவற்றுக்கு அப்பாலுள்ள ராக்ஷஸப் பூனையைக் கொண்டு வர வேண்டும். இதை நீ செய்வாய் என்று நினைக்கிறேன். இல்லையேல் என் வாளை உருவி உன் தலையைச் சீவி விடுவேன்" என்றான்.

ஆண்டிரி தன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். அவன் மனைவியிடம் தனக்கு நேர்ந்துள்ள விபத்தைப்பற்றிச் சொன்னான்.


அவன் கூறியதை யெல்லாம் கேட்ட மரியா, "இது என்ன ஒரு காரியத்தில்

பீசார்த்தியா, கவலைப்படுவதற்கு? மிக அற்ப சமாசாரம் அல்லவா இது! இனிமேல் அல்லவா வரப்போகிறது சாதிக்க முடியாத காரியம்! போய்ப் படுத்துத் தூங்குங்கள். பொழுது விடிந்து பார்த்துக் கொள்ளுவோம். ஏனெனில் ராத்திரி இதற்கு ஏதாகிலும் யோசனை தட்டுப்படும். இரவு தந்திரங்களுக்குத் தாய்!" என்றாள்.

ஆண்டிரி படுக்கப் போனான். இளவரசி இரும்புப் பட்டறைக்குப் போனாள். அங்கு கொல்லர்களிடம் மூன்று இரும்புத் தொப்பிகளும் இரண்டு இரும்பு இடுக்கிகளும் செய்து தரச் சொன்னாள். அவற்றுடன் மூன்று தடிகள், தாமிரம், இரும்பு, தகரம் ஆகிய மூன்று உலோகங்களிலும் செய்து தரும்படி கேட்டுக் கொண்டாள். மறுநாள் விடியற்காலை முதலில் இளவரசி மரியா தான் எழுந்திருந்தாள். பிறகு அவள் தன் கணவன் ஆண்டிரியை எழுப்பினாள். "இதோ மூன்று தொப்பிகள் இரண்டு இடுக்கிகள், மூன்று தடிகள் இருக்கின்றன. இவற்றை எடுத்துக் கொண்டு இருபத்தேழு உலகங்களைக் கடந்து முப்பது ராஜ்யங்களுக்கும் அப்பால் போங்கள். அங்கே அந்த ராக்ஷஸப் பூனை இருக்குமிடத்துக்கு மூன்று காத தூரம் இருக்கும் போதே உங்களுக்கு மயக்கம் மயக்கமாக வரும். தூக்கம் வரும். அப்போது இந்தப் பயங்கரப் பூனை தன் மாய சக்தியை உங்கள் மீது வீசுகிறது என்று உணருங்கள். அதனால் நீங்கள் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அந்த மாய சக்திக்கு உள்ளாகித் தூங்கிப் போய்விடக் கூடாது.

"உங்கள் கைகளை இறுக மார்பின் மீது கட்டிக் கொள்ளுங்கள். கால்களை இழுத்து இழுத்து வையுங்கள். அவசியம் நேர்ந்தால் தரையில் உருண்டு கொண்டாவது போங்கள். ஏனெனில் தூங்கி விட்டீர்களானால் அந்தப் பயங்கரப் பூனை உங்கள் மீது பாய்ந்து கொன்று விடும்!" என்று எச்சரிக்கை செய்தாள்.

இவ்வளவையும் கேட்டுக் கொண்டு ஆண்டிரி தன் மனைவியினிடம் விடைபெற்றுக்கொண்டு போனான்.



* * *

ஆண்டிரி சாதித்த சாதனைகள் பிரமிக்க வைக்கக் கூடியவை. அவற்றையெல்லாம் சொல்ல ரொம்ப நேரம் ஒன்றும் ஆகிவிடாது. ஆனால் அவற்றைச் சாதிக்க எவ்வளவு காலம் ஆயிற்று! அவற்றைக் கற்பனை செய்து பார்ப்பது கூடக் கஷ்டம்.

வில்வித்தை வீரனை ஆண்டிரி இப்படிப் பல உலகங்களையும் காடுகளையும் கடந்து அந்தப் பயங்கர பூனை யிருக்கும் இடத்துக்கு முப்பது காத தூரத்தில் வந்து சேர்ந்தான். அப்போது அவனுக்குக் கண்ணைச் சுழற்றிக் கொண்டு வந்தது. உடனே தன் கையிலிருந்த மூன்று தொப்பிகளைத் தலையில் அணிந்து கொண்டான். கைகளை மார்பில் கட்டிக் கொண்டு நடந்தான். கால்கள் மேலே அடியெடுத்து வைக்க மறுத்தன. எனினும் மிகவும் பிரயாசைப்பட்டு இழுத்து இழுத்து மேலே வைத்து நடந்தான். அப்போதும் முடியாது போல் தோன்றவே, கீழே படுத்து உருண்டு கொண்டே மேலே போனான்.

எப்படியோ சிரமப்பட்டு ஆண்டிரி கண் விழித்துக் கொண்டு ராக்ஷஸப் பூனை யிருக்குமிடத்தை அடைந்தான். ஆம், பூனை ஒரு பெரிய கம்பத்தின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டிருந்தது.

ராக்ஷஸப் பூனை ஆண்டிரியைக் கண்டதும் உறுமியது, கத்தியது. தான் உட்கார்ந்திருந்த உயர்ந்த கம்பத்தினின்று அவன் தலைமீது மிக வேகமாகப் பாய்ந்தது. அது பாய்ந்த வேகத்தில் ஆண்டிரி தலையில் அணிந்திருந்த இரும்புத் தொப்பிகளில் முதல் தொப்பி உடைந்தது. அடுத்தாற்போல் இரண்டாவது தொப்பியையும் உடைத்தெறிந்தது. மூன்றாவது தொப்பியை முறிக்க முயன்றபோது ஆண்டிரி தான் கொண்டுபோயிருந்த இரும்பு இடுக்கியினால் அதன் கழுத்தைப் பற்றிக் கீழே இழுத்துத் தள்ளினான். அதை இரும்புத் தடியினால் ஓங்கி அறைந்தான். பூனைக்கு ஒன்றும் நேரவில்லை. இரும்புத் தடிதான் முறிந்தது. எனவே தாமிரத் தடியைக் கொண்டு அடித்தான். தாமிரத் தடிதான் உடைந்தது. ஆகவே அவன் தகரத் தடியைக் கொண்டு அடித்தான். அது உடையவில்லை. பூனையின் உடலைச் சுற்றிக் கொண்டது. இப்படி அவன் அடித்த சமயத்தில் அந்த ராக்ஷஸப் பூனை வேறு தந்திரத்தில் இறங்கியது. அதாவது அவன் அடிக்க அடிக்க ஆண்டிரிக்கு வனதேவதைகளைப் பற்றியும், பூசாரிகளைப் பற்றியும், பூசாரிகளின் பெண்களைப் பற்றியும் கதைகள் சொல்லி மயக்கப் பார்த்தது. ஆனால் ஆண்டிரியோ அது கூறிய கதைகளில் ஒன்றையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. தன் பலம் கொண்ட மட்டும் தகரத் தடியினால் அடித்துக் கொண்டே யிருந்தான்.

இப்போது ராக்ஷஸப் பூனை தன் சாமர்த்தியமும் சக்தியும் இவனிடம் செல்லாது போலிருக்கிறது என்று தீர்மானித்துப் பேசத் தொடங்கியது. (தொடரும்)

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor : Mi. Pa. Somasundaram


ஓர் அழகு ராணியின் மேனியோடு நீங்களும் விளங்கலாம்!
நாளொரு மேனியாக
வனப்பெய்துங்கள் . . .
ஆம், சோபிக்கும் எழில்
மேனி பெற விரும்பும் உங்
கள் கனவும் நனவாக முடியும்!
குளித்திடும் ஒவ்வொரு தடவை
யும் ரெக்ஸோனா உபயோகியுங்கள்—
அதன் கேடில் சத்து நிறைந்த நுரை
யை எப்போதும் உங்கள் சருமத்தின்
மீது மிருதுவாகத் தேய்த்து, நீரா
டுங்கள். நாளொரு மேனியாக
உங்கள் சருமம் மேலும்
மேலும் மென்மை
மிகுந்த புது வனப்
பெய்தும்.
1955 ரெக்ஸோனா
அழகுப் போட்டி
யின் வெற்றிபெற்ற
அழகியான "மிஸ்.
ரெக்ஸோனா"
Rexona
பெரிய சைஸிலும்
கிடைக்கும்.
. . . இயற்கை
யான வழி
ரெக்ஸோனா
உபயோகித்தல்
கேடில்* கலந்த சோப் இது ஒன்றே.
R.P. 139-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

